
பொட்டேக்காட்

ஆர். விஸ்வநாதன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

பொட்டேக்காட்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்கு கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை ஓர் எழுத்தர் எழுதுகிறார். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுனா மலைச் சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

பொட்டேக்காட்

ஆர். விஸ்வநாதன்

தமிழாக்கம்
சைதை. சுந்தர மூர்த்தி

சாகித்திய அக்காதெமி

S. K. Pottekkatt : Tamil translation by Saidai Sundaram of R. Viswanathan's monogram in English. Sahitya Akademi, (1996) Rs. 25

முதல் பதிப்பு 1998

ISBN-81-7201-428-7

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்

ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

'குணா பில்டிங்' 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053

172 பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் 560 002.

விலை ரூ.25

Typeset by :
MAP Systems, Bangalore - 4.

Printed by :
Vishwalaya, Bangalore

உள்ளடக்கம்

1. ஒரு மனிதரும் அவரது ஊரும்

அந்த ஊரின் குறிப்பிடத் தக்க மனிதராக அவர் இருந்தார். அவரைத் தினமும் பவமணிச்சாலை அல்லது பலகாரக்கடைத் தெருவில் நடந்து செல்வதைக் காணலாம். இல்லாவிட்டால் அவர் தேநீர்க் கடையில் தனது நண்பர்களிடம், தனக்குப் பாலித்தீவில் ஏற்பட்ட — பலதிறப்பட்ட — அனுபவங்களைக் கூறிக்கொண்டிருப்பார். தொடர்ந்து சில நாட்கள் அவர் வராவிட்டால் அவரது நண்பர்கள், அவர் ஆப்பிரிக்கா அல்லது ஐரோப்பா சென்றிருப்பார் என்றும் சில மாதங்கள் கழித்து அவர் திரும்பி வரும் போது பை நிறைய கதைகளும், விகடத் துணுக்குகளும், நிகழ்ச்சி விவரங்களும் கொண்டு வருவார் என்றும் தாங்களாகவே ஊகித்துக் கொள்வார்கள்.

வலுவான இரட்டை நாடிச் சரீரம்; குள்ளமான உருவம்; மாநிறம்; நன்றாக உடை உடுத்திருக்கும் தோற்றம்; அழகாக வாரிவிடப்பட்ட தலை; சுத்தமாக மழிக்கப்பட்ட முகம். இதுதான் அவரது தோற்றம். நண்பர்களைக் கண்டதும் அவர்.முகத்தில் மீசையின் கீழ் குமிழ் சிரிப்பு தோற்றம். கன்ன எலும்புகள் முகத்திற்குச் சட்டமிட்டது

போல் அமைந்து எடுப்பாக இருக்கும். அவர் எப்போதுட விரைவாகவே நடப்பார். அவர் நின்றாலும் மேலும் நடப்பதற்கா வலுவும் தூண்டுதலும் பொதிந்து இருப்பதாக தோன்றும். அந்த ஊ மக்களுக்குப் பரிச்சயமான உருவம். அவர்தான் ''பொட்டேக்காட் அவரது நண்பர்கள் எஸ். கே என்று முதலெழுத்துக்களால் அன்புட அழைப்பார்கள். மற்றவர்களோ அவரை அவர்களது அபிமா கதாசிரியராகவும், ''புள்ளிமான்'' என்ற கற்பனைத் திறனுட உணர்ச்சியும் மிக்க காதல்கதை எழுதிய கலைவாணராகவும், அறிவா சாதாரண மக்களோ அவரை, எளிய மக்களைப் புரிந்து கொண் அவர்களுக்காக உழைக்கும் சமூக சேவகராகவும், மக்களவைக் அவர்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதியாகவும் அறிவார்.

பொட்டேக்காட் அந்த நகரத்துக்கு உரியவர். அந்த நகரமு அவருக்கு உரியது. இந்த பிணைப்பு மிகவும் அந்தரங்கமானது. நகர வளர்ந்தது. அவரும் அந்த வளர்ச்சியை கவனித்தபடி அதனுட வளர்ந்தார்.

கள்ளிக்கோட்டை அரபிக்கடலின் கரையோரத்தில் அமைந் இருக்கும் எழில் மிகு பட்டினம். ஒரு காலத்தில் அது சரித்திரப் புக வாய்ந்ததாக இருந்தது. ஜாமொரின்களின் தலை நகரம் அது போர்த்துகீசிய மாலுமி (வாஸ்கோடகாமா) தனது பயணத் முடித்துக்கொள்ள இடம் தேடிய போது அவரைத் தென்னை மரங்களால் வரவேற்று மகிழ்வித்ததும் அந்த நகரமே! அவருக் முன்பே அராபியர் பலர் அங்கு வந்திருந்தார்கள். பிற்காலத்தி வெளி நாட்டு வர்த்தகர்களுக்குள் போட்டிகளும் இரத்தக்களரிகளும் ஏற்பட்டன. இதற்குப் பிற்பட்ட வரலாறு எல்லாருக்கும் தெரியும். கல்கத்தா, டில்லி முதலிய நகரங்களுக் அந்த போட்டிகள் பரவி, காலனி ஆதிக்க நாடகத்தின் உச்ச கட்டமாக மாறியது. என்றாலும் கள்ளிக்கோட்டை எல்லாவற்றிக்கும் ஆரம்பமாக இருந்தது. ஆனாலும் நினைவு சின்னங்கள், கட்டட இடிபாடுகள் ஆகியவற்றிலிருந்து பெறப்படு கள்ளிக்கோட்டை வரலாறு மிகவும் குறைவாகவே இருக்கிறது அதன் வரலாற்றை நினைவூட்டும் வகையில் அங்கு காணத்தக் கம்பீரமான அரண்மனைகளோ, சிலைகளோ, சமாதிகளோ

பவனிவருகின்றன. நிகழ்காலத்தைக் கொண்டு கடந்த கால வரலாற்றை நிர்ணயிக்க முடியா விட்டாலும், அந்த நகரத்துடன் நீண்ட காலத் தொடர்பு கொண்டவர்கள் தங்கள் மூச்சுக் காற்றில் அந்த ஊரின் பழம்பெருமைகளை உணர்கின்றனர். இந்த உணர்வு நகரத்தில் வசிப்பதாலும் அதனுடன் ஒன்றியதாலும் மட்டும் பெறக்கூடிய ஒன்றாகும்.

பொட்டேக்காட், கள்ளிக்கோட்டையின் குழந்தை. அதுதான் அதன் வரலாற்று ஆர்வத்தை அவருள்ளே எழுப்பிவிட்டது. அவர் சிறுவனாக இருந்த போது மணிக்கணக்காக கடலைக் கவனித்துக்கொண்டு இருப்பார். அலைகள் கடந்த கால நினைவுகளை அவருக்குக் கொண்டுவந்தன. அவை கடந்த கால அராபியர் பற்றியும், போர்த்துக்கீசியர் பற்றியும், மலபார் கடற்கரையைக் காத்து நின்ற குஞ்சால்கள் பற்றியும் அவரிடம் பேசின. இரயில்வே தண்டவாளங்கள் அங்கு வசித்த ஆங்கிலேயக் கலெக்டர்களை அவருக்கு நினைவூட்டின. அங்கு வசித்த ஏறக்குறைய ஒவ்வொரு குடும்பமும், வாய்மொழி வழியாக வந்த பலவிதமான தீரசாகசங்களையும், கதைகளையும் நிரம்பப் பெற்றிருந்தது. பொட்டேக்காட் அவற்றை எல்லாம் பூரணமாக அறிந்திருந்தார். அவற்றினூடே வளர்ந்தார். என்றாலும் அங்கு வியாபாரம் செய்து அதனுடைய தலையெழுத்தையே மாற்றிவிட்ட வெளிநாட்டுக் காரர்களைப் பற்றி அறிந்து கொள்ள அவர் விரும்பினார். இதனால் தானே ஒரு வாஸ்கோட காமாவாக மாற ஆசைப்பட்டார். எனவே சரித்திர ஆராய்ச்சி ஆவலை அவரால் அடக்கவோ, அன்றிக் கட்டுப்படுத்தவோ முடியாததாகிவிட்டது. இந்த உணர்வுதான் அவரை தூரத்தேசங்களான ஆப்பிரிக்கா, ஐரோப்பா, தென்கிழக்கு, ஆசியா முதலிய இடங்களுக்குக் கப்பலில் பிரயாணம் செய்ய வைத்தது. கள்ளிக்கோட்டை அவரிடத்தில் சரித்திர மீதான பிரியத்தை வளர்த்தது மட்டுமின்றி, தொழிலாளர் நலன்களின் மீது உண்மையான சிரத்தையைக் கிளறிவிட்டது. அந்த நகரம் ஆதிகாலத்திலிருந்தே மர வியாபாரத்திற்குச் சிறந்த கேந்திரமாக அமைந்திருந்தது. அங்கே தெற்கில் ஓர் ஆறு அழகாக வளைந்து ஓடுகிறது. மரம் அறுக்கும் தொழிற்சாலைகள் பலவற்றைக் கூட்டமாக அந்த ஆற்றின் கரை மீது இன்றும் காணலாம். இந்த நூற்றாண்டின் முதல் பாதியில் அந்த நகரத்தின்

கணிசமான ஜனத் தொகை மரம் அறுக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களைக் கொண்டதாக இருந்தது. இரண்டு முக்கிய உண்மைகள் அம்மக்களது மனோபாவத்தை உருவாக்கியுள்ளது. முதலாவது, தொழிற்சாலை உரிமையாளர்களிடையே ஏற்படும் பணி ஏற்றத்தாழ்வுகள். அடுத்து அராபியர்களின் தங்கம். இது ஒரு காலத்தில் கட்டுக் கதையாகவும், பின் உண்மையாகவும் இருந்தது. கடத்தி வரப்பட்ட தங்கத்தை விற்பதில் தரகராக இருந்தால் ஒரேநாளில் பெரும் பணக்காரர்களாகி விடலாம் என்று மக்கள் அப்போது நம்பினர். அப்படித் திடீர்ப் பணக்காரர்களானவர் சிலர் சமூகத்தில் உயர்வையும் நல்ல அந்தஸ்தையும் பெற்றதை மக்கள் கண்டனர். இந்தத் தலைகீழ் மாற்றங்களைக்கொண்ட வியாபாரிகளின் வாழ்க்கை, தொழிலாளர்களிடம் அதிக பாதிப்பை ஏற்படுத்தியது. அவ் வியாபாரிகள் சிக்கனமான, திட்டமிட்ட எளிய வாழ்க்கையில் நம்பிக்கையை இழந்து விட்டனர்... எவ்வளவு சம்பாதித்தாலும் கவலை இல்லாமல் செலவழித்துவிட்டு, எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தனர். தங்கள் அறிவைச் செம்மைப்படுத்த முடியாமல், தான் தோன்றித்தனமான வாழ்க்கையை அவர்கள் மேற்கொண்டார்.. என்றாலும் அவர்கள் வாழ்வில் மனிதத்தன்மை இருந்தது. அவர்கள் தங்களுக்குள் மூர்க்கமாகச்சண்டையிட்டுக்கொண்டனர். ஆனால் அவர்கள் மனத் தாங்கல்களை ஓர் கோப்பைத் தேநீர் மூலம் அல்லது கிளாஸ் கள் மூலம் தனித்துக்கொண்டனர். அவர்களது குறும்புத்தனங்கள், பயங்கரவாய்ச்சண்டைகள், இரவு நேரச்சந்திப்புகள், குடித்துவிட்டு நடக்கும் களியாட்டங்கள், ஆகியன பொட்டேக்காட்டை வெகுவாகக் கவர்ந்தன. அவர் அவர்களை நெருங்கிக் கவனித்து, அந்தப் பின்னணியில் தனது கதைகளை எழுதினார். ''ஒரு தெருவின்றெ கத,'' ''ஒரு தேசத்தின்றெ கத'', என்ற அவரது இரண்டு சிறந்த புதினங்கள் அந்தப் பின்னணியில் தோன்றியவையாகும். நாளாவட்டத்தில் கள்ளிக்கோட்டை அதிகமாக மாறிவிட்டது. பொட்டேக்காட்டின். பிள்ளைப் பருவத்தில் தேசம் என்று செல்லப்பட்ட மண்டலப் பிரிவுகள் தங்கள் தனித்தன்மையுடன் முக்கியத்துவம் பெற்றிருந்தன. கிராமச் சூழ்நிலை அவற்றில் காணப்பட்டது. குடும்பங்கள் ஒவ்வொன்றும் தங்களை நெருக்கமாக அறிந்திருந்தன. சாதாரண சின்ன விஷயம்கூடக் காட்டுத் தீயைப்போல் பரவிவிடும். ஒவ்வோர்

ஆணும், பெண்ணும் ஏதாவது ஒரு செல்லப் பெயரையோ பட்டப்பெயரையோ பெற்றிருந்தனர். இந்துக்களும் முஸ்லிம்களும் நட்புடனும், இணக்கத்துடனும் வாழ்ந்தனர். முழுச் சமுதாயமும் நீதிக்குட்பட்ட நடைமுறைச்சட்டங்களைப் பெற்றிருந்தது. ஆனால் கேரள மாநிலம் என்று தோன்றிய பிறகு, கள்ளிக்கோட்டை புறத் தோற்றத்தில் மட்டுமின்றி எல்லாத் துறைகளிலும் விரைவான மாற்றங்களைப் பெற்றது. தேசம் என்று அழைக்கப்பட்ட மண்டலங்கள் தங்கள் தனித்தன்மையை இழந்துவிட்டன. அநேகக் குடும்பங்கள் வெளியேறிவிட்டன. புதியவர்கள் உள்ளே நுழைந்தனர். அக்கம்பக்கத்தாரிடம் இருந்த நெருக்கமான உறவுகள் மறைந்து போயின. தேசம் என்று அமைப்பாயிருந்த ஒருமைப்பாடு போய்விட்டது. பொட்டேக்காட் இந்த மாற்றங்களை உணர்வு பூர்வமாக அறிந்திருந்தார். அவர் அவற்றை மிக்க வருத்தத்துடனும், வீட்டுக்கவலையுடனும் எதிர்நோக்கினார். இம்மாதிரியான புதிய சூழ்நிலையில் தான் வேறுபட்ட மனிதராக இருப்பதை அவர் உணர்ந்தார். "ஒரு தேசத்தின்றெ கதா" என்ற புதினத்தின் இறுதிப்பகுதியில், இம்மாதிரியான ஒருமைப்பாட்டு இழப்பையும், அவரது கவலையையும், துன்ப ஊசலாட்டத்தையும் காணமுடிந்தது.

சங்கரன் குட்டி பொட்டேக்காட் 1913ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் பிறந்தார். அவரது தகப்பனார் குஞ்ஞிராமன் ஒரு புகழ்பெற்ற ஆங்கில ஆசிரியர். சங்கரன் குட்டி தனது இளமைக்கால, கல்வியை இந்து பள்ளியிலும், ஜாமொரின் உயர் நிலைப்பள்ளியிலும் பெற்றார். 1934ல் சென்னைப் பல்கலைக் கழக இன்டர்மீடியட் படிப்பை ஜாமொரின் கல்லூரி மூலம் முடித்தார். அதன் பின் மூன்றாண்டு காலம் தகுதியான வேலை கிடைக்காமல் நாட்களை வீணாகக் கழித்தார். ஆனால் அதே சமயம் போதுமான அளவுக்கு இந்திய இலக்கியங்களையும், மேற்கத்திய இலக்கியங்களையும் படித்தார். இது பிற்காலத்தில் அவர் ஓர் இலக்கிய வாதியாகத் திகழ உதவியாக இருந்தது. 1937 முதல் 1939 வரை இரண்டாண்டு காலம் அவர் கள்ளிக்கோட்டை குஜராத்தி பள்ளியில் ஆசிரியராக இருந்தார். இக்காலத்தில் தான் அவருக்கு 1939-இல் நடந்த திரிபுரா காங்கிரஸ் மாநாட்டில் பங்கு கொள்ளத்

தீவிர ஆர்வம் ஏற்பட்டது. எனவே அவர் பள்ளி| வேலையை விட்டுவிட வேண்டியதாயிற்று. அந்த மாநாட்டிற்குப் பின் அவர் பம்பாய் சென்றார். அங்கு ஒன்றன்பின் ஒன்றாகப் பலதிறப்பட்ட வேலைகளைச் செய்தார். நாளடைவில் அவருக்குத் துணியில் அழுக்குபடாத சொகுசு வேலையில் வெறுப்பு ஏற்படத் தொடங்கியது. 1954-இல் அவர் கேரளத்துக்குத் திரும்பினார். ஓர் எழுத்தராகவோ அதிகாரியாகவோ வேலை பார்க்க அவர் விரும்பவில்லை.மாறாக அவர் ஓர் படைப்பிலைக்கியவாதியாக விரும்பினார். அவர் ஏற்கெனவே சில சிறுகதைகளும், 1930-இல் ''நாடன் பிரேமம்'' (தேசப்பற்று) என்ற புதினம் எழுதி இலக்கியத்துறைக்கு அறிமுகமாகி இருந்தார். எனவே, 1940 இல் முதல்தர மலையாளப் படைப்பாளிகளின் வரிசையில் அவரும் ஒருவராகத் திகழ்ந்தார். அவர் பிரயாண அனுபவங்களைத் தனது கதைகளில் பின்னி அவற்றிற்கு ஒருதனிச்சுவையை ஏற்படுத்தினார். 1945-இல் அவர் கஷ்மீரம் சென்றார். அடுத்த ஆண்டு ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலியவற்றிற்கு பதினெட்டு மாத கால நீண்ட பயணத்தை மேற்கொண்டார்.'' காப்பிரிகளுடே நாட்டில்'' (நீக்ரோக்களின் நாட்டில்) '' இன்னத்தே யூரோப் '' (இன்றைய ஐரோப்பா) என்ற இரண்டு மலையாள நூல்களை வெளியிட்டார். இதனால் அவர் மலையாளத்தில் பயணக்கட்டுரை எழுத்தாளர் வரிசையில் முதலிடம் பெற்றார்.

1952-ஆம் ஆண்டு அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அந்த ஆண்டில் தான் அவர் ஜெயவல்லி என்ற மங்கையை மணந்து கள்ளிக்கோட்டையில் புதியாராஎன்ற இடத்தில் தனது இல்லறத்தை தொடங்கினார். அதே ஆண்டு தனது மனைவியுடன் இலங்கை, மலேசியா, இந்தோனேஷியா முதலிய நாடுகளுக்குச் சென்றார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஃபின்லாந்து, செக்கோஸ்லோவாக்கியா, ருஷ்யா போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. திரும்பி வந்ததும், தலைச்சேரித் தொகுதியிலிருந்து மக்களவைக்கான தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் தோல்வியுற்றார். என்றாலும் அவர் நம்பிக்கை இழக்கவில்லை. மீண்டும் 1962-இல் போட்டியிட்டுத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

அவரது மணவாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியதாக இருந்தது. ஜெயவல்லி, இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் ஆகியோருக்குத் தாயானார். ஆனால் 1980-இல் அவளது திடீர் மறைவு அவரது வாழ்க்கையில் ஒரு சூன்யத்தை ஏற்படுத்திவிட்டது. அதன் பிறகு பழைய மகிழ்ச்சியான மனிதராக அவர் இல்லை. அவரது உடல் நலம் சீரழிந்தது. சில புத்தகங்களை வெளியிடுவதற்கான திட்டங்களை வைத்திருந்தார். அவற்றில் ஒரு புதினம் அடங்கும். என்றாலும் இலக்கியப் படைப்புகளில் தம் மனதைப் பதிய வைக்க அவரால் முடியவில்லை. 1982 ஜூலையில் அவரைப் பாரிசவாத நோய் பற்றியது. மருத்துவமனைவாசியானார். அதே ஆண்டு ஆகஸ்டு ஆறாம் நாள் அவர் அமரர் ஆனார்.

தமது கற்பனா பாத்திரங்களைப் போலவே அவரும் ஒரு சுவாரசியமான மனிதர். அவரது கொள்கைகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை நெறிகள் ஆகியன வியக்கத்தக்க முரண்பாடுகளைக் கொண்டவையாக இருந்தன. வாழ்க்கையில் அவர் இக்கரைக்கும் அக்கரைக்குமாக அலைந்து கொண்டிருந்தபோதிலும், தன் மனைவி மக்களுடன் சேர்ந்து வாழ்வதான அமைதியும் திருப்தியும் பெற்றிருந்தார். சில பழக்கவழக்கங்களில் அவர் மிக எச்சரிக்கையுடன் இருந்தார். தினமும் காலையில் முகச்சவரம் செய்துகொண்டு குளிக்காவிட்டால் அவருக்கு அன்றைய பொழுது ஓடாது. முகச்சவரம் செய்துகொண்டதும் பிளேடின் உறைமீது அன்றைய தேதியைக் குறிப்பார். வெளிவந்த அவரது கதைகள், புதினங்கள், பற்றிய விமர்சனங்கள் தனது குறிப்புகளுடன் கோப்புகளில் ஏற்றி வைப்பார். முடிக்கப்பட்ட தனது எழுத்தோவியங்களைத் தனது அழகிய கையெழுத்தால் எழுதி அவற்றைப் பதிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு அனுப்புவார். எழுதுவதற்காகப் பல நிற மை நிரப்பப்பட்ட பேனாக்களை அவர் வைத்திருப்பார். தலைப்புகளை அழகான எழுத்தில் இரண்டு அல்லது மூன்று நிறங்களில் எழுதுவார். இப்படி முறைப்படி செய்யும் அவர் சில சமயங்களில் உள்ளுணர்வின் தூண்டுதலின் படி நடப்பதும் உண்டு. ஒரு முறை கள்ளிக்கோட்டை செல்ல பஸ் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்த அவர் ''திருவண்ணா

ஒன்றை கண்டார். அந்த ஊரின் பெயர் அவரைக் கவர்ந்தது. அந்த ஊர் எப்படி இருக்கும் என்ற அடங்கா ஆசை அவருக்கு ஏற்பட்டது. அவ்வளவுதான். அவர் அந்த பஸ்ஸில் ஏறிவிட்டார்!

சுகமில்லாமல் இருந்தாலொழிய காலையில் நடக்கும் வழக்கத்தை அவர் விடுவதில்லை. சந்துகள், சாக்கடைக் கால்வாய்கள், ஜனநெருக்கமான தெருக்கள் என்ற பாகுபாடு பாராமல் அவர் நடப்பார். ஒவ்வொரு நாள் காலையிலும் ஒரு நண்பரின் வீட்டிற்கு தனது காலை நடைப்பயணத்தின் போது அவர் செல்வார். இதனால் அவர் தனது நண்பர்களின் தொடர்பைத் தக்க வைத்துக் கொண்டார். இம்மாதிரியான காலைநடைப் பயணங்கள் அவரது கதைகளுக்கு ஏற்ற கருப்பொருள்கள் உருவாக்கித்தரும் நல்ல தருணங்களாக இருந்தன.

பொட்டேக்காட் தனது தூய்மையான எளிய நடைமுறைகளைத் தனக்குத்தானே வகுத்துக்கொண்டார். ஒரு படுக்கை விரிப்பு, காலணிகள், ஒரு சீப்பு, வாசனைப் பவுடர் அகியவற்றை அவர் தனது கறுப்புப் பையில் எப்பொழுதும் வைத்திருப்பார். ஏதாவது விடுதியில்தங்கினாலும், அவர் தனது படுக்கை விரிப்பையே பயன்படுத்திக் கொள்வார். இப்படி அவர் கடுமையான சுகாதார பழக்க வழக்கங்களை கடைப்பிடித்தாலும் தனது நண்பர்களுடன் உலகத்தின் மிக அசுத்தமான இடங்களுக்கும் செல்லக்கூடியவர். பொட்டேக்காட் ஒரு பணக்காரர் அல்ல. என்றாலும் அவருக்கு அளிக்கப்பட்ட அலங்காரமான பதவிகளை அவர் மறுத்துவிட்டார். அவர் ஒரு பத்திரிகை எழுத்தாளராகவே இருந்தார். அதனால் கிடைத்த மிதமான வருமானம், அவரது பிரயாணச் செலவுகளுக்கும், குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும் போதுமானதாக இருந்தது.

பொட்டேக்காட் ஏறக்குறைய அறுபது நூல்கள் வெளியிட்டுள்ளார். அவற்றில் பத்து புதினங்கள், இருபத்திநான்கு சிறுகதைத் தொகுப்புகள், மூன்று கவிதைத் தொகுதிகள், பதினெட்டு பிரயாண நூல்கள் (தற்போது மூன்று பெரும் திரட்டுகளில்

கிடைக்கின்றன.) நான்கு நாடகங்கள், ஒரு கட்டுரைத்தொகுதி, இரண்டு சுய ஞாபகார்த்த நூல்கள் ஆகியவை அடங்கும்.

அவர் அநேக பரிசுகள் பெற்றிருக்கிறார். ''யவனிகக்குப் பின்னில்'' (திரைக்குப் பின்னால்) என்ற சிறுகதைத் தொகுப்புக்கும், ''விஷகன்யகா'' என்ற புதினத்துக்கும் சென்னை அரசாங்கப் பரிசைப் பெற்றார். 1962-இல் ''ஒரு தெருவின்றெ கத'' (ஒரு தெருவின் கதை) என்ற நூலுக்கு கேரள சாகித்திய அகாடெமி பரிசும், ''ஒரு தேசத்தின்றே கத'' (ஒரு வட்டாரத்தின் கதை) என்ற நூலுக்கு 1972-இல் மத்திய சாகித்திய அக்காதெமி பரிசும், 1981-இல் ஞானபீட பரிசும் கிடைத்தன. கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகம் அவருக்கு 1981-இல் கௌரவ முனைவர் பட்டத்தை அளித்துப் பாராட்டியது.

அவர் பல கலாச்சார அமைப்புகளின் நிர்வாகப் பதவிகளை வகித்தார். சிறிது காலம் மலபார் கேந்திர கலா சமிதி , சாகித்திய பிரவர்த்தக சஉறகரண சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும், கேரள சாகித்திய அக்காதெமியின் உபதலைவராகவும், கேந்திர சாகித்திய அக்காதெமியின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

பொட்டேக்காட்டின் நூல்கள் ஆங்கிலம், ரஷ்யமொழி, ஜெர்மனி மொழி, இத்தாலிய மொழி, செக்கோஸ்லோவாக்கிய மொழி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள முக்கிய மொழிகளிலும் அவரது படைப்புகள் மொழி பெயர்க்கபட்டுள்ளன. 1971-இல் மிலன் நகரத்திலிருந்து இத்தாலிய மொழியில் வெளியிடப்பட்ட ''உலகத்தின் சிறந்த சிறுகதைகள்'' என்ற தொகுப்பில் இவரது ''பிராந்த்தன் நாய'' (வெறிநாய்) என்ற கதை இடம் பெற்றுள்ளது. இவரது பதினொன்று சிறுகதைகளின் தொகுப்பொன்று மொழிபெயர்க்கப்பட்டு, இரண்டே வாரத்தில் லட்சம் பிரதிகள் விற்றுப்போயின.

கள்ளிக்கோட்டை தனது நூலாசிரியரை அன்புடனும் நன்றியுடனும் நினைக்கிறது. அங்குள்ள ஒரு தெரு அவர் பெயரால் அழைக்கப்படுகிறது. அண்மையில் அவர் பெயர் கொண்ட பூங்கா

ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொட்டேக்காட் நினைவுக்குழு ஆண்டுதோறும் அவரது படைப்புகளை பல கோணங்களில் ஆய இலக்கிய சொற்பொழிவுகளை நடத்துகிறது. புனைவு ஆய்வு மையம் ஒன்று அவரது நினைவாக அமைக்கப்பட இருக்கிறது. ஆனாலும் ஓர் எழுத்தாளனுக்கு அவனது படைப்புகளன்றி வேறு நினைவுச் சின்னங்கள் இருக்க முடியாது. அவரது படைப்புகளை ஆராய்ந்து விளக்கம் தருவதைவிட எதிர்காலத் தலைமுறையினர் வேறு பெருமை சேர்க்க முடியாது. அடுத்துவரும் பக்கங்கள் அவரது படைப்புகளின் பெருமையை அறிய உதவும் ஆரம்பக் குறிப்பேடுகளாகும்.

2. எதிர்பாரா முடிவுகளும் திருப்பங்களும் சிறுகதைகள்

பொட்டேக்காட் சிறுகதை எழுத்தாளராக இருந்த காலம் சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாகும். அவரது முதல் கதையான ''ராஜநீதி'' 1928ல் அச்சிடப்பட்டது. அது முதல் இறக்கும் வரையிலும் (1982) எழுதுவதை அவர் விடவில்லை. ஆனாலும் கடைசி சில ஆண்டுகளில் அவரது எழுத்துப்பணி அவ்வளவு வளமாக இல்லை. 1960 முதல் 1980 வரை மலையாளப் புதினங்களில் அடிப்படை மாறுதல்கள் ஏற்பட்டன. புதிய அலை உருவெடுக்க ஆரம்பித்து. மேற்கத்திய புதுநோக்க எழுத்தாளர்களான காஃப்கா, ஜாய்ஸ், வர்ஜினியா உல்ஃப், ஹெம்மிங்வே, ஃபாக்னர் போன்றோரின் உத்திகள் மலையாளத்துப் புதிய எழுத்தாளர்களைக் கவர்ந்தன. ஆனால் பொட்டேக்காட் இந்த மாற்றங்களைப் புறக்கணித்தார். புது உத்திகளைப் பரிசோதனை செய்ய அவர் முயலவில்லை. தன்னுடைய சொந்த உத்திகளில் தளராத நம்பிக்கைகொண்டு அவர் எழுதினார். அவர் உரூப், பஷீர், தகழி முதலிய ஆரம்ப சிறுகதை எழுத்தாளர்கள் காலத்தைச் சேர்ந்தவர். அவர்கள் எல்லாரும் சமூகக் கொள்கைகள், கட்டுப்பாடுகள் முதலியவற்றில் தங்களுக்கென்று தனித்தனியே கொள்கைகளை வகுத்துக் கொண்டவர்கள். புதினங்களில் தோன்றிய புதிய உத்திகள்

அவர்களைக் கவரவில்லை. பொட்டேக்காட் விஷயத்தில் இது மிகவும் பொருந்தும். சிறுகதை என்பது திடீர் என்று தோன்றும் மனோநிலையை விளக்கும் சாதனம் என்று அவர் கொள்ளவில்லை. அவர் ஒரு பாடலாசிரியராக இருந்த போதிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எழுந்த உணர்வின் வயப்பட்ட விரிவாக்கமாக அவரது கதைகள் இருந்ததில்லை. காஃப்கா, கான்ராட், டி.எச்.லாரன்ஸ், போன்றோர்கள் கையாண்ட குறியீடுகள், உருவகங்கள் போன்ற முறைகளையும், 'நனவோடை' உத்திகளையும் அவர் தமது கதைகளில் புகுத்தியதில்லை. பொட்டேக்காட்டுக்கு சிறுகதை என்றால் கதையம்சம் தான் முக்கியம். மற்றவை எல்லாம் துணை முறைகள்தாம். அவை கதையில் கருவை வலுவாக்கவும், புரியவைக்கவும் உபயோகப்படும் உத்திகளாவன என்பது அவரது கருத்து.

பொட்டேக்காட் கதைச் சம்பவங்களை மர்மமாக, மனதை உறையவைக்கும் விதமாகப் பின்னுவதில் கைதேர்ந்தவர். அவர் கதை சொல்லும் கலையை அறிந்தவர். மலையாள எழுத்தாளர்கள் யாரும் இந்தத் திறமையைப் பெற்றிருக்கவில்லை. அவர் ஒரு காஃப்கா ஆகவோ, ஜாய்ஸ் ஆகவோ அன்றி ஃபாக்னர் ஆகவோ விரும்பவில்லை. அவரது முறைகள் அலக்சாந்தர் டூமாஸ், மாப்பசான், சாமர்சாட் மாம், ஓ ஹென்றி, ஆகியோரின் முறைகளை ஒத்திருந்தன. கதையின் கருப்பொருள் வியப்பு அம்சம் கொண்டிருப்பது, கதையின் நாடகத் தன்மையை உயர்த்திக் காட்டுவதான பூடகமான நிகழ்ச்சிகள் கதைப்பொருளுக்கு ஒத்திசைவான பின்னணி அல்லது பின்புலம்| யதார்த்தத்திற்கும் கற்பனைக்கும் இடைப்பட்டுப் பொருந்துவதான மொழிநடை- இவைதாம் பொட்டேக்காட் கதைகளில் காணப்படும்\ சிறப்புக் கூறுகள். கதையில் கதையின் கருப்பொருள்தான் முக்கிய இடம் பெறும். மற்றபடி பிற உத்திகள் எல்லாம் அரிஸ்டாட்டிலின் ''பெரிபெடியா'' (கதையின் நிலை திடீரெனதலைகீழாக மாறுதல்) முறையாகவோ அல்லது ஓ ஹென்றியின் திடீர்த் திருப்பங்களாகவோ இருக்கும். இந்தத் திடீர்த் திருப்பங்கள் வாசகரை அதிர்ச்சிக்குள்ளாக்கும். முடிவில் அந்த வாசகர் அந்த முடிவைப் பற்றிய எண்ணத்துடன், மனித உணர்ச்சிகளுக்கும்

செய்கைகளுக்கும், இடையே மறைந்து கிடக்கும் மர்மங்களையும் மனித உறவுகளையும் சிந்தித்தபடி இருப்பார்.

பொட்டேக்காட்டின் கதைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது ''காலொசீசா'' என்ற கதையாகும். அது ஒரு இள வயது டாக்டரையும் அவரது மனைவியையும் பற்றிய கதையாகும். முன்னர் தனக்குப் பண உதவி செய்து இருந்திருந்த தனது பள்ளி ஆசிரியரின் உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாக அந்த டாக்டருக்கு ஒரு நாள் செய்தி வருகிறது. உடனே வழியில் ஒரு நோயாளியைப் பார்த்துவிட்டு வீடு திரும்புகிறார். வீட்டில் தனது மனைவி வெகுவாக அலங்கரித்துக்கொண்டு இருப்பதைப் பார்த்ததும் குழப்பமடைகிறார். அவளுக்கு ஒரு காதலன் இருக்கக்கூடும் என சந்தேகிக்கிறார். தனது சந்தேகத்தை மறைமுகமாக அவள் உணரும்படி செய்கிறார். இதனால் இருவருக்கும் மன உளைச்சல் ஏற்படுகிறது. இரவு முழுவதும் இருவரும் பிணங்கியபடி மௌனம் சாதித்து உட்கார்ந்து இருக்கின்றனர். அவள் தலையைக் கவிழ்த்தபடி உட்கார்ந்திருக்கிறாள். அவரோ யார் வரப்போகிறார்கள் என்பதை அறியக் காதுகளைத் தீட்டிய வண்ணம் உட்கார்ந்திருக்கிறார். பொழுது விடிவதற்குச்சற்று முன்காலடிச்சத்தம் கேட்கிறது. டாக்டர் எச்சரிக்கை ஆகிறார். அவர் மனதுக்குள் திருடனைக் கண்டுபிடிக்கப் போவது போன்ற எண்ணம். கதவைத் திறக்கிறார். ஒரு தபால் காரர் தந்தியுடன் அங்கு நிற்கிறார். சென்னையில் படிக்கும் அவர்களது ஒரே மகள் முந்தின தினம் மாலை நீரில் மூழ்கி இறந்துவிட்டதாகத் தந்தியில் செய்தி இருக்கிறது.

இரவு முழுவதும் சத்தம் இன்றி இருந்த வீட்டின் உச்சக்கட்டம் தற்போது எதிரிடையாக மாறிவிட்டது. இருவரும் ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடு தற்போது இல்லை. மகளின் மறைவு இருவருக்கும் இடையே இருந்த காதல் மறைந்ததைக் குறிப்பிடுகின்றது. இக்கதையில் வரும் வேறு சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் கதைக்கு ஆழத்தை அளிக்கின்றன. டாக்டரின் மனைவி தேநீர்க் கோப்பையைக் கீழே போடுகிறாள். டாக்டர் தேநீர் தவிப்புடன் வெளியேறுகிறார். பிறகு அவர் சென்ற டாக்ஸி குப்புறக்

கவிழ்ந்துவிடுகிறது. டாக்டர் சேற்று நிலத்தில் தள்ளப்படுகிறார். எழுந்து பார்க்கும் போது ரயில் வண்டி புகையை விட்டுக்கொண்டு ஸ்டேஷனை விட்டுச்சென்று கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகள் வரப்போகும் சோகத்திற்கு முன்குறிப்பாக இருக்கின்றன. இதே இரயில் வண்டியில் தான் அவர் மனைவி ராதாவைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். தனக்கு ஒரு அவசரச் செய்தியை அனுப்பியிருந்த ஆசிரியரின் மகள் ஒரு காலத்தில் அவரைக் காதலித்தாள். அவளுடன் பழகிய அந்த நாட்களைக் குற்ற உணர்வோடு இப்போது அவர் நினைவு கூர்கிறார். எனவே அவரது மனது தனது மனைவியை விட்டு மற்றொரு பெண் மீது நாட்டம் கொள்கிறது. அங்கிருக்கும் பருத்த விகாரமான தமிழ் வியாபாரிக்கும் அவனது அழகான மனைவிக்கும் இடையேயான வித்தியாசம் அவரைத் துணுக்குறச் செய்கிறது. இரவு நேரத்தில் குடித்து விட்டு சோகமாகப் பாடும் டாக்ஸி ஓட்டியின் பாடலைக் கேட்கிறார். அவனது அழகான மனைவிக்குத் தொழுநோய். அது தான் அவனது சோகத்திற்குக் காரணம். இந்த நிகழ்ச்சி யெல்லாம் அவரது மனதைப் பாதிக்கின்றன. அவரது மனைவியை விட்டு வெகுதூரம் போகவைக்கின்றன. கதாசிரியர் டாக்டரின் மனைவி செய்த துரோகச் செயலைக் குறிக்கும் நிகழ்ச்சிகள் எதையும் கூறவில்லை. அவர்களது உறவில் மர்மச் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அவர்களது மகளின்சாவால் இருவரின் மனபேதங்களும் முற்றுப் பெறுகின்றன.

பொட்டேக்காட்டின் கதைகளில் காதல் உணர்வே மிகுந்து காணப்படுகிறது. அவை பெண்களின் ஏமாற்று வேலையும், சில சமயங்களில் ஆண்களின் சலன புத்தியும் சம்மந்தப்பட்டவையாக இருக்கும். சில கதைகளில் விதியின் விளையாட்டால் ஏற்படும் துயர முடிவுகள் இருக்கும். ''புள்ளிமான்'' என்ற கதையில் ஆண்களின் சபல புத்திக்குப் பெண் பலியாவதைக் காணலாம். தேவய்ய தனது காம இச்சைக்காக விதவையான ஆசிரியை பார்வதியை பலியாக்கியதுமல்லாமல், அவளது தங்கை சீதம்மாவையும் நாடுகிறான். பார்வதியோ கண்யமாக நடக்கத் திட்டமிடும்போது அவள்தனது காதலனால் உயிரை இழக்கிறாள். இக்கருத்து சாதாரணக் கருத்து போலக் காணப்பட்டாலும், கதையின் காதல் போக்கும்,

பிற அம்சங்களும் கதைக்குக் கனவுத் தன்மையை ஊட்டுகின்றன. கதையில் வரும் திருப்பங்களும், பார்வதியின் மன எழுச்சியும் தேவய்யன் மீது அவள் கொண்ட தீவிரக் காதலுக்கும், தங்கையின் பாசத்துக்கும் இடையே ஏற்படும் மோதல்களை விளக்குகின்றன. இவையெல்லாம் கதைக்குக் கவர்ச்சியைத் தருகின்றன. விதவையின் புதுக்காதல் அரும்பின வேகத்துடனேயே உதிர்ந்தும் போகிறது. பார்வதி தேவய்யன் சந்திப்பு ஒரு ரோஜா புதருக்கருகில் ஏற்படுகிறது. பள்ளிக்குப் போகும் வழியில் இருக்கும் ரோஜாப் புதரின் வாசனையும் குளிர்ந்த நிழலும் பார்வதியைக் கவர்கின்றன. அன்று அக்கிராமத்தில் 'வேட்டைக்காரர்களின் நாள்' கொண்டாடப்படுகிறது. அவள் புள்ளியிட்ட பச்சை நிறப் புடவையை உடுத்திக்கொண்டிருந்தாள். தேவய்யன் அவளை ஒரு மான் என்று நினைத்துக் துப்பாக்கியால் சுட்டான். அவள் விரலில் ரத்தம் வடியவும் காயத்துக்குக் கட்டு போட்டான். இதுதான் அவர்களது காதலுக்கு ஆரம்பம். துப்பாக்கிக் குண்டின் வேகத்துடனும், ரோஜாப்பூவின் வாசனையுடனும் அவர்கள் காதல் அரும்பிற்று. கடையிசில் அதே இடத்தில் அடிபட்ட மான்போல் காதலில் விரத்தியுற்று அவள் இறந்து போனாள். ஒரு துப்பாக்கிக் குண்டால் அவளது காதலைப் பெற்றவன், மறு குண்டால் அவளைக் கொலை செய்கிறான்.

''ஸ்திரி'' என்ற கதை பெண்ணின் துரோகச் செயலை விளக்குவதாகும். பார்கவியின் திருமண எதிர்பார்ப்புகள் அவளது க்ஷயரோக வியாதியால் முடக்கப்படுகின்றன. அவளைத் திருமணம் செய்ய இருந்த பேராசிரியர் அவளது தோழி சுநந்தாவைக் காதலிக்கத் தொடங்குகிறார். பொறாமைத் தீ பார்கவியின் உள்ளத்தில் மூண்டெழுகிறது. எனவே சுநந்தாவுக்கு எதிராகச் சதி செய்கிறாள் பார்கவி. சுநந்தாவைப் பேராசிரியரின் காதலை ஏற்கும்படித் தூண்டுகிறாள். தனது நெக்லெஸ் ஒன்றையும் பரிசளிக்கிறாள். அதோடு அந்த நெக்லெஸ் பரிசு பற்றிய விஷயத்தைப் பேராசிரியருக்குத் திருமணத்துக்குப் பின்தான் சுநந்தா சொல்ல வேண்டும் என்ற வாக்குறுதியையும் பெறுகிறாள். பிறகு பேராசிரியரிடம் தனது நெக்லெஸ் திருடு போய்விட்டதாகக் கூறுகிறாள். மேலும் தனது தோழிதான் திருடியிருக்கக் கூடும் என்று தான் சந்தேகிப்பதாக் கூறுகிறாள். பேராசிரியர் சுநந்தாவின்

அறைக்குள் அவள் இல்லாதபோது நுழைந்து ஆராய்ந்து பார்த்ததில் நெக்லெஸ் அங்கு பெட்டியில் இருப்பதைக் காண்கிறார். பார்கவி இறந்து போகிறாள். இருபது ஆண்டுகளாக சுநந்தா பேராசிரியரின் அன்புக்காகப் பொறுமையுடன் காத்திருக்கிறாள். இறுதியில் வாழ்க்கையெல்லாம் வீணாகப் போனபின் சாகும் நேரத்தில் பேராசிரியருக்கு சேதி அனுப்புகிறாள். நெக்லெஸ் கதையின் ரகசியத்தைச் சொல்கிறாள். அதை அவரிடம் ஒப்படைக்கிறாள். சுநந்தாவின் இறுதி வார்த்தைகள், பேராசிரியருக்கும் படிப்போருக்கும் புதிரை விளங்க வைக்கின்றன. ''புள்ளிமான்'' ''ஸ்திரி'' ஆகிய கதைகளின் பாத்திரங்கள் சூழ்நிலைக்கு ஏற்பப் படைக்கப்பட்டுள்ளன. பாத்திரங்கள் இயற்கையாகக் கதைக்கேற்ப அமைந்துள்ளன. உதாரணமாக ''ஸ்திரி'' கதையில் பொட்டேக்காட், பார்கவியின் படுக்கையறை பற்றிய முழு விவரங்களையும் தரத் தயங்குகிறார். சரவிளக்கு, அழகான கடிகாரமும் அதனுடைய ஊஞ்சல் போன்ற பொன்மயமான பெண்டுலமும், சுவரில் மாட்டப்பட்டுள்ள படங்கள், வழவழப்பான தரை ஆகியன ஆசிரியரால் கூறப்பட்டுள்ளன. அது ஒரு நோயாளியின் அறை என்று யாராலும் கூற முடியாது. என்று ஆசிரியரே கூறுகிறார். மருந்து புட்டியோ, தெர்மாமீட்டரோ அங்கு காணப்படவில்லை. அதை ஒரு நோயாளியின் அறை என்பதை விட ''சாவுக்கு வரவேற்பளிக்கும் விருந்தினர் அறை'' என்றே கூறலாம் என்கிறார் ஆசிரியர். புள்ளிமான் கதையில் உணர்ச்சி வசப்படுத்தும் நில அமைப்பும், பனி மூடிய மலை உச்சிகளும், நிலா வெளிச்சம் பிரதிபலிக்கும் ஆறும், ஏரியும், காதலர்களை நெருக்கமாக்க உதவுகின்றன.

''வது'' என்ற கதை பெண்ணின் துரோகத்தையோ, ஆணின் சபலங்களையோ கூறுவது அல்ல. இரக்கமற்ற விதிதான் கதையின் முடிவை உறுதி செய்கிறது. வழக்கம் போல் வாழ்க்கையில் திரும்பத் திரும்ப வரும் அம்சங்கள்தான் வியாபித்திருக்கின்றன. ஆனால் முக்கியமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும் அவை விதியின் எதிரிடை விளையாட்டாகவும் இருக்கும். மலேசியாவில் வேலை செய்யும் கோபி கேரளத்துக்கு விடுமுறையில் வருகிறான். அப்படியே திருமணத்தையும் முடித்துக்கொண்டு திரும்பும் திட்டமும் வைத்திருக்கிறான். இந்தக் கதையைக் கூறும்

நண்பனுடன் பெண் பார்க்க ஒரு கிராமத்துக்குச் செல்கிறான். நெல்வயலில் நடக்கும் போது அவனுக்கு பழைய நினைவுகள் வருகின்றன. அந்த கிராமப்பள்ளியில் சில காலம் அவன் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறான். அப்போது அடுத்த பள்ளியில் பணியாற்றிய ஒரு பெண் மீது தனியாக் காதல் கொண்டிருந்தான். ஆனால் அவர்கள் இருவரும் மாலையில் பள்ளிவிட்டுத் திரும்புகையில் சந்தித்தபோதுகூட அக்காதலை பற்றிஅவளிடம் பேச அவனுக்கு வாய்ப்பில்லை. ஒரு நாள் அவன் உள்ளுணர்வு மேலிட அவளைக் காண அவளது வீட்டிற்கு செல்கிறான். அவ்வீட்டை அவன் அடையும் முன் அவ்வீடு விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருப்பது அவனுக்குத் தெரிகிறது. அது அவளது திருமணநாள் இரவு. அன்றிலிருந்து அவன் அவளைப் பற்றி நினைக்கவும் இல்லை, கேள்விப்படவும் இல்லை. இக்கதையைக் கேட்ட அவனது நண்பனுக்குத் திகைப்பு ஏற்படுகிறது. ஏனென்றால் கோபியை அவளது வீட்டிற்குத்தான் பெண்பார்க்க அழைத்துப் போய்கொண்டிருக்கிறான் அவன். அப்பெண் திருமணமான சில நாட்களில் விதவையாகிவிட்டாள். அந்த இருநண்பர்களும் அந்த வீட்டை நெருங்கும் போது அவ்வீடு முன்போலவே விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. சரித்திரம் மர்மமாகத் திரும்புவது போலிருந்தது. ஆனால் திருப்பம் வேறு விதமாக இருந்தது. ஏனென்றால் இம் முறை அவ்விளக்குகள் அப்பெண்ணின் திருமணத்தை அறிவிக்கவில்லை. மாறாக, அவளது இறப்பை அறிவித்துக்கொண்டிருந்தன. அந்த இளம் விதவை அன்றிரவு தற்கொலை செய்து கொண்டாள். மணப் பெண்ணைத் . தேடியவன் நேரங்கடந்து அங்கு போனான். சாவு அவளைத் தனது மணப்பெண்ணாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டுவிட்டது!

பொட்டேக்காட்டின் கதைகள் எல்லாம் துன்பியல் கதைகள் அல்ல. சில வேடிக்கைக் கதைகளும் உண்டு. என்றாலும் அவை எல்லாம் திடீர்த் திருப்பங்களைக் கொண்டவையாகும். அத்திருப்பங்கள் கதாபாத்திரங்களின் வாழ்வா அல்லது சாவா என்ற போராட்டங்களைக் கொண்டதாக இரா. வாழ்க்கை அவர்கள் மீது வேடிக்கை காட்டும். எனவே படிப்பவர்கள் அக்கதைகளைச்

சுலபமாகப் படித்து ரசிப்பர். இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு ''குற்றக்காரி'' (குற்றமுள்ளவள்) என்ற கதையாகும். ஒரு கண்டிப்பான தலைமையாசிரியை காதல் கடிதங்களைப் பரிமாறிக்கொண்ட ஒருபையன், ஒரு பெண் ஆகியோரிடம் அவர்களது பெற்றோர்களை அழைத்து வரும்படி கூறுகிறாள். அவர்கள் வருகிறார்கள். பெண்ணின் தந்தை அவரது கல்லூரிக் காலத்தில் அந்தத் தலைமையாசிரியையைக் காதலித்தவர். பையனின் தகப்பனாரோ, சிறுவயதில் தலைமை ஆசிரியையுடன் ஒரே பள்ளியில் படித்தவர். அவருடன் காதல் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டுள்ளார். வந்ததும், அந்த இரு காதலர்களும் அவளை அடையாளம் கண்டு கொண்டனர். வெளிப்படையாகவும் பேசிக்கொண்டனர். அந்தப் பெண்மணி, அவர்களிடம் அந்தக் காலை நேரத்தில் அவர்களுக்குத் தொந்தரவு கொடுத்ததற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டார். இந்த எதிர்பாராத சந்திப்புகளினால் கதை குழப்பமான திடீர்ச் சரிவுடன் முற்று பெறவில்லை. ஏனென்றால் அடுத்த நாள் அந்தத் தலைமை ஆசிரியை தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டாள்.

''புத்து பாதுஷா'' என்ற கதை தில்லை நகரப்/பின்னணியில் எழுதப்பட்டதாகும். ஒரு நாள் கதாசிரியரும் அவரது நண்பர் ஹமீத்தும் தில்லி புராண கில்லா கோபுரத்தின் மீது அமர்ந்து தில்லியின் பழைய சம்பவங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது முகலாய சேனையைச் சக்ரவர்த்தி ஒருவர் நடத்திச் செல்வது போன்ற தோற்றம் ஏற்படக் குழப்பத்தில் ஆழ்ந்தனர். ஆசிரியரோ, தான் சரித்திரம் படித்ததால் ஏற்பட்ட பிரமையாக அது இருக்கலாம் என்று எண்ணினார். ஆனால் ஆசிரியரின் நண்பர் உண்மையைப் பின்வருமாறு விளக்கினார்: குதிரை மீது சென்ற சக்ரவர்த்தி உண்மையில் தில்லியின் ஒரு சமூக விரோதக் கூட்டத்தின் தலைவர். ஜனங்கள் அவனைப் புத்து பாதுஷா என்று அழைப்பார்கள். யாரோ ஒருவன் அவனது மனதில் அவன் முகலாயச் சக்ரவர்த்திகளின் வம்சத்தில் வந்தவன் என்று பதியும்படிக் கூறிவிட, அந்தக்கிறுக்கன் பாதுஷாவாகத் தனது

ராஜ்யத்தை மீண்டும் அமைக்கும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். இதைக் கேட்டதும் ஆசிரியருக்கு உண்மை புரிந்தது.

''ஹரிச்சந்திரா'' என்ற கதையில் மரணம் பற்றிய செய்தி மிகுந்த நகைச்சுவையுடன் எழுதப்பட்டுள்ளது. கதையைக் கூறுபவர் ஒரு சவ ஊர்வலத்தைப் பார்க்கிறார். அது அந்த ஊர் இடுகாட்டைக் காக்கும் வெட்டியானின் சவ ஊர்வலம். அவனை எல்லாரும் ஹரிச்சந்திரன் என்றே அழைப்பர். ஏனென்றால் புராணத்தின்படி ஹரிச்சந்திரன் மயானத்தை காப்பவன். அங்கு பிரேதங்களை எரிப்பவன். இப்போது யார் இந்த ஹரிச்சந்திரனின் பிரேதத்தை ஏரிப்பார்கள்? இந்தக் கேள்வி கதையைக் கூறுபவரின் மனதை உறுத்தவே அவரும் சவ ஊர்வலத்தில் கலந்து கொள்கிறார். ஆனால் அந்த ஹரிச்சந்திரனின் உடல் எரிப்பதற்காக விதிக்கப்பட்டிருக்க வில்லை! அதனைத் தூக்கிச் சென்றவர்கள் வழியில் எதிர்ப்பட்ட ஓர் ஓடையில் அதைத் தவறவிடுகிறார்கள். பிரேதமும் அவர்களுடன் ஓடையில் மிதக்கிறது. ஓடையின் வேகமான நீரோட்டம் அதனை ஓர் ஆற்றுக்கு இழுத்துச் செல்கிறது. பிறகு ஆற்றிலிருந்து அது சமுத்திரத்துக்கு கொண்டு போகப்படுகிறது! எனவே பல பிரேதங்களை எரித்த ஹரிச்சந்திரன் தன் உடலை மற்றவர்களால் எரிக்கப்பட அனுமதிக்கவில்லை. வெகு சாமார்த்தியமாக அவன் சமுத்திரத்துக்குள் பிரவேசித்து விடுகிறான்.

பொட்டேக்காட் தான் விஜயம் செய்த நாடுகளில் உள்ள தாவர மிருக இனங்களை மிகவும் கவனத்துடன் நோக்குபவர். மரங்களும் பூக்களும் அவரது கற்பனைக்கு இடமளிப்பவை. .அவற்றின் உருவம், நிறம், மணம் அகியவை அவரது காதல் கதைகளும், பிறகு சிறுகதைகளும் பிறக்க உதவியவை. அவற்றில் முக்கியமானவை ''நிஷாந்தி'', ''எழிலம்பலா'', ''காட்டு சண்பகம்'' ஆகும். ''எழிலம்பலா'' வில் கதை கூறுபவர் தனது வயதான மாமா, ரோடு ஒன்று போடுவதற்கு எழிலம்பலா மரத்தை வெட்டத் தடை போட்டதைக்கண்டு மிகவும் குழப்பமடைகிறார். மருமகனுக்கு அது

மிகவும் விசித்திரமாக இருக்கிறது. ஏனென்றால் அந்த பெரியவர்தான் ரோடு போடுவதை ஆதரித்தவர். அது ஊருக்கு ஒரு வரப்பிரசாதமாகும் என்று கூறியவர்.! கதையின் முக்கிய கருத்து கடைசியில் மாமாவின் புது உருவத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. மருமகனால் முதலில் காட்டப்பட்ட மாமாவின் உருவத்திற்கு மாறுபட்ட உறுவம் இறுதியில் தரப்படுகிறது. மருமகனுக்கு ஒரு கடிதம் எழுதிவைத்துவிட்டு அந்த பெரியவர் தற்கொலை செய்து கொள்கிறார். அக்கடிதம் அவரது காதலின் துயரமுடிவைக் காட்டுகிறது. ஆரம்பத்தில் அந்த பெரியவர். கீழ்ச்சாதிப் பெண்ணொருத்தியைக் காதலித்தார். அவளும் அவரது காதலை அங்கீகரித்தாள். ஆனால் அவரது பெயருக்கும், குடியின் பெருமைக்கும் இழுக்கு ஏற்படாதிருக்க அவள் அந்த எழிலம்பலா மரத்தில் தூக்கிலிட்டுக் கொள்கிறாள். இதனால் ஆழமான வடு அவர் மனதில் ஏற்பட்டு அவர் கடைசி வரையிலும் பிரமச்சாரியாகவே இருந்து, அந்த எழிலம்பலா மரத்தை வீட்டு அறையிலிருந்து பார்த்தபடி வாழ்க்கையைக் கடத்துகிறார். அக்கிராமத்தார் எண்ணியிருந்தவாறு அவர் இவ்வுலக உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர் அல்ல என்பது புலனாகிறது.

பொட்டேக்காட் தனது எழுத்தோவியங்களில் அவரது பிரயாண அனுபவங்களைத் தீட்டியுள்ளார். இதனால் அவர் மற்ற மலையாள எழுத்தாளர்களினின்றும் வேறுபட்டு நிற்கின்றார். ஏனென்றால் அவர்கள் எல்லாரும் கேரள மக்களின் வாழ்க்கையைப் பற்றி மட்டுமே எழுதினார்கள். ''ஹிமவாஹினி '' தொகுதியிலுள்ள எல்லாக் கதைகளும் கஷ்மீரப் பின்னணியைக் கொண்டவை. பாலித் தீவுகளும் சிங்கப்பூர் தெருக்களும் ஆப்பிரிக்கக் காடுகளும் அவரது சில கதைகளுக்குப் பின்னணியாக அமைந்துள்ளன. இது மாதிரியான பூகோளப் பின்னணிகள் அவரது கற்பனை உலகத்துக்குக் கவர்ச்சியைத் தருகின்றன.

சில கதைகள் குணச்சித்திரங்களாகவே இருக்கின்றன. கதைக் கருவின் முக்கியத்துவம் பாத்திரங்களின் குணத்தின் மூலம்

வெளிப்படுகின்றது. '' ஒழிஞ்ஞ கட்டில் '' (காலியான கட்டில்) என்ற கதையில் ''குஞ்ஞலவி'' என்ற பாத்திரம் முக்கியமானது. அவர் ஒரு முகமதியர். தேசப்பற்று கொண்ட காரணத்தால் அவர் நண்பர்கள், வியாபாரம், ஆரோக்கியம் ஆகியவற்றை இழந்துவிடுகிறார். இளைஞர் மொஹிதீன் ஒரு சிறு வியாபாரி. தேசப்பற்று கொண்ட இவரும் உணர்வு பூர்வமாகச் சித்திரிக்கப்படுகிறார்கள். '' மலையாளத்தின்றே சோர'' (மலையாளத்தின் ரத்தம்) என்ற கதை அவரது சுய மனோபாவத்தை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டுள்ளது. அவர் கோலாலம்பூரில் வீதிமுனைகளில் 'நாரிகோரிங்' (தாளித்த மசாலா சோறு) தனது வண்டியில் வைத்து விற்றுக் கொண்டிருக்கிறார். ஒரு நாள் அவர் ஒரு மனிதனின் வேதனைக் குரலைச் சற்று தூரத்தில் கேட்கிறார். அவர் அங்கு சென்று பார்க்கும் போது ஒரு போலிஸ்காரரும் மற்றும் சில முரடர்களும் சேர்ந்து ஒரு கேரளக்காரரைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கின்றனர். அந்த கோரக் காட்சியைக் காண முடியாமல், தனது கையிலிருந்த கம்பால் அவர்களை விரட்டியடித்து அந்தக் கேரளத்தாரை விடுவிக்கிறார். இதனால் மொஹிதீனின் வாழ்க்கை மிகவும் பாதிக்கப்படுகிறது. அவர் கோலாலம்பூரில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்த வாழ்க்கை மிகவும் பாழாகிறது. அவரும் அவரால் விடுவிக்கப்பட்டவரும் காடுகளுக்குச் சென்று விடுகின்றனர். நகரத்திற்குத் திரும்பவே இல்லை. அடுத்த கதை ''சிகாரி'' (வேட்டைக்காரன்). இது திரு.புஷ் என்ற கணிதப் பேராசிரியரைப் பற்றிய கதைகளைப் பற்றியது. அவருக்கு ஆப்பிரிக்கக் காடுகளைப் பற்றிய கதைகளைப் படித்ததிலிருந்துஆப்பிரிக்க காடுகளில் வேட்டையாட வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது. எனவே, ஆசிரியர் வேலையை விட்டுவிட்டு ஆப்பிரிக்கா செல்கிறார். அங்கு வேட்டைக்காரன் ஒருவனைத் துணைக்கு அமர்த்திக் கொள்கிறார். ஒரு நாள் வேட்டைக்குச் சென்ற போது, அவருக்கு முன் ஒரு பயங்கரமான ஆப்பிரிக்கா யானை வந்து நிற்கிறது. உடன் வந்த வேட்டைக்காரன் கூட அது மாதிரியான நீண்ட தந்தமுள்ள யானையைப்

பார்த்ததில்லை. அவன் புஷ்ஷை,. அந்த யானையைச் சுடும்படி சொல்கிறான். ஆனால் புஷ்ஷோ அந்த யானையின் உருவத்தைக் கண்டு அதிசயிக்கிறார். அது காதுகளை ஆட்டும்போது ஏற்படும் தாள லயத்தையும், தந்தங்களையும், கால்களையும் கண்டு ரசிக்கிறார். அவர் அதனைச் சுட மறுத்து, சுடப்போனத் தனது சக வேட்டைக்காரனையும்தடுக்கிறார். அந்த யானை போய்விடுகிறது. அன்று முதல் புஷ் வேட்டையாடுதலை விட்டுவிட்டார். பிறகு தனது வருமானத்திற்காக, நெருப்புக் கோழியின் இறகுகளைச் சேகரித்து விற்கத் தொடங்கினார். ''காட்டு செண்பகம்'' போன்ற கதைகளில் பொட்டேக்காட் தனது கதாப்பாத்திரங்களுக்கு அபூர்வமான புராண உருவ அமைப்புகளைத் தந்துள்ளார். பத்திரி ஒரு கிழவி. அவள் மனநிலை சரியில்லாமல், ஒரு காட்டு சண்பக மரத்தடியில் தனது காதலனுக்காக காத்திருக்கிறாள். இளமையில் அவள் ஒரு அரச்குமாரி. கலையம்சம் கைவரப்பெற்ற தச்சன் ஒருவனை அவள் காதலித்து, அவனுடன் ஓடிப்போக இருந்தாள். அவளும் அவனும் அன்று அந்தக் காட்டு சண்பகமரத்தடியில் சந்திப்பதாக இருந்தது. இதற்குள் அவளைக் கைபிடிக்க நினைத்த மற்ற அரசகுமாரர்கள், அவளது காதலன் அந்த மரத்தடிக்கு வரும் முன்பேகொன்றுவிட்டனர். அநேக ஆண்டுகள் கழிந்தும் அவள் தனது காதலன் வருகைக்காக அந்த மரத்தடியில் காத்திருக்கிறாள். அவள் இறந்து போகவில்லை. காதலர்கள் அவளை ஒரு தேவதையாக வழிபடுகின்றனர். பொட்டெக்காட்டின் கதைகளில் உணர்ச்சிபூர்வமானலட்சியக் கொள்கைகளைக்காணலாம். இந்திய கலாச்சாரத்தின் மறுமலர்ச்சியை ஏற்றுக் கொள்ளும் எழுத்தாளர்வகையைச் சார்ந்தவர் அவர். ''பத்திரி'' கதாபாத்திரம் உண்மைக்காதலின் உருவ அமைப்பு. அகிம்சைக் கொள்கையை ஏற்றுக்கொண்டு மனம் மாறியவர் புஷ். மொஹிதீன் சிறந்த மலையாளச் சார்பாளர். குஞ்ஞலவி ஒரு சிறந்த தேச பக்தர். இப்படியாகச் சிறந்த கதைப் பாத்திரங்களைக் கொள்கை ரீதியில் படைத்த சிறந்த கதாசிரியர் பொட்டேக்காட்.

''அங்கதம்'' கதாசிரியரின் நிலையான உத்தியல்ல. ஏனென்றால் அந்த உத்தி மறைமுகமான வெளிப்பாடுகளையும் குறிப்புகளையும் கொண்டிருந்தது.

பொட்டேக்காட் எதையும் நேரிடையாகவே கூற விரும்புவார். என்றாலும் அவரது சமூகக் கதைகள் சிலவற்றில் அங்கத உத்தி கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். ''ஸ்மாரகம்'' (நினைவகம்) ''நாடன் கல'' (நாட்டுப்புறக் கலைகள்) முதலியவற்றை உதாரணமாகக் கூறலாம். இரக்கமற்ற சமூகத்தால் வஞ்சிக்கப்பட்ட ஒரு கலைஞனின் சுவையற்ற வாழ்வுக் கதைதான் ''ஸ்மாரகம்''. கடன் கொடுத்தவர்களின் இம்சை தாளாமல் தான் இறந்து விட்டதாக ஊராரை நம்ப வைத்து அந்தக் கவிஞன் அந்த ஊரைவிட்டே வெளியேறுகிறான். அவனை வஞ்சித்த ஊரார் அவனுக்கு நினைவகம் எழுப்பப் பணம் திரட்டுகின்றனர். அஸ்திவாரக்கல் நாட்டும் விழாவின் போது மாறுவேடத்திலிருக்கும் கவிஞன் வெளிப்பட்டு அவனை வஞ்சித்தவர்களின் பணம் திரட்டும் கபட நாடகத்தை வெளிப்படுத்துகிறான். மகாசபைக் கூட்டங்களிலும் விவாத அரங்குகளிலும் தங்களது பேச்சாற்றலால் தன்னாதிக்கம் செலுத்தும் கலாச்சாரக் கழுகுகளுக்குப் புத்தி புகட்டும் வகையில் அமைந்துள்ளதுதான் ''நாடன் கல'' கதை.

பொட்டேக்காட்டின் பல கதைகள் நீளமான இயற்கை வருணனைகளைக் கொண்டதாக இருக்கும். கதாசிரியரின் கவித்துவத்தை விளக்கக் கூடிய வகையில் கதையின் பின்னணி அமைப்பு இருக்கும்.

உதாரணத்துக்கு,- மாலைப்பொழுது, அமைதியான கடல், இயற்கையின் முற்றத்தில் விரிக்கப்பட்ட பட்டுஜமுக்காள ஆகாயம், சிவப்பு மேகங்கள் நடுவில் தொங்கவிடப்பட்ட சூரிய விளக்கு - ஆகியவற்றைக் கூறலாம்.

சில கதைகள் கட்டுரைகள் போன்று பொதுவான விளக்கங்களுடன் ஆரம்பமாகும். ''நான் விரும்புவது நிசாகந்தி (இரவின் அரசி) யின் மணம்''. அதன் மெல்லிய இதழ்கள் என்னை மிகவும் கவர்ந்தன. எனவே அதுதான் இரவின் அரசி என ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதில் வியப்பில்லை .... இந்த அரசி பூக்களில் ஒரு பொதுமகள். பகலில் தூங்கும். மாலையில் இரட்டின பிறகு மெதுவாக வந்து ஆண்களை எதிர்பாராத விதமாகத் தழுவிக் கவர்ந்திடும். எனது தோட்டத்தில் நிசாகந்தியை வளர அனுமதிப்பதில்லை. அதற்கு காரணம் உண்டு. அதன் பின்னே ஒரு கதையும் உண்டு.

''புத்து பாதுஷா'' கதையும் ஒரு கட்டுரை போன்று தான் ஆரம்பிக்கிறது. நாங்கள் புத்தகங்கள் மூலம் அறிந்திருந்த இடத்தை அடைந்த போது, ஏதோ தூரத்து உறவினர் வீட்டை அடைந்தது போல உணர்ந்தோம். அங்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்சிகளைக் கண்டோம் என்ற தவறான உணர்ச்சியால் உந்தப்பட்டோம். ஒவ்வொரு சிதைந்த தூணும், / இடிந்த சுவரும், மூலைமுடுக்குகளும், எங்களுக்கு அவற்றுடன் நாங்கள் ஏற்கெனவே தொடர்பு கொண்டுள்ளோம் என்ற உணர்வை ஏற்படுத்தின.

சிறுகதை எழுதுவது பொட்டேக்காட்டுக்கு மிகவும் சௌகரியமாக இருந்தது. ஒரு பேட்டியில் அவர் நாவலை வீடாகவும், சிறுகதையை அந்த வீட்டில் ஓர் அறையாகவும் ஒப்பிட்டுக் கூறினார். அவரது கதைகள் இந்த விளக்கத்தை உதாரணங்களுடன் கூறுகின்றன. என்றாலும் அவரது கதைகளைப் படிக்கும் போது, ஒருவர் வீட்டின் அறைகள் மட்டுமின்றி அங்கு ஜன்னல்களும் இருப்பதை உணர்வர்.

3. ஒரு பயணியின் புளகம்

சில குறிப்பிட்ட முறைபாடுகளில் பயணங்கள் இலக்கிய உத்திகளினின்னும் மாறுபட்டிருக்கின்றன. அவை கற்பனையின் அடிப்படையில் உற்பத்தியானவை அல்ல. அவை படைப்பாசிரியர்களின் எழுத்துத் திறமையை மட்டும் நம்பியிருக்காமல் அனுபவத்தின் ஆழத்தையும் நம்பியிருக்கின்றன. இந்த அனுகூலத்தால், பயண இலக்கியக் கர்த்தாக்களை இருவகையாகப் பிரிக்கலாம். இதில் எதிர்பாராத விதமாக எழுத்தில் ஒரு நடையை வகுத்துக் கொண்டவர்கள் ஒரு ரகம். மற்றவர்கள் எழுதுவதற்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அநேகமாக மலையாளத்தில் பிரயாண நூல்கள் எழுதுபவர்கள் முந்தையப் பிரிவினைச் சார்ந்தவர்களே. அவர்களது நூல்கள் திடீர் என்று ஏற்பட்ட யாத்திரைகளின் அல்லது அரசாங்கம் உத்தியோகம் நிமித்தம் மேற்கொண்ட வெற்றிப் பயணங்களின் வெளிப்பாடுகளேயாகும். டி.கே. கிருஷ்ணமேனோன், என்.வி. கிருஷ்ணவாரியர், தரவத்து அம்மாளு அம்மா, கே.பி. கேசவமேனோன் முதலியோர் தங்கள் பயணங்களின் நாட்குறிப்புகளை நூல்களாக வெளியிட்டோரில் அடங்குவர். ஆனால் பொட்டேக்காட்டோ இவர்களிலிருந்து மாறுபட்டுத் தனிநடையில் நூல்களை ஆக்கியுள்ளார். உலகத்தின் பல பாகங்களுக்கு அவர் தற்செயலாகச் செல்லவில்லை. அவருக்குள் தோன்றிய மனத் தூண்டுதலால் அவர்

வெளிநாடுகளையும், அங்கு வசிக்கும் மக்களையும் கண்டறிய அந்நாடுகளுக்குப் பயணமானார். அரசாங்கம் அல்லது கல்வி முதலான எந்த கட்டுப்பாடுமில்லால் அவர் பிரயாணம் செய்தார். ஒரே ஒரு முறை மட்டும் அரசாங்கப் பிரதிநிதியாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றார்.

எழுத்தின் நிர்பந்த வடிவம்தான் பிரயாணம். பொட்டேக்காட் பின்வருமாறு கூறுகிறார்:

''மலையாளத்தில் பிரயாணம் பற்றி எழுதுவது எனக்கு ஒரு சமூகசேவையாகவும், தியாகமாகவும் இருக்கிறது. நான் இதைத் தற்பொழுது தற்பெருமைக்காகக் கூறவில்லை. அப்படியிருந்தாலும் அது நியாயமான கர்வமே. ஒருவருக்குக் கதையோ, புதினமோ எழுதுவதற்கு காகிதம், பேனா ஆகியவற்றைத் தவிர வேறு மூலதனம் தேவையில்லை. சிறிது மூளையும் தேவைதான். ஆனால் ஹெல்சிங்கி, கெய்ரோ, அல்லது சிங்கப்பூர் பற்றி எழுத வேண்டுமானால், ஒருவர் கணிசமான பணத்தைப் பிரயாணச் செலவுகளுக்காக ஒதுக்க வேண்டும். அதற்கு மேலும் அவ்வூர்களில் தங்கி மற்ற முக்கிய இடங்களைக் காணப் பணம் செலவழிக்க வேண்டும். அதற்கு மேலும் குறிப்புப் புத்தகங்கள் வாங்கவும் பணம் வேண்டும்.''

பொட்டேக்காட் தனது பிரயாண ஆர்வத்தையும் எழுத்து ஆற்றலையும் இணைத்திருந்தார். ஆசியா, ஐரோப்பியா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் அவர் விரிவாகப் பயணம் செய்தார். தனியாக மூன்று தொகுப்புகளில் அவர் வரலாறு நிலநூல், சமூகவியல் ஆகிய நூல்கள் மூலம் அக்கண்டங்களைப் பற்றித் திரட்டிய விஷயங்களையும், தனது சொந்த அனுபவத்தையும் இணைத்து எழுதினார். இருந்த போதிலும் அந்த நாடுகள் பற்றிய சுவையற்ற விவரங்களை அதிகமாகத் தந்து, கருத்துச் சுமையை ஏற்றித் தனதுதீர்க்கமான பூரண அறிவுத் திறனைக் காட்டவில்லை. மாறாக தனது அனுபவங்களை உணர்ச்சியூட்டும் சிறுகதைகளாகத் தந்துள்ளார்.

அவர் ஒரு காட்சியை விளக்க வேண்டுமானால், அதைக் கற்பனைத் திறத்துடனும் குறியீடுகளுடனும் எழுதுவார். ஆப்பிரிக்கா பற்றிய நூலின் ஆரம்பமே படிப்போரைக் கவரும் வகையில் அமைந்திருகிறது. மொம்பாசா துறைமுகத்தில் கப்பல் நின்றதும், கடலைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு வாட்ட சாட்டமான அரைநிர்வாண நீக்ரோவின் அச்சுறுத்துவதான உருவந்தான் அவரது கண்களில் தென்பட்டது. அவர் கூறுகிறார்:

> "அந்தநீக்ரோ ஆப்பிரிக்கா நாட்டு எல்லா நீக்ரோக்களின் பிரதிநிதியாக அங்கு நிற்பதாக எனக்குத் தெரிந்தது. ஆச்சரியத்தால் சிலையாகிப் போயிருந்தான். பதினொன்றாம் நூற்றாண்டில் நார்வே நாட்டுக்கரார்கள் அங்கு வந்தபோதும், பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியில் வாஸ்கோடகாமாவின் கப்பல் அங்கு வந்த போதும், ஆச்சரியப்பட்ட நீக்ரோக்கள் மாதிரி அவன் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தான். பல நூற்றாண்டுகள். கழிந்துவிட்டன. என்றாலும் இன்னமும் அவனது பார்வையில் அதே வியப்பு உணர்ச்சி தென்படுகிறது; நாகரிகத்தின் மந்த கதியான வளர்ச்சிதான் அதில் தெரிகிறது"

வரலாற்றின் குறியீடும், கற்பனைத் திறனும் அடுத்தடுத்து வந்து கடந்த கால, நிகழ்கால நிகழ்ச்சிகளை ஒரு நாடகமாகக் காட்டுகின்றன. ஜாலியன் வாலாபாக்கிற்கு அவர் சென்று வந்த நிகழ்ச்சிகளைப் பின்வருவதுபோல் கூறுகிறார்."

> "அந்த மைதானத்திலிருந்த ஒவ்வொரு புல்லின் இதழும் மனித ரத்தத்தால் வளர்ந்திருந்தது. ஒவ்வொரு மரமும் மனித ரத்தம் கலந்த மண்ணிலிருந்து தோன்றியது. இவ்வொரு மணலின் துகளும் சாவின் வாசனையைப் பெற்றுள்ளது. சில சிறுவர்கள் அங்கே காற்றாடி பறக்க விடுகிறார்கள். அவர்களுக்கு அந்தக் காற்றில் அவர்களது முன்னோரின் ஆவிகள்

> கலந்திருப்பது தெரியாது. ''மாலை வந்தது''... ஜனங்கள் ஒவவொருவராகப் போய்விட்டனர். நான் மட்டும் அந்த இடுகாட்டில் தனியாக இருந்தேன்... வானம் துப்பாக்கிப் புகையினால் இருண்டதுபோல் இருந்தது. ஒரு காற்றாடி இருப்பிடம் இழந்து அலையும் ஆவிபோன்று, நூலறுபட்டு வேகமாகப் பறந்தது!''

பொட்டேக்காட் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைவிட மக்களைத் தான் அதிகம் விரும்பினார். சரித்திரம் சம்பத்தப்பட்ட இடங்களை அதிகம் வர்ணிப்பது இல்லை. பழைய பெருமைகளைக் கூறுவதைவிட அந்த இடத்தின்தற்காலச்சிறப்பை விளக்குவதில் அவர் அதிக அக்கறை காட்டினார். ஒருமுறை பத்திரிநாத் செல்லும் வழியில் எல்லையைக் காக்கும் சிப்பாய் ஒருவரைச் சந்தித்தார். உடனே அவரது கற்பனை இமயமலையின் சிறப்பிலிருந்து திசை மாறி மாரிக்காலக் குளிரில் கவனத்துடன் நமது எல்லையைக் காக்கும் சிப்பாய்கள் மீது திரும்பியது. அவர் இத்தாலியில் பயணம் செய்து கொண்டிருந்த போது சரித்திரச் சின்னங்களையும், கலைக்கண்காட்சிகளையும் கண்டார். அவர் மனம் அந்த நாட்டின் சிறப்பில் மூழ்கிப் பூரித்துப் போனது. ஆனால் அதே சமயத்தில் வறுமையில் வாடும் தற்கால இத்தாலியர்கள். நிலையைக் கண்டு அவர் மனம் கலங்குகியது - அவரது கூற்றின்படி, இத்தாலியர்கள் கண்ணியமானவர்கள்; நேர்மையுள்ளம் கொண்டவர்கள்; ஆனால் அவர்களது வாழ்க்கைப் போராட்டத்தால் அங்குள்ள இளம் பெண்கள் விலைமாதர்களாகின்றனர்; ஆண்கள் கீழ்த்தரமான வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றனர்.

இந்தக் கேரளத்துப் பயணி, மற்ற நாட்டு மக்களின் நம்பிக்கை, பழக்க வழக்கம் மூடபக்தி ஆகியவற்றைக் கூர்ந்து கவனிப்பவர். அவர் மலேயா நாட்டு மக்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். ''ஒவ்வொரு மலேயாக்காரரும் மதத்தால் முஸ்லீமாக இருக்கிறார். ஆனால் அவரது மனதில் இந்துக்களின் கலாச்சாரம் புதைந்து கிடக்கிறது. இது சாதாரண குடிமக்களைப் பற்றிய கூற்று மட்டும் அல்ல. அரச பரம்பரையைச் சார்ந்தவர்களும் அப்படியே இருக்கின்றனர். ஏனென்றால் புது சுல்தானுக்கு ஒரு பிராமணர்தான்

மகுடம் சூட்டும் விழாவை நடத்துகிறார். இந்த மதக்குருக்கள் 'நரதிராஜர்கள்' (மனிதரின் அரசர்கள்) என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் சிவபெருமானின் ஊர்தியான நந்தியின்வாயிலிருந்துதோன்றிய பிராமணர்களின்வழி வந்தவர்கள் என்று நம்பப்படுகின்றனர். சுல்தான் இந்துக் கடவுள் மாதிரி அலங்கரிக்கப்படுகிறார். அவரது வலது தோளில் சிவ பார்வதி உருவங்கள் பதித்த குத்துவாள் ஒன்று தொங்குகின்றது.

பாலித் தீவு பொட்டேக்காட்டை மிகவும் கவர்ந்த இடமாகும். அவர் மிக்க ஆர்வத்துடனும் உரிமையுடனும் அந்த வாழ்க்கையைப் பற்றிக் கூறுவார். அந்த மக்கள் பொதுவாக இந்துக் கடவுள்களை வழிபடுகின்றனர். மக்கள் நான்கு வகை வருணத்தார்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஆனால் அங்கு தீண்டாமை இல்லை. ஏறக்குறைய 80 சதவீதத்தினர் சூத்திரர்கள் எனப்படுகிறார்கள். அவர்களது அநேகப் பழக்கவழக்கங்கள் இந்தியர்களைப்போல, குறிப்பாக கேரள மக்களைப்போல இருந்தாலும், அங்கு தடைகள் கிடையாது. வாழ்க்கை, பால் உணர்வு முதலியன பற்றி அவர்கள் வெளிப்படையான மனோபாவம் கொண்டவர்கள். திருமணமாகாத ஆண்களும் பெண்களும் சகஜமாகப் பழகுகின்றனர். பாலித் தீவு காதலர்களிடையே முத்தமிடுதல் காணப்படவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் மூக்குகளை அன்புடன் மற்றவர் முகத்தில் உரசுகின்றனர். அவர்களது திருமணம் ''ராட்சச'' முறையில் நடக்கிறது, மணமகன் தனது வலுவான நண்பர்களுடன் வந்து பலவந்தமாக மணமகளைத்தூக்கிச் செல்வான். அவள் அவர்களைத் தனது காலால் உதைத்தும், அவர்களதுகாதுகளைக் கடித்தும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்துவாள். மணமகன் அவளைத் தனது நண்பன் வீட்டில் வைத்திருப்பான். அங்கு அவளை இரவு நேரச் சல்லாபங்களுக்கு உட்படுத்துவான். இதற்கிடையில் மணமகளின் தந்தை தனது பெண்ணைக் காணவில்லை என்று அக்கம் பக்கத்தாரிடம் முறையிடுவார். பல வீடுகளில் தேடப்பட்டு இறுதியில் மணமகள் கண்டுபிடிக்கப்படுவாள். பிறகு பெற்றோர்கள் தங்களது சம்மதத்தைத் தருவார்கள். சமூகத்தாரும் அவர்களது காதலை அங்கீகரித்து, அவர்களைக் கணவன் மனைவியாக்குவர். இதைப் போலவே ஒருவர் இறந்துவிட்டால், இறுதிச்சடங்கும் விநோதமாக இருக்கும். ஒருவர் இறந்துவிட்டால்,

அவரது உடலை அதற்கென்று நிர்மாணிக்கப்பட்ட வீட்டில் சில நாட்கள் பாதுகாப்பாக வைப்பார்கள். அவரது உறவினர்கள் அந்த வீட்டிற்கு வருவார்கள். விருந்துகளும் கேளிக்கைகளும் அவ்வுடலை எரிக்கும் நாள் வரையில் நடக்கும். எவ்வளவுக் கெவ்வளவு விருந்தும் கேளிக்கையும் நடக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சுலபமாக அந்த ஆவி மோட்சமடையும் என அந்தத் தீவின் மக்கள் நம்புகின்றனர். பலவிதமாக வண்ணக்காகிதங்களால் செய்யப்பட்ட ஒரு விளக்கை அந்த உடல் இருக்கும் வீட்டை நோக்கியபடி தொங்கவிடுவர். சுற்றித் திரியும் ஆவி, தனது வழியைத் தெரிந்து கொண்டு திரும்பி வர அவ்விளக்கு உதவும் என்பது அவர்களது நம்பிக்கை.

மலேசிய, சிங்கப்பூரில் குடியேறிய சீனர்கள் பாலித்தீவு மக்களை விட அதிக மூடப்பழக்கங்களைக் கொண்டவர்கள். இது 1950 க்கு முன்புதான். அநேகமாக எல்லா சீனர்களின் வீட்டின் கதவருகிலும் ஒரு கண்ணாடி இருக்கும். வீட்டில் ஏதாவது துஷ்ட ஆவிகள் நுழைந்தால் அவை தங்களது பிம்பங்களை கண்ணாடியில் பார்த்தவுடன் பயந்து ஓடிப்போய்விடும் என்று அவர்கள் நம்புகின்றனர். அவர்கள் பலவிதமான துண்டு வண்ணத்தாள்களில் தவறான விலாசங்களை எழுதி, இறந்த உடலை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும் போது தூவிவிடுவர். இதனால் அந்த ஆவி தவறான விலாசங்களுக்குப் போய் விடும் என்றும் உயிருடன் இருப்பவரைத் தொந்தரவு செய்யாது என்றும் அவர்கள் நம்புகின்றனர். இது மாதிரியான பயணங்களில் நிகழ்ச்சி விவரங்கள் சுவாரஸ்யமாக இருக்கும்.

இவற்றை அழுத்தந்திருத்தமாகக் கூறும் புத்தங்களைவிட, நூலாசிரியர் அந்தந்த மக்களுடன் பழகிய அனுபவம் அந்த மக்களின் வாழ்க்கையைப் பற்றி அறிய உதவும். மதத்தின் பெயரால் நடக்கும் மோசடிகள் எங்கும் உண்டு. மலேசியாவில் குறிப்பிட்ட ஒரு பிரிவினரிடையே காணப்படும் வேடிக்கையான நிகழ்ச்சியைப் பொட்டேக்காட் பின் வருமாறு விவரிக்கிறார். சிங்கப்பூரில் சீன பௌத்த ஆலயம் ஒன்று இருக்கிறது. அங்குள்ள சலவைக்கல்லாலான புத்தரின் சிலை மிகவும் பெரிதாகவும், பெருத்த தொந்தியுடனும், புன்சிரிப்புடன் கூடிய முகத்துடனும்

உள்ளது. அது ஒரு பணக்காரச் சீனரால் அக்கோயிலுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அது சீனாவில் தயாரிக்கப்பட்டது. அது சிங்கப்பூரில் கப்பலில் வந்துதிறங்கியபோது கவர்னரே நேரடியாக அதனை ஒரு பெரிய வரவேற்பு வைபவத்தில் பெற்றுக் கொண்டார். அது ஊர் முழுவதும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பிறகு கோவிலில் வைக்கப்பட்டது. ஆனால் அந்த வியாபாரி கவர்னரையும் அந்த நகரத்து மக்களையும் அந்த விழாவின் போது முட்டாள்களாக்கி ஏமாற்றி இருந்தான். ஏனென்றால் பல ஆயிரம் டாலர்கள் பெறுமானமுள்ள கஞ்சா அந்த விக்ரகத்துள் அடைத்தனுப்பப்பட்டிருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகுதான் இந்த உண்மை வெளியாயிற்று. மக்களுக்கும் புத்த பகவானின் புன்சிரிப்புக்கும் பெருத்த வயிற்றுக்கும் உண்மையான காரணம் புரிந்தது.

இந்த மாதிரியான சுவையான பயண விவரம் அவரது நூலில் லண்டன் நகர விவரிப்பிலும் காணப்படுகிறது. இந்த நூலாசிரியருக்கு வேக்ஃபீல்டு டவர் அருங்காட்சியகத்தில் ஒரு நீக்ரோமாதிடம் மோதல் ஏற்பட்டது. அந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த நகைகளின் பளபளப்பில் மனதைப் பறிகொடுத்த அந்தப் பெண், நூலாசிரியரின் கரங்களில் மயங்கி விழுந்தாள். அவர் அவளை தாங்கிப் பிடித்து அருகிலிருந்த சிற்றுண்டி விடுதிக்கு அழைத்துச் சென்றார். அவள் சீக்கிரத்தில் அங்கு குணமடைந்ததாள். ஆனால் இந்தியப் பயணியிடம் ஏற்பட்ட பரிச்சயம் அவ்வளவு சீக்கிரத்தில் முற்றுப்பெறும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. எனவே அவள் தனக்கு தக்க பாதுகாப்பில்லை என்று கூறியபடி அவரை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள். பிறகு இருவரும் அங்குள்ள பூங்காவிற்குச் சென்றனர். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர். அவர் தனது சொந்தச் செலவில் பயணம் செய்வதை அறிந்த அவள். அவர் ஒரு மஹாராஜாவா என்று கேட்டாள். அவரும் தன்னைக் குறைவாகக் காட்டிக் கொள்ளவில்லை. உடனே அவருக்குக் கள்ளிக்கோட்டையில் அவர் அடிக்கடி செல்லும் மஹாராஜா கூல் பார் என்ற கடைநினைவுக்கு வந்தது. எனவே தனக்கு ஒரு மஹாராஜாவிடம் தொடர்பு உண்டு என்று கூறினார். உடனே அவள், அவரது பிறந்த ஊர் ''புதியாரா'' என்று அறிந்து கொண்டு, அவரை

''புதியாராவின் அரசகுமாரன்'' என்று கூப்பிட்டாள். ஆனால் இந்த ராஜகுமாரனோ அவள் பணம் கேட்ட போது இல்லை என்று அவளைத் தவிர்த்துவிட்டார்!

கோலாலம்பூரில் அவர் தங்கியிருந்த போது ஒரு தமிழ்நாட்டுத் தம்பதிகளைச் சந்தித்தார். அவர்கள் ஒரு சீனப் பெண்ணைத் தத்து எடுத்திருந்தனர். பிறகு ஆராய்ந்து பார்த்ததில் சுமார் எட்டாயிரம் சீனப்பெண்கள் ஆண்டுதோறும் மலேயாவில் அவர்களது ஏழைப் பெற்றோர்களால் வெளிநாட்டவர்களுக்கு விற்கப்படுகிறார்கள். என்பதை அவர் புரிந்து கொண்டார்.

பொட்டேக்காட்டின் பயண விவரங்கள் நகைச்சுவையுடன் அமைந்திருக்கும். அத்தகைய நகைச்சுவைக்குக் காரணம், பிரயாணம் செய்பவர்களுக்குப் புதிய சூழ்நிலையில் ஏற்படும் குழப்பங்களேயாகும். ஒருமுறை பொட்டேக்காட் கேதார்நாத் செல்லும்போதுசகபயணி துரை என்பவர் இஞ்சி வாங்க ஒரு கடைக்குச் செல்வதைப் பார்த்தார். தன்னுடன் வந்த நண்பருக்கு இஞ்சி சாப்பிட வேண்டும் என்று ஏற்பட்ட தனியாத ஆசையைக் கவனித்த ஆசிரியர் கடைக்குச் சற்று தள்ளி பொறுமையுடன் நின்று கொண்டிருந்தார். துரைதமிழ்நாட்டைச்சார்ந்தவர். இந்தி தெரியாது. அவர் இஞ்சி என்று தமிழில் கேட்க, அதைக் கடைக்காரர் கிஞ்சி என்று அனுமானித்தார். இந்தியாவில் ''கிஞ்சி'' என்று கூறினால் கத்திரிக் கோலைக் குறிக்கும். எனவே கடைக்காரர்பல வகைப்பட்ட கத்திரிக்கோல்களைக் காட்ட, வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த நூலாசிரியர், கடைக்காரரிடம் இந்தியில் விளக்கி அவரது குழப்பத்தைப் போக்கினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு துரை ஓர் ஒட்டலில் சாப்பிடும்போது, பரிமாறுபவரிடம் சோர் என்று கூறித் தனக்குச் சோறு அல்லது சாதம் வேண்டும் என்றார். தமிழைப் போலவே மலையாளத்திலும் 'சோறு' என்றால் சாதத்தையும், இந்தியில் திருடனையும் குறிக்கும். பரிமாறுபவர் விஷயம் புரியாமல் முகம் சிவந்து பேச்சற்றுப்போனார்! மற்றுமொறு தடவை ஃபின்லாந்தில் பயணம் செய்யும் போது ''ஸானா'' குளியலைப் பற்றி அதிகம் கேள்விப் பட்டிருந்ததால், அதனை அனுபவிக்க வேண்டும் என்று அவரும், அவரது

நண்பர்களும் விரும்பினர். இந்தியர்களை விரும்பும் ஓர் உடற்பயிற்சிச் சாலையின் மேற்பார்வையாளர் அவர்களை அதற்கென்று தனியே அமைக்கப்பட்டிருந்த கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு அதன் நிர்வாகி வந்தவர்களைத் தங்களது ஆடைகளைக் களையச் சொன்னார். சிறிது தயக்கத்துடன் அவர்கள் அவ்வாறு செய்தனர். பிறகு அவர் அவர்களை மரத்தாலான ஓர் இருட்டு அறைக்குள் அழைத்துச் சென்றார். நீராவி நவீன முறையில் வெளிப்படும் வகையில் அங்கு அமைக்கப்பட்டுயிருந்தது. அந்தப் ஃபின்லாந்துக்காரர் அங்கு அரை மணிக்கு மேலாக உட்கார்ந்தவாறு இருந்தார். ஆனால் அங்கு சென்ற இந்தியர்களுக்கோ அந்த நீராவிச் சூட்டைத் தாள முடியவில்லை. என்றாலும் மரியாதை மிக்க அந்த உரிமையாளரின் மனதைப் புண்படுத்த அவர்கள் விரும்பவில்லை. பத்து நிமிஷங்கள் கழித்தும், பொட்டேக்காட் உடம்பெல்லாம் வெந்துபோன நிலையில் அந்த அறையைவிட்டு வெளியேறினார். அவரது நண்பர்களும் அவரைப் பின்பற்றி வரிசையாக வெளியேறினர். அவர்களால் நீராவியால் ஏற்பட்ட எரிச்சலைத் தாங்க முடியவில்லை. அவர்களை அழைத்துச் சென்ற மேற்பார்வையாளர் இதனைக் கண்டு அனுதாபப்பட்டு, அவர்களை அங்கிருந்த குளிர்ந்த நீருற்றில் குளிக்கச் செய்தார்.

பொட்டேக்காட்டுடன் சென்ற நண்பர்களில் மிகவும் ஆசாரமான பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் குஜராத்தைச் சேர்ந்தவர். அவரை நண்பர்கள் செல்லமாக ''மோடிபாய்'' என்று அழைப்பார்கள். அவர் இளமையிலிருந்தே காலை, மாலை நேரங்களில் பூசை செய்து பிறகே சாப்பிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். பூசை முடியாமல் எதுவும் சாப்பிடமாட்டார். நமக்கு இங்கு நள்ளிரவாகும் போது சூரியன் உதிக்கும் நேரம். எனவே அவருக்கு காலை, மாலை எப்படிக் கணக்கிடுவது என்று தெரியவில்லை. பூசை செய்ய முடியவில்லை. பசியும் தாகமும் அதிகரிக்கத் துக்கத்துடன் ஓர் இரவில் சூரியன் மறையும் வரையில் பட்டினியாகக்கிடப்பார். எனவே, அவரது வேலை முடியும் முன்பே இந்தியாவிற்குத் திரும்ப எண்ணினார். ஆனால் ஒரு நண்பர் அவருக்குப் பின்வரும் யோசனையைக் கூறி அவரது முடிவினை மாற்றினார். அவர் மோடிபாய்க்கு, இந்திய நேரப்படி பூசைகளைச் செய்யச் சொல்லி சூரியன் அங்குத் தோன்றி மறையும் நேரங்கள் பற்றிக் கவலைப் படத்தேவையில்லை என்பதை விளக்கினார்.

மோடிபாயும் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டு தனது அலுவலக வேலை முடியும் வரை அங்கு தங்கினார்.

பொட்டேக்காட் வெளிநாட்டில் தங்கியிருக்கும் இந்தியர்களிடம் அதிக ஆர்வம் காட்டினார். அவர் வெளி நாடுகளுக்குச் சென்றபோது அங்குள்ளவர்கள் அவரை அன்புடன் உபசரித்தனர். சிலர் பயணக் களைப்பு தீர அவருடன் துணைசென்றனர். மற்றும் சிலர் அவருக்கு வாகனங்களைக் கொடுத்து முக்கிய இடங்களைச்சென்று பார்க்க உதவினர். அவர்கள் கூறிய கதைகள் அவருக்குப் புது உண்மைகளை வெளிப்படுத்தின. அவருக்கு நண்பர்களான பல வெளிநாட்டு இந்தியர்கள், அவர்கள் அங்கு தங்கிய ஆரம்பக் காலங்களில் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்திருந்தனர். இன்னும் சிலருக்குஅம்மாதிரியான கஷ்டங்கள் ஓய்ந்தபாடில்லை. அநேகம் பேர் வேலையில் இருந்தனர். அல்லது சொந்தத்தில் வியாபாரம் செய்தனர். அப்படி பொட்டேக்காட் பாலித் தீவில் சந்தித்தவர்களில் பண்டிட் நரேந்திர தேவ் சாஸ்திரி என்பவர் ஒருவர். சாஸ்திரி உத்திரப்பிரதேசத்தில் பிறந்து வளர்ந்தவர். அவர் பாலித் தீவில் உள்ளவர்களுக்கு சமஸ்கிருதம் கற்பிக்கவும், இந்து சமய ஆசாரங்களைப் போதிக்கவும் சென்றிருந்தார். ஒரு பணக்கார முதலாளி அவரை வேலையில் அமர்த்தியிருந்தார். அடுத்து மறக்க முடியாத ஆள், திரு. கால். அவரது பெயர் ''இந்தோனேஷிய நாட்குறிப்பு என்ற நூலில் உள்ளது. அவருடைய நட்பு பொட்டேக்காட்டுக்கு ஜாகர்தாவில் ஏற்பட்டது. அவருடைய கால் என்ற பெயரும், அவர் வீட்டிற்கு முன்னால் இருந்த புல்தரையின் பராமரிப்பு முறையும் அவரை ஜாவாவில் தங்கிவிட்ட ஓர் ஐரோப்பியர் என்று தவறாக எண்ண வைத்தது. ஆனால் அவர் கேரளத்திலிருந்து வந்த ''கிருஷ்ணன் எழுத்தச்சன்'' என்று பொட்டேக்காட்டுக்குத் தெரியவந்ததும் அவர் ஆச்சிரியப்பட்டார்.

அவருடைய மனைவி பாதி ஐரோப்பிய மாது. அங்கு அவர் தோல் பதனிடும் தொழிற்சாலை வைத்திருந்தார். ''கால்'' மருந்து விற்பனை செய்து வந்தார். அவருக்கு மலையாளக் கவிதைகள் என்றால் பிரியம் அதிகம். அவர் கேரளத்திலிருந்து வந்திருக்கும் விருந்தாளிக்கு குஞ்சன் நம்பியார், வள்ளத்தோள் ஆகியோரின்

கவிதைகளைக் கூறி மகிழ்விப்பார். அவரது மனைவி நல்ல கேரள உணவு படைப்பார். மலேசியாவில் பொட்டேக்காட் கேரள முஸ்லீம் ஒருவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். விதியின் விளையாட்டால் பாதிக்கப்பட்டவர் அவர். அவரது பிள்ளைகள் எல்லாரும் வசதியாக இருந்தனர்.

அந்த மதிப்பிற்குரிய பெரியவர் மெக்காவுக்குச் சென்றார். அங்கே அவர் இறந்து அங்கேயே புதைக்கப்பட வேண்டும் என்று எண்ணினார். சாவுக்காக அவர் அங்கே பதினோரு வருஷங்கள் காத்திருந்தார். சாவு அவரை அண்டவில்லை. பன்னிரண்டாவது வருஷத்தில், அவரது பேரப்பிள்ளை மெக்காவில் வாழும் தனது தாத்தாவைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரது ஆசியைப் பெறவிரும்பினார். அந்தப் பெரியவரும் பேரப்பிள்ளையின் ஆவலைப் பூர்த்தி செய்ய ஒருமுறை மலேயா வந்துவிட்டு உடனே இரண்டொருமாதத்தில் மெக்காவுக்கு திரும்ப எண்ணினார். ஆனால் விதி அவருடன் விளையாடிவிட்டது. அவர் அங்கு மலேயாவில் இறந்து, அங்கேயே புதைக்கப்பட்டார். மெக்காவில் புதைக்கப்பெறும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவே இல்லை.

ஆப்பிரிக்காப் பற்றிய புத்தகத்தில் காணப்படும் மற்றொரு விநோதமான பாத்திரம் சோமராஜுலு ஆவார். அவர் ஒரு சுமைதூக்கும் தொழிலாளி. அவர் ஆப்பிரிக்காவிலேயே பிறந்து வளர்ந்தவர். அவரது பெற்றோர் ஆப்பிரிக்காவில் குடியேறியவர்கள். அவருக்கு நூலாசிரியரின் சாமான்களைத் தூக்கிச் செல்வதில் அலாதிப் பிரியம். ஒரு நாள் அவர் மிகுந்த தொல்லைகளால் விரத்தியடைந்தவர் போல் காணப்பட்டார். புதியவர்களிடம் அதுபற்றிப் பேசத் தயங்கினார். சிறுவயதில் அவர் ஒருமுறை இந்தியாவுக்கு வந்திருக்கிறார். பொட்டேக்காட் தென்னாட்டைச் சார்ந்தவர் என்பதைப் அறிந்ததும் அவருக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த இளைஞர், வந்திருக்கும் இந்தியப் பயணிகளில் ஒருவராவது தனது கவலையை மாற்ற வழி கூறுவார் என்று எண்ணினார். எனவே, அவர் நூலாசிரியரை அணுகி இந்தியாவிலிருக்கும் ஒரு மந்திரவாதியிடம் சென்று அவரது தொல்லைகளெல்லாம் நீங்கும் வகையில் ஒரு செப்புத் தாயத்து வாங்கிவரும்படி கேட்டுக் கொண்டார். சோமராஜுலுவுக்குத்

தாயத்துகளின் மேலிருந்த நம்பிக்கை அநேக வெளிநாட்டுக்காரர்கள் இந்தியர் பற்றி\ கொண்டிருந்த எண்ணத்தைச் சுட்டிக்காட்டுவது போலிருந்தது.

பொட்டேக்காட் ஒரு போதும் தவறான அபிப்பிராயம் கொள்ளமாட்டார். கலாச்சாரத் தடைகளையும் மீறி அவர் எதையும் சிந்திப்பவர். அதே சமயம் தன்னைச் சுற்றியுள்ளவற்றைப் பார்த்து உணர்ச்சி வசப்படாமல் நிதானத்துடன் நடந்து கொள்வார். ஒருவர் நீக்ரோ என்று எண்ணாமல் அவரது சமூக, பொருளாதார விஷயங்களைச் சரித்திர ரீதியில் புரிந்து கொள்ள முயல்வார். அதே சமயம் ஐரோப்பியர் என்றால் வணங்கிப் போகும் மனோநிலையைப் / பெற்றவர் அல்ல.

பாரபட்சமில்லாமல் தனக்குப் பட்டதை அப்படியே குறித்துள்ளார். ஒரு நாள் அவர் லண்டன் போய் இறங்கியதும் அவருக்கு ஒரு கசப்பான அனுபவம் ஏற்பட்டது. ''ரஸல்ஸ்கொயர்'' என்ற இடத்திலுள்ள ஓர் ஓட்டலுக்கு தங்குவதற்கு அறை வேண்டிப் போனார். அங்கு அறைகள் காலியுள்ளன என்று பலகையில் எழுதப்பட்டிருந்தும், அவருக்கு அறை காலி இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஏமாற்றத்துடன் அவர் அங்கிருந்து நகர்ந்தார். அதே சமயத்தில் அவரைத் தாண்டிச் சென்ற ஐரோப்பியர் ஒருவரைக் கண்டதும் அவரை அழைத்து '' அந்த ஓட்டலில் எல்லா அறைகளும் நிரம்பிவிட்டன'' என்று கூறினார். ஆனால் அந்தப் புதியவர் அவர் கூறியது பற்றிச் சட்டை செய்யாமல் அந்த ஓட்டலுக்குள் நுழைந்தார். அவர் திரும்பட்டும், பின்னர் இருவருமாக வேறு ஓட்டலில் அறையைத் தேடலாம் என்ற எண்ணத்துடன் பொட்டேக்காட் அங்கேயே காத்திருந்தார். ஒரு மணி நேரம் ஆகியும் அந்த ஆள் திரும்பிவரவில்லை. பிறகுதான் அவருக்கு, வெள்ளைக்காரர்களுக்கு மட்டும் தான் அந்த ஓட்டலில் தங்குவதற்கு அறை தருவார்கள் என்ற விஷயம் புரிந்தது. என்றாலும் அவருக்கு லண்டன் வாசிகள் மீது தப்பான எண்ணம் ஏற்படவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு ''ஹைட்பார்க்'' என்ற இடத்தில் சிற்சில பகுதிகளில் சிலர் ஆவேசத்துடன் பேசுவதைக் கண்டார். சிறு கூட்டமும் அவர்களுக்கு முன் இருந்தது. ஒருவன் சர்ச்சுக்கு எதிராக நீண்ட பிரசங்கம் செய்தான். ஒரு நீக்ரோ

ஆங்கிலேயரின் நிறபேதம் காட்டும் செயலைக் கண்டித்துப் பேசினான். அக்கூட்டத்தில் சில ஆங்கிலேயரும் இருந்தனர். அவன் ''பிரிட்டிஷ் நாய்கள்'' என்று கூறிய போதும், அங்கிருந்த ஆங்கிலேயர் கையைத் தட்டி அவனது பேச்சை ஆமோதித்தனர். இங்கிலாந்து நாட்டில் இருந்த பேச்சுரிமையை பொட்டேக்காட் மிகவும் பாராட்டினார். மேலும் அவர்கள் பலதரப்பட்ட கொள்கைகளை உடையவர்களாக இருந்த போதும் மிகவும் குறுகிய மனம் படைத்த பியூரிட்டன்களாக இருந்தாலும் அன்றி தீவிரமான சுயேச்சையாளராக இருந்தாலும் ஒரு தேசத்து மக்களாகக் காட்டிக் கொள்வதை அவர் மிகவும் விரும்பினார்.

பொட்டேக்காட்டின் பார்வை மற்ற மக்களின் கலாச்சாரத்தை மிகுந்த கற்பனையுடனும் கவலையுடனும் நோக்குவதாக இருந்தாலும் அவர் அடிப்படையில் ஒரு கேரள எழுத்தாளராகவே இருந்தார். அவர் எங்கு சென்றாலும் கேரளமும் கூடவே சென்றது. ஹரித்துவாரத்தில் கங்கையில் இலைகளில் வைத்து விடப்படும் தீபங்களைக் கவனிக்கும் போது, அவருக்கு சபரிமலை செல்லும் பக்தர்கள் திரிவேணியில் மிதக்கவிடும் விளக்குகள் நினைவுக்கு வரும். வீடு திரும்பும் எண்ணம் கூடவே வரும். ரிஷிகேசத்தையும் பத்திரிநாத்தையும் இணைக்கும் சேதாக் சாலையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது அவருக்கு வயநாட்டில், வைத்திரி ரோட்டில் செல்வது நினைவுக்கு வரும். ஆப்பிரிக்காவில் விக்டோரியா நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஒரு மலைமுகடு பாதாளத்தை நோக்கிய படி இருக்கிறது. அதிலுள்ள ஒரு செங்குத்தான பாறையில் ஒரு காலடிச்சுவடு உள்ளது. ஆப்பிரிக்கர்கள் அது ஏவாளின் காலடி என்பதாக நம்புகின்றனர். அதனைக் கண்ட அவரது எண்ணம் அங்கிருந்து பம்பா நதிக்கரைக்கு தாவுகிறது. அங்குள்ள காலடியை ராமபிரானின் காலடி என யாத்திரிகர்கள் நம்புகிறார்கள். விக்டோரியா நீர்வீழ்ச்சியின் சப்தத்தில் அவர் மயங்கி இருந்தாலும் அவருக்கு கேரளத்தின் நினைவு ஒரு பச்சைக் கிளி உருவில் ஏற்படுகின்றது. அங்கு தண்ணீர் பத்து அல்லது பதினைந்து அடி உயரத்துக்கு மோதித் திரும்புகிறது. இது ஆசிரியருக்க கேரள நாட்டில் பருவ மழையில் நனைவது போல் தெரிகிறது. பாலித் தீவு அவரைக் கவர்ந்ததன் காரணம், அது அவரது தாய் நாட்டைப் போல

காணப்பட்டதேயாகும். அங்குள்ள நிலம், மக்கள் வாழ்க்கை முதலியன கேரளத்தை அவருக்கு நினைவூட்டின.

பொட்டேக்காட் ஒரு பயணியாக வெற்றி பெற்றதன் காரணம் அவர் எந்த விதமான அபாயத்தையும் ஏற்கத் தயாராக இருந்ததுதான். அவர் சாதாரணமாக இடங்களையோ அல்லது மக்களையோ மட்டும் அறிந்து கொள்ள விரும்பவில்லை. அவர் ஒரு நாட்டின் ஆன்ம நேயத்தில் லயிக்கும் வரை அங்கு இருப்பார்.

அவர் பலதரப்பட்ட விஷயங்களை அறியும் பண்பாளர். சரித்திரத்தை ஆர்வத்துடன் படிப்பவர். சமுதாயங்களை ஊன்றிக் கவனிப்பவர். பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றை நேசிப்பார். கற்பனா சக்தியுள்ள எழுத்தாளர். ஆப்பிரிக்காவில் அவர் ஒரு விலங்கியல் அறிஞர். ஐரோப்பியாவில் அவர் ஒரு சரித்திர ஆசிரியர். மலேசியாவில் சமூக அறிவியலாளர். எங்கு சென்றாலும் அவர் ஒரு கேரளத்துக்காரர்.

4. நாடக மேடைச் சந்திப்புகள்.

நாவல் ஆசிரியர்களின் எழுத்துப் போக்கில் சில சமயங்களில் கற்பனை அல்லது கதை சொல்லும் முறையில் தேக்கம் ஏற்படுவது உண்டு. அச்சடிக்கப்பட்ட பக்கங்களில், நீண்டு வளைக்கப்பட்ட, ஒழுங்கற்ற வாக்கியங்களை எழுதுவதில் அவர்கள் திருப்தி அடைவதில்லை. நிகழ்காலத்தை உடனடியாக, கடந்தகால அல்லது எதிர்கால பார்வைக்காட்சிகளாக வெளிப்படுத்த விரும்புகின்றனர். அவர்களது கதாப்பாத்திரங்கள் புத்தகத்தின் பக்கங்களிலிருந்து குதித்து வெளிவந்து காட்சி அரங்குகளில் நிரம்புவதை அவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். மலையாள இலக்கியத்தில் நாடக அரங்கு மோகம் நாவலாசிரியர்களுக்கு அதிகமாகிக் கொண்டுவருகிறது. உரூப், பஷீர், பொட்டேக்காட் ஆகியோரும் நாடகத்தின் வசிய சக்தியால் ஆட்கொள்ளப்பட்டனர்.

பொட்டேக்காட் நான்கு நாடகங்களை எழுதியிருக்கிறார். ''அச்சன்''(தகப்பனார்) என்ற முழு நாடகமும், ''தீவண்டி ஓடுன்னு'' (ரயில் வண்டு ஓடுகிறது), '' அல்தாரா'', ''அச்சனும் மகனும்'' (தந்தையும் மகனும்) என்ற ஓரங்க நாடகங்களும் அவரால் எழுதப்பட்டிருக்கின்றன.

''அச்சன்'' நாடகம் ஒரு துன்பியல் நாடகம். ஒரு கடின மனங்கொண்ட ஒரு மனிதனின் மனதில் ஏற்படும் மாற்றங்களை

அது, விளக்குகின்றது. பழிவாங்கும் உணர்வையும், காணாமல் போன மகன் எதிர்பாராத நேரத்தில் திரும்பி வரும் பாங்கையும் இணைக்கும் கருத்துடன் எழுதப்பட்டது. பரமேஸ்வரன் நாயர் ஓர் இரக்கமற்ற கொடுமையான ஓய்வு பெற்ற போலீஸ் சூப்பரின்டென்டென்ட். ஆபீஸர் கிளப்பில் உணவைத் திருடியதாகப் பிடிக்கப்பட்ட சிறுவனை அடித்தும், தனது பூட்ஸ் காலால் உதைத்தும் துன்புறுத்துகிறார். பிறகு அவன்தான் தனது காணாமல் போன மகன் என்பதை அறிந்து மிகவும் வருந்துகிறார். அந்த போலீஸ் அதிகாரியின் மீது பழிவாங்க நினைத்த ஒரு கிழவன் இவரது குழந்தையைக் கடத்திச் சென்றதை அக்கிழவன் சாகும் தருவாயில் கூறுகிறான். அக்கிழவனின் மகனை அந்தப் போலீஸ் அதிகாரி ஜெயிலில் துன்புறுத்தவே அவன் இறக்கிறான். ஆனால் அவன் தற்கொலை செய்து கொண்டான் என்று நம்பவைக்கப்படுகிறது. கிழவன் பின்னர் உண்மையைக் கூறியதும் அந்த ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி, நோயுற்று அவதிப்படும் தன் மகனைத் தெருவோரத்தில் தேடிக் கண்டுபிடிக்கிறார். பையனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோதும், டாக்டர்களால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை. கதையின் முக்கியத் திருப்பம், நாடகத்தின் முக்கிய கதாபாத்திரத்தின் கொடுமையால் ஏற்படும் திடீர் மாற்றமாகும். அவரது கொடுமை அவரையே திருப்பி வீழ்த்தியது.

நாடகம் மூன்று களங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு களங்களும் மூன்று, மூன்று காட்சிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது ஆறு காட்சிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆவலைத் தூண்டும் உத்தி காட்சிகளுக்கு வலுவூட்டுகின்றது. உயர் வகுப்பு மக்களின் குடி முதலிய பழக்கங்கள்கொண்ட ஆடம்பரவாழ்க்கையும், தெருவோரங்களின் அவல நிலையும் சித்திரிக்கப்பட்டுள்ளன. பரமேஸ்வரன் நாயரின் பாத்திரம் சீக்கிரமாக மாறும் மனநிலை கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. ''தீவண்டி ஓடுன்னு'' (ரயில் வண்டி ஓடுகிறது) ஒரு வானொலி நாடகமாகும். அது ''அச்சன்'' (தகப்பனார்) போன்று திடீர்திருப்பத்தைக்கொண்டதாகும். ஆனால் வேறுபட்ட அமைப்பைக் கொண்டது. அந்த நாடகத்தில் மூன்றே கதாபாத்திரங்கள் ஐம்பது வயதான பேராசிரியர் ஒருவர் அவரது

இளம் மனைவி லலிதா, அவரது ஆராய்ச்சி மாணவன் சுரேந்திரன். அவன் லலிதாவைக் காதலிக்கிறான்.

காட்சி ரயில் வண்டியில் ஆரம்பிக்கிறது. லலிதாவும் சுரேந்திரனும் பேராசிரியரின் ஆராய்ச்சிக் கூடம் இருக்கும் ஒரு குகைக்கிராமத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். பேராசிரியர் சாதாரண உலோகங்ளைப் பொன்னாக்கும் ரசவாதத்தில் வெற்றி பெற்றதாகக் கூறுகிறார். அவர் அந்தக் குகையை அடையும் சரியானவழியைக் கூறுகிறார். பிரயாணத்தின் போது லலிதாவும் சுரேந்திரனும் பேராசிரியரை ஏமாற்றுவதை உணர்ந்து, அந்தக் குற்ற உணர்வால் வாடுகின்றனர். என்றாலும் தங்களது தொடர்பை முடித்துக் கொள்ள நினைக்கவில்லை. மாறாக, காதல் உணர்ச்சி இயற்கையானது என்றும், எனவே தங்களது முடிவு சரியானது என்றும் நியாயப்படுத்துகின்றனர். அந்த வண்டியில் இருக்கும் மற்ற ஒரே பயணி, ஆழ்ந்த தூக்கத்தில் குறட்டைவிடும் ஒரு சீக்கியர்தான். ஒரு கிழவன் ரயில் நிலையத்தில் அவர்களை வரவேற்று, அந்தக் குகைக்கு அழைத்துச் சென்றான். அங்கு சென்றதும், ரயிலில் குறட்டை விட்டுக்கொண்டு தூங்கிக்கொண்டு வந்த சீக்கியர்தான் பேராசிரியர் என்பதை அறிந்ததும் அவர்கள் அதிர்ச்சியடைகின்றனர். அதற்கு மேலும் தங்களை அழைத்துக்கொண்டு கிழவர் வேடத்தில் வந்தவரும் பேராசிரியரே என்பதை அறிந்ததும், அவர்களது அதிர்ச்சி அதிகமாகிறது. பேராசிரியரின் நிலை ஓங்கி நிற்கிறது. தனது பரிசோதனையின் வெற்றியைக் காட்ட அவர் ஒரு வெள்ளிக் காசை ஒரு கரைசலில் போடுகிறார். அது பொன்னாகிறது! மேலும் அவர், அந்த குகையில் இருக்கும் பிராணவாயு இன்னும் ஒன்றரைமணி நேரத்திற்குத்தான் இருக்கும் என்றும், அக்குகையிலிருந்து ஒருவர் மட்டும் தப்பிக்க வழி இருக்கிறது என்றும் கூறுகின்றார். தப்புகின்ற அந்த ஒருவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை அந்தப் பெண்ணிடம் விட்டுவிடுகின்றார். குகை இருட்டாகி விடுகின்றது. மீண்டும் வெளிச்சம் வரும் போது அந்தப் பெண் அங்கு இல்லை. அவள் பேராசிரியரின் ரசவாதக் கரைசலை திருடிக்கொண்டு மறைந்துவிடுகிறாள். ரசவாதப் பரிசோதனை, கரைசல் எல்லாம், அவனது மனைவியை ஏமாற்ற ஏற்படுத்தப்பட்டவையாகும் என்று

பேராசிரியர் தனது மாணவனுக்கு விளக்குகின்றார். அவ
உண்மையான பரிசோதனை அவனது மனைவியைப் பற்றியதாக
அவள் தனது உண்மைச் சொரூபத்தைக் காட்டிவிட்டாள்.
உயிருக்குச் சோதனைக் காலம் ஏற்பட்டபோது, தனது கணவ
காதலனும் ஆன அவர்களை விட்டுவிட்டு, பணம் சம்பாதி
கரைசலுடன் ஓடிவிட்டாள் என்றும் அவர் விளக்குகின்றார்.

*

ரயில் பயணம், குகையில் ஏற்பட்ட திருப்பங்கள், வாழ்வுக்
சாவுக்கும் ஏற்பட்ட போராட்டங்கள் முதலியன ஒரு நேர்மைய
நாடகத்தை ஆக்கித் தந்தாலும் கதையின் கருப்பொருள் பெண்
மீது கற்பிக்கப்பட்ட வேடிக்கைச் செயலையே குறிக்கின்ற
ஆனால் பெண் ஆய்வாளர்கள் அதனை அப்படி ஒரு வேடிக்
நாடகமாகக் கொள்வதில்லை. நாடகத்தின் கடைசி நிமிஷங்
திருப்புமுனையாக இருப்பதால் எதிர் உச்சக்கட்டமாக அமை
நாடகத்தைக் காப்பாற்றுகின்றன. அந்தப் பெண் மறைந்து போன
நாடகத்தின் சரியான விறுவிறுப்பும் மர்மமும் குறை
விடுகின்றன. இரண்டு ஆண்களின் போராட்டமும் முடிவு
வருகிறது. இருவரும் காமத்துக்கும் துரோகத்துக்
பலியானவர்கள். பெண் அவர்களை ஏமாற்றியதாக நினைக்கிற
ஆனால் ஆண்கள் அவள் யார் என்பதை அறிந்துகொண்டனர்.

"அச்சனும் மகனும்" (தந்தையும் மகனும்) என்ற ஓர
நாடகம் ஆசிரியரின் தேசப் பற்றின் அடிப்படை
எழுதப்பட்டதாகும். அது இந்தியா சுதந்திரம் அடைந்து பாகிஸ்த
பிரிந்த பிறகு இரண்டு மாதங்களில் காஷ்மீர், ஸ்ரீநகரில்
நடந்ததாக எழுதப்பட்டுள்ளது. அந்த நேரம் ஸ்ரீநகரில் அராஜ
தலை தூக்கியிருந்தது. காஷ்மீரத்தின் இந்து அரசர் புதிதாக ஏற்ப
இந்திய டொமினியனில் சேர விரும்பவில்ல
முடியாட்சியிலிருந்து காஷ்மீரை மீட்க ஷேக் அப்துல்லா போ
தேசியவாதிகள் கலகம் விளைவித்தனர். அரசரது படைகள் அ
கலகத்தில் பங்கு கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்க
கொன்றனர். பாகிஸ்தானோ காஷ்மீரில் ஏற்பட்ட அரசி
குழப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஆதாயம் தே

முனைந்தது. பட்டாணியர்களைத் தூண்டிவிட்டு எல்லைப்புற நகரங்களையும் கிராமங்களையும் கொள்ளையடிக்கச் செய்து மக்களிடையே பயத்தை ஏற்படுத்தியது.

நாடகத்தின்கதாப்பாத்திரங்கள் அப்போது இருந்த அரசியலில் பங்கு கொண்டவர்களின் எண்ணங்களின் பிரதிபலிப்பாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, காஸிம் மொல்லா, ஒரு மத வெறியர்; அவர் பட்டாணியர்களை வரவேற்று, இந்துக்களைக் கொலை செய்ய உதவி செய்கிறார். அடுத்த பாத்திரம் முராத். அவரைச் சுற்றியுள்ள பலவகையான அரசியல்வாதிகளால் குழப்பத்திற்கு உள்ளாக்கப்படுகிறார். அவர் காஷ்மீரின் எதிர்காலத்தைக் குறித்துக் கவலைப்படுகிறார். முக்கிய கதாபாத்திரம் ஹுஸ்ஸேன். அறுபது வயதானவர். அவரது மகன் காமருதீன் காணாமல் போனதால் கவலை கொள்கிறார். அவர் குறுகிய எண்ணங்கொண்ட காசிம் போன்ற வகுப்புவாதிகளை இகழ்பவர். ஆழ்ந்த தேசப்பற்று காரணமாக, ஷேக் அப்துல்லா போன்ற தலைவர்களுடன் ஒத்துழைக்கிறார். இந்திய விமானப் படையைச்சார்ந்த சில விமானங்கள் ஸ்ரீநகரில் வந்து இறங்கியதும் நிம்மதியான மூச்சு விடுகிறார். இதற்கிடையில் பட்டாணியர்கள் நகரில்நுழைந்து தெருக்களைக் கொள்ளையடிக்கின்றனர். அவர்கள் ஹுஸ்ஸேனின் கண்களைக் கத்தியால் குத்திக் / குருடாக்கி விடுகின்றனர். அவர் மயங்கி நடுப்பாதையில் கிடந்தபோது, நீண்ட காலமாகக் காணாமல் போயிருந்த அவரது மகன் அங்கு தோன்றுகிறான். ஆனால் தந்தையோ, மகனைக்காணமுடியாமல் குருடாக இருக்கிறார். அவர் வாழ்க்கை சூன்யமாக்கப் பட்டுவிட்டது; என்றாலும் அவர் இறக்கும் முன் ஒரு கொள்ளைக்காரனையாவது கொல்ல விரும்புகிறார். அப்போது அங்கு வந்த காமருதீன், தான் ஒரு கொள்ளைக் காரப்பட்டாணியனைப் பிடித்து வந்திருப்பதாகக் கூறுகின்றான். அதைக்கேட்ட ஹுஸ்ஸேன் அந்தப் பட்டாணியனைச்சுடும்போது அவரது மகன் தனது மார்பைக் காட்டுகிறான். இறக்கும் போது அவன், தனது தந்தையிடம், தான் பட்டாணியர்களுடன் சேர்ந்துகொண்டு காஷ்மீரைக் காட்டிக் கொடுத்ததாக் கூறி அவரிடம் மன்னிப்பு கேட்கிறான். இந்த நாடகம் ஆசிரியரின் காஷ்மீர் பற்றிய முழு அரசியல் ஞானத்தை வெளிப்படுத்துகிறது. குடிசைகள்,

பழக்கடைகள், நடைபாதைகள் முதலியன பின் திரைகளா நாடகத்தில் காட்டப்படுகின்றன. அது ஒருவருக்கு இன்பிய நாடகமாகக்கூடத் தோன்றலாம். குற்றஉணர்வு மேலிட்ட மகள்த உயிரைக் கொடுத்து பரிகாரம் தேடிக்கொண்ட காட்சி அவசரமா எழுதப்பட்டிருப்பதால் அவ்வளவு சிறப்பாக அமையவில்லை இந்த நாடகம், அந்தக் காலக் கட்டத்தை விளக் எழுதப்பட்டிருப்பதால். படிப்பதற்கு ஏற்றது.

'' அல்தாரா'' ஒரு வானொலி நாடகம். பல கொடுமையா செயல்களை விளக்குகிறது. காதலும் பழிவாங்கும்\எண்ணமு இக்கதையில் பின்னப்பட்டுள்ளன. ஒன்றன்பின் ஒன்றாக கொலைகள் தொடர்ந்து வருகின்றன. இந்த நாடகம் மூன் காட்சிகளைக் கொண்டது. இறுதியில ஒரு கொலையில் முடிகிறது ஓர் இளைஞன் தனது சகோதரியின் காதலனைக் கொல்கிறான் இதனால் அவள் மனம் முறிந்து தற்கொலை செய்து கொள்கிறாள் போலீஸாரிடம் இருந்து தப்பிக்க அவன் மற்றொரு பெண்ணி அறையில் தஞ்சம் புகுகிறான். அவள் அவனால் கொலை செய்யப்பட்ட காதலனின் சகோதரி. பின்பு அந்தக் கொலைகார சில ஆண்டுகள் கழித்து மீண்டும் அதே பெண்ணிடம் திரும்ப வருகிறான். அவள் அவனைக் காதலிப்பதுபோல் நடிக்கிறாள். ஒ நாள் இரவுச் சந்திப்பின்போது, தனது சகோதரனை கொன்றதற்காகப் பழிவாங்க அவனைக் கொன்றுவிடுகிறாள். இந் நாடகம் அடிப்படையில் ''ஸெநேகான் துன்பியல்'' (Senecan Trag edy) வகையைச் சார்ந்தது. நாடக ஆசிரியர் முழுக்க முழுக் பின்னோக்கு (Flash Back) உத்தியைக் கையாண்டிருக்கிறார். இ வானொலி நாடகமாக இருப்பதால் சிறப்பாக அமைந்துள்ளது.

பொட்டேக்காட்டின் நாடகங்கள் அவரது சிறுகதைகளி துணை விளைவுகளாகும். அக்கதைகளில் மனவெழுச்சியும் அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பும் அதிகமாக இருக்கு ஒரு கருத்தைக் கதை மூலம் சொல்லாமல், நாடகம் மூல சொல்வதில் பொட்டேக்காட் ஒரு மாறுதலுக்கு முயற் செய்திருக்கிறார் என்று கூறலாம். அடிப்படைக் கொள்கை வாதத்தால் உந்தப்பட்டு மனவெழுச்சியூட்டும் நாடகங்களை தனது ரசிகர்களுக்காக அவர் எழுதியிருக்கிறார் என்று கூறலாம்.

5. கவிஞனும் கூட

கவிதைதான் பொட்டேக்காட்டின் முதல் காதலி. இலக்கிய உலகில் ''பிரபாத காந்தி'' என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் அவர் அறிமுகமானார். அவரது சுய சரிதைப்புதினம் ஒரு வட்டாரத்தின் கதை மட்டும் அல்ல. அது ஒரு கவிஞரின் வளர்ச்சியையும் காட்டுவதாகும்.

பொட்டேக்காட் உரைநடையில் தனது அனுபவங்களைக் கூறுவதில் மட்டும் திருப்தியடையவில்லை. தனது வாழ்வில் ஏற்பட்ட பரவசங்களைக் கவிதையில் தருவதற்கு அவர் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் அவரால் சிறுகதைகளைத் தந்த அளவிற்குக் கவிதைகளைத் தரமுடியவில்லை அவரால் மூன்று கவிதைத் தொகுப்புகளை மட்டுமே வெளியிட முடிந்தது. ''பிரபாத காந்தி'', ''பிரேம சில்பி'', ''சஞ்சாரியுடே கீதங்கள்'' ஆகியவையே அம்மூன்று தொகுப்புகள். கவிதைக்கு அவர் பூஜிக்கத் தக்க புனிதத் தன்மையைக் கொடுத்தார். கவிதை எழுதுவது என்பது அவருக்கு ஒரு கோவிலுக்குள் போவது அல்லது மலை உச்சிக்குச் செல்வது போன்ற செயலுக்கு ஒப்பாகும்.

இந்திய தேசிய காங்கிரசின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் போது நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் கலந்துகொண்டு தனது 24வது வயதில் முதல் பரிசைப் பெற்றார்.

வெகு நாட்களுக்குப் பின் அது பற்றி அவர் கூறும்போது, அவருக்கு அந்த முதல் பரிசு கிடைத்ததே வெறும் அதிர்ஷ்டத்தால் தான் என்றார். அந்தப் போட்டியில் கவிதைத் துறையில் வல்லவர் ஒருவரும் கலந்து கொண்டார். அதிர்ஷ்டவசமாக, அவருக்குக் காது சரியாக கேளாததால் ''சர்க்கா'' என்ற கவிதையின் கருவை, ''சக்கா'' (பலாப்பழம்) என்று தவறாக எடுத்துக்கொண்டு கவிதை எழுதியதில், பொட்டேக்காட் வெற்றி பெற்றார். தகுதியுடையவர் தோற்றார்.

பொட்டேக்காட்டின் கவிதைகள் சாதரணமாகவும், நேரிடையாகக் கருத்தைக் கூறுபவையாகவும் இருக்கும். அவரது கவிதைகளில் கேலிப்பொருள், மறைபொருள், வஞ்சப் புகழ்ச்சி முதலியன எதுவாக இருந்தாலும் நேரடியாகவே இருக்கும். '' ''அங்கதப் பொருள்'' அவரைக் கவரவில்லை. கவிதையில் கருப்பொருளையும் நுணுக்கங்களையும் அவர் குறிப்பிட்ட அளவில்தான் எழுதினார். கவிதையில் உயர்ந்த எண்ணங்களும், நடையும் இருக்கவேண்டும் என்று அவர் விரும்புவார். கவிதைகளில் சமஸ்கிருத வார்த்தைகளை அதிகம் உபயோகிப்பார். '' பிரத- ஸந்தியா- ஸுகந்தி'', '' மஞ்சுபுஷ்கர மஞ்சுஷா'', ''கைரவ குக்மால சூக்ஷ்ம தசாந்தரே'' முதலிய சொற்களில் '' ஸமஸ்த பதங்கள்'' குறிக்கப்பட்டுள்ளன. இப்படி எழுதுவது அவருக்குப் புதிது அல்ல. உள்ளூர், சங்கரகுருப் முதலியோர் கையாண்ட பாணியையே அவரும் பின்பற்றினார். அவர் முதன் முதலில் வெளியிட்ட கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் ''தாலாட்டு'', ''வஞ்சிப் பாட்டு'' ஆகிய மெட்டுகளில் இருந்தாலும், ''கேகா'', ''மஞ்சரி'' போன்ற யாப்பு வகைகளே அவரது கவிதைகளில் மேலோங்கி இருக்கின்றன. அதிகமான கவிதைகள் இசைக் காவியங்களாக இருக்கின்றன. அவரது கவிதைகளில் காதல், தேசப்பற்று, இயற்கை அழகு முதலியன திரும்பத் திரும்ப வரும். அவர் ஒரு கற்பனை வளம் கொண்ட கவிஞர். அவரது சிறு கதைகளின் தலைப்புகளே அதனைக் கூறும். உதாரணத்துக்கு,'' ''நிஷாகந்தி'', ''ராஜமல்லி'', ''ஹிமவாஹினி'', ''வனகௌமுதி'' ஆகியவற்றைக் கூறலாம். அவரது மூன்று தொகுப்புகளிலும் இயற்கையின் அழகை வர்ணித்திருப்பதைக் காணலாம். உதாரணத்துக்கு, ஒரு கவிதையில், சூரிய வெப்பத்தால் கொதிக்க

வைக்கப்பட்டு, ஆகாயப் பாலிலிருந்து, இரவுப் பெண்ணால் எடுக்கப்பட்ட வெண்ணெய்தான் நிலவு என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. அதோடு மற்றொரு இசைக்காவியத்தில், நட்சத்திர எழுத்துக்களால் எழுதப்பட்ட கவிதையாக ஆகாயம் வர்ணிக்கப்பட்டுள்ளது. மற்றோர் இடத்தில் அந்தி வெளிச்சமானது, சிவந்த காவியுடையணிந்த பக்தன் ஆகாயக் கோவிலுக்குள் போவதுபோல் நுழைகிறது என்கிறார். மேலும், சமுத்திர கஜானாவுக்குள் விழுகின்ற வெள்ளி நாணயம் போன்றது என்றும் கூறுகின்றார். அவர் ஒரு வெல்ல முடியாத நன்னம்பிக்கைக் கொள்கையுள்ள கவிஞர்.

''மரண வாசனையின் கலப்பு
வெற்றுச் சட்டங்கள்
பயனற்ற கனவுகள்-
இவையே இல்வாழ்க்கை
என்றாலும் எனக்கு
இல்வாழ்க்கை இனிக்கிறது!''

இன்னொரு கவிதையில் அவர் கூறுகிறார்:-

'' மழைக்கால வானத்தை
மூடுவது மேகம் மட்டுமல்ல
வானவில்லும் கூட''

அவரது இரண்டாவது, மூன்றாவது கவிதைத் தொகுப்புகளில் அவரது பிரயாண அனுபவங்களின் பரவச நிலைகள் கூறப்பட்டுள்ளன. காஷ்மீரத்தின் பனி மூடிய மலைகள், கைகளில் தேவதைகளுக்கு அர்ப்பணித்திட வைத்திருக்கும் பொருள்களுடன் நடனமாடும் பாலித் தீவின் பெண்கள், டான்யூப் நதிக்கரையில் தங்கியிருக்கும் நாடோடிக் கும்பல் ஆகியவை அவரது கற்பனையைத் தூண்டுகின்றன. டான்யூப் நதிக்கரையில் வளர்ந்திருந்த பைன் மரங்கள் நிமிர்ந்து கொழுந்துவிட்டெரியும் வத்திகளாக அவருக்குத் தெரிகின்றன. அவருக்குத் தாஜ்மகால் நிலா

வெளிச்சத்தில் உறைந்து போன மிருதுவான காதல் கனவாகத் தெரிகிறது.

அவர் எழுதிய கதைக் காவியங்களில் மிகவும் புகழ்பெற்றது '' பிரேம சில்பி'' யாகும். அது தைமூர் காலத்து சரித்திரப் பின்னணியைக் கொண்டது. தைமூர், அவனது பட்டத்தரசி, ஒரு சிற்பி ஆகிய மூன்று பேரை மையமாக வைத்து எழுதப்பட்டது. தைமூரின் ராணி, தன் காதலின் சின்னமாக, அவனுக்கு ஒரு மாளிகையை நிர்மாணிக்க விரும்புகிறாள். தேர்ந்த சிற்பி ஒருவனை அப்பணிக்காக அமர்த்துகிறாள். தனது திக்விஜயத்திலிருந்து தைமூர் திரும்புவதற்குள் அக்கட்டிடத்தைக் கட்டுவித்து முடிக்க வேண்டும் என அவள் சிற்பிக்கு ஆணையிடுகிறாள். உமர் என்ற அந்த சிற்பியோ இளைஞன். அந்த அரசியின் அழகில் தன்னை இழக்கிறான். அதனால் அவன் தடுக்க முடியாதவாறு காதல் கவலையால் ஆட்கொள்ளப்படுகிறான். ஆதனால் வேலை தாமதமாகிறது. அரசி அவனை அழைத்துத் தாமதத்திற்கான காரணத்தைத் கேட்கிறாள். உண்மை நிலையை விளக்கியதும் அரசி குழப்பமடைகிறாள். ஒரு நாள் மாலை அரசி அவனை அழைத்து, அரண்மனையைச் சீக்கிரத்தில் முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையைக் கூறி, அவன் தனது கன்னத்தில் முத்தமிட அனுமதிக்கிறாள். உமர் தனது வாக்கைக் காப்பாற்றுகிறான். தைமூர் வெற்றியுடன் திரும்பி வந்ததும் தனக்காக கட்டப்பட்ட காதல் மாளிகையை கண்டுப் வியப்படைகிறான். தனது முதலிரவை ராணியுடன் அந்த மாளிகையில் கழிக்கிறான். அப்போது அவளது கன்னத்தில் ஒரு கறுப்பு அடையாளக்குறி இருப்பதைக் காண்கிறான். அது சிற்பியால் அதிக உணர்ச்சியுடன் இடப்பட்ட முத்தத்தால் ஏற்பட்ட அழியாத குறியாகும். அவள் உண்மையைக் கூறுகிறாள். இதனால் கோபமடைந்த தைமூர் அந்தச் சிற்பியை அழைத்து வரும்படி உத்திரவிடுகிறான்.

உமரும், அவனது மாணாக்கனுமான ஒரு பையனும் அந்த அரண்மனைக்கு வருகின்றனர். தைமூரின் படுக்கை அறைக்குச் செல்லும் படிகளில் ஏறிக் கொண்டிருக்கும் போது உமர் திடீரென்று மறைந்து போகிறான். அரசனுக்கு அந்த பையன் திடீர் என்று ஏற்பட்ட அதிசயத்தை விளக்குகிறான். உமர் அந்த அரண்மனையின்

அடித்தளத்தில் தனக்கென்று ஒரு சமாதி அமைத்து அதற்கு ஒரு ரகசிய வழியையும் ஏற்படுத்தியிருக்கிறான். அதன் வழியே அவன் மறைந்துவிட்டான். ராணி மீது கொண்ட காதலின் அடையாளமாக அந்த அரண்மனை ஆகிவிட்டது. இக்காதல் கதைதுடிப்புடன்கூடிய இசைக் காவியமாக ஆக்கப்பட்டுள்ளது. ''பிரேம சில்பி'' போன்ற இசைக்காவியங்கள் மூலம் தனது கதைக் கவிதைத் திறனைப் பொட்டேக்காட் வெளிப்படுத்துகிறார். கதை எழுதும் திறமையும் கவிதை எழுதும் திறமையும் பிரிக்க முடியாமல் அவரிடம் திகழ்கின்றன. என்றாலும் பிற்காலத்தில் கதை எழுதும் பணியில் கற்பனைத் திறன் இழந்து விட்டதாக அவர் உணர்ந்திருந்தார்.

6. பெரும் படைப்புகள் - புதினங்கள்

பொட்டேக்காட் புதினங்களைப் படைத்த காலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவரது ஆரம்பகாலப் புதினங்கள் மரபு முறையில் அமைந்திருந்தன. காதலன் காதலி ஆகியோரின் சந்திப்புகள், மனவெழுச்சிகள் என்று படிப் படியாகக் கதையின் அமைப்பு முன்னேறிச் சென்றது. அவற்றில் காதல் முக்கிய கருவாக அமைந்திருந்தது. ''நாடன்பிரேமம்'' (1941), ''பிரேமசிக்ஷ'' (1945), ''மூடுபடம்'' (1948) முதலியன இக்காலக்கட்டத்தில் எழுதப்பட்டவையாகும். இரண்டாவது காலகட்டத்தில், அவர் வெறும் காதல் பற்றி எழுதுவதுடன் திருப்தியடையவில்லை. இரண்டு அல்லது மூன்று பேரின் உறவுகளை வைத்து எழுதுவதை நிறுத்திவிட்டார். மாறாக, நம் முன்னே சமூகத்தின் பரந்த காட்சியை அகன்ற திரைச்சீலையில் எழுதிக் காட்டுகிறார். இப்போது கதையின் அமைப்புகள், உண்மைச் சித்திரங்களாகத் தெரிகின்றன. அவர் சமூகம், மக்களது ஒத்த பிரச்சினைகளும் எப்படி ஒத்து இணைந்து போகின்றன என்பதைக் காட்டுகின்றார். எதிர்ப்புகளும் மன எழுச்சிப் போராட்டங்களும் கதையில் அமைந்திருப்பதைக் காண்கிறோம். '' விஷகன்யகா'' (1948), '' ஒரு /தெருவின்றே கத' (1960) ஆகியவை இக்கால கட்டத்தில் எழுதப்பட்ட முக்கிய புதினங்களாகும். மூன்றாவது காலகட்டத்தில், இந்த இரண்டு உத்திகளும் இணைக்கப்பட்டுள்ளன. கதாபாத்திரம் சமூகத்தின் ஓர் அங்கமாகக் குறிப்பிட்டுக் காட்டப் பெறுகிறது. மத்திய

கதாப்பாத்திரத்தைச்சுற்றித்தான் மற்ற எல்லாநிகழ்ச்சிகளும் வலம் வருகின்றன. அவருடைய கதை அந்த வட்டாரத்தின் கதையாகிறது. '' ஒரு தேசத்தின்றெ கத'' (1971) இதற்கு ஓர் உதாரணமாகும். '' கபீனா'' (1979) என்ற கதை கூட இந்த வகையைச் சேர்ந்ததே.

''நாடன் பிரேமம்'' அவரது ஆரம்பக்காலத்தில் எழுதப்பட்ட புதினமாகும். அது பம்பாயில் எழுதப்பட்டது. அப்போது அவருக்கு மலபாருக்குத் திரும்ப வேண்டும் என்ற ஆவல் மிகுதியாக இருந்த நேரம். அவர் முதலில் அதை சினிமாவுக்கான கதையாக எழுதினார். பிறகு அதை புதினமாக மாற்றினார். கதை அமைப்பில் சினிமா கலை அம்சம் தெளிவாக இருக்கும். காட்சிகள் நாடகப் பாணியில் ஓட்டல் அறைகள், நாகரிகமான வீடுகள் முதலியவற்றிலிருந்து பசுமை, சுத்தம் ஆகியவை அமைந்த கிராமப்புறத்துக்கு மாறுவதைக் காணலாம். இந்த மாதிரியான காட்சி மாற்றங்கள் கண்களைக் கவர்ந்திழுக்கும்.

இந்தக் கதையில் வரும் முக்கியப் பாத்திரம் ரவீந்திரன். கள்ளிக்கோட்டையைச் சார்ந்த மிகப் பெரும் பணக்காரன். ஒரு மாற்றத்துக்காக அவன் முக்கம் என்ற ஊருக்கு அருகிலுள்ள கிராமப்புறத்துக்குச் செல்கிறான். அங்கு மாலு என்ற கள்ளங்கபடமில்லாத ஏழைப் பெண்ணைச் சந்திக்கிறான். அவளைத் தனது இனிமையான வார்த்தைகளாலும் பரிசுப் பொருள்களாலும் மயக்கி அவளுடன் இரவில் தொடர்பு கொண்டு சில நாட்களில் அங்கிருந்து போய்விடுகிறான். தான் கர்ப்பமாக இருப்பதை அறிந்த அந்தப் பெண் தற்கொலை செய்து கொள்ள முயல்கிறாள். அந்தச் சமயத்தில் எல்லாருக்கும் உதவி செய்யும் ஐக்கோரன் என்ற கிராமவாசியால் காப்பாற்றப்படுகிறாள். அவள் தன்னைக் காப்பாற்றியவனிடம் உண்மையை ஒளிக்காமல் கூறுகிறாள். அவன் அவளை மணந்து கொள்ளவும், அக்குழந்தைக்குத் தகப்பனாக இருக்கவும் ஒப்புக் கொள்கிறான்.

கதையில் இரண்டாம் பகுதியில், பத்து ஆண்டுகள் கழிந்த பின் நிகழ்ச்சிகள் ஆரம்பம் ஆகின்றன. ரவீந்திரன் இரண்டு முறை திருமணம் செய்த பின்னும் அவனுக்குக் குழந்தைப்பேறு

கிடைக்கவில்லை. அவனது வியாபாரம் நன்றாகப் பெருகியது. ஆனால் அவன் மகிழ்ச்சியாக இல்லை. அவனது மண வாழ்க்கை பயனற்றதாக ஆகிவிட்டது. எனவே அவனது எஸ்டேட்டுகளை ஓர் ஆங்கிலேயருக்கு விற்றுவிட்டு, மாலுவை எங்கு சந்தித்தானோ அதே ஆற்றங்கரைக்கு மீண்டும் வருகிறான். எதிர்பாராத விதமாக தனக்கு மாலுவிடம் பிறந்த மகளைச் சந்திக்கிறான். மாலுவிடம் குழந்தையைத் தரும்படி கேட்கிறான். ஆனால் ஐக்கோரனும் மாலுவும் அவனது வேண்டுகோளை மறுக்கின்றனர். சில மாதங்கள் கழித்து ரவிந்திரன் நோய் வாய்ப்பட்டு மிக மோசமான நிலையில் இருந்தபோது, அவன் அவர்களுக்குச் செல்லி அனுப்புகிறான். அவர்கள் அவனது வேண்டுகோளை ஏற்று அவனது மகளை அவனிடம் விட்டுவிடுகின்றனர். பிறகு தங்கள் வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிட்டது என நினைத்துத் தற்கொலை செய்து கொள்கின்றனர். எஸ்டேட்டுகளை வாங்கிய ஆங்கிலேயன் அவர்களது சமாதி மீது நினைவு மண்டபம் எழுப்புகின்றான்.

இந்தப் புதினம் ஒரு சுவையான நாடகத்தின் அமைப்புகளைப் பெற்றிருந்தாலும் புதினங்களுக்கான உத்திகளைக் கையாள்வதில் அவரது தொடக்கத் தன்மை நன்கு புலனாகிறது. கதையில் இரு முக்கிய நிகழ்ச்சகள் குறிப்பிடப்படுகின்றன. ஒன்று, மாலு ரவீந்திரனிடம் கூறும் கூழைக்கடா பறவை பற்றிய புராணக் கதை. அடுத்தது ரவீந்திரனை அவனது திருமணத்துக்குப்பின் அடிக்கடி வந்து துன்புறுத்தும் கனவு.

ரவீந்திரன் கனவு, அவன் குழந்தைக்காக ஏங்குவதை வெளிப்படுத்துகிறது. கனவில் அவன் பல சிறுவர்கள் புல்தரையில் நடைபோடுவதைக் காண்கிறான். அவர்கள் ஜன்னல் அருகே வருகிறார்கள். அவர்களை அவன் தழுவ முயலும் போது, அவர்களது பெற்றோர்கள் அவர்களைத் தழுவுகிறார்கள். ஒரு பையன் அவன் முன் நின்று ' டாடி' என்றபடி அவனது கழுத்தை அணைத்துக் கொள்ளத் தனது கரங்களை நீட்டுகிறான்.

மாலு, ஒரு பையன் மீது விழுந்த கடவுளின் சாபத்தை, அந்தக் கூழைக்கடா பறவையுடன் தொடர்பு படுத்திக் கூறுகிறாள். ஒரு நாள்

மாலை அந்தப் பையன் தண்ணீர்ப் பாத்திரத்துடன் தூங்கிக் கொண்டிருக்கிறான். பசுக்கள் தண்ணீர் தாகத்துடன் கதறுகின்றன. கடவுள் அவற்றின் சத்தத்தைக் கேட்கிறார். தூங்கிக் கொண்டிருக்கும் பையனைக் கண்டதும் அவருக்குக் கோபம் வருகிறது. அவர் பசுக்களுக்குத் தண்ணீர்காட்டிவிட்டு காலியான பாத்திரத்தை அவன் தலைப்பக்கத்தில் வைத்துவிடுகிறார். அவனையும் பறவையாக மாற்றிவிடுகிறார். அப்பறவைக்கும் மேகத்தின் கீழ் தண்ணீர்க்காக அலையும்படி சாபம் கொடுத்துவிடுகிறார். இக்கதை மாலுவின் கள்ளங்கபடமற்ற தன்மையையும், மனத்தூய்மையையும் காட்டுகிறது. மேலும் கிராமத்து மக்களின் எளிமையும், நகரத்து வியாபாரிகள் பிறரை ஏமாற்றத் திட்டமிடும் செயலும் விளக்கப்பட்டிருக்கின்றன.

இப்புதினம் முழுக்க முழுக்க நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்குவதாகும். ரவி-மாலு கதை தற்கால சாகுந்தலமாகும். ரவி தன்னலங்கொண்ட நகரத்து மனிதனாகவும், மாலு முழு நம்பிக்கையுடன் தன்னை அவனிடம் அர்ப்பணித்துக் கொண்ட பெண்ணாகவும் காட்டப் பெறுகிறார்கள்.

2

''பிரேம சிக்ஷு'' கதையும் ஒரு காதல் கதையே. அதிலும் திடீர் மாற்றங்களும் கொடுமையான காட்சிகளும் இருக்கின்றன. அதில் '' நாடன் பிரேமம்'' கதையைவிட மனோதத்துவம் மிகவும் நுட்பமாகக் கையாளப்பட்டுள்ளது.

கதை குஞ்ஞிக்கண்ணன் என்ற வியாபாரியைப் பற்றியது. அவர் ஒரு நாள் தன் கடைக்கு முன்னால் நடைபாதையில் நோயுற்றுக் கிடக்கும் முன்பின் தெரியாத ஒருவனுக்கு அடைக்கலம் கொடுக்கிறார். பின்பு அவருக்கு அப்புதியவன் மீது ஒரு விதப்பற்று ஏற்பட்டு அவனுக்குக் ' கிருஷ்ணன்' என்று பெயரிட்டு, தன் கடையிலேயே வேலைக்கும் வைத்துக் கொள்கிறார். கிருஷ்ணனும் மரியாதையாகவும் நல்ல நடத்தை கொண்டவனாகவும் இருக்கிறான். அந்த நகரமே வியக்கிறது. நம்பிக்கை கொண்டிருந்த குஞ்ஞிக்கண்ணன் கடையைக் கிருஷ்ணனை நம்பி விட்டுவிடுகிறார். சில ஆண்டுகளுக்குபின் அந்த வியாபாரி

நோய்வாய்பட்டு விடுகிறார். சாகக் கிடக்கும் தறுவாயில் அவர் கிருஷ்ணனை அழைத்து வர ஆள் அனுப்புகிறார். அவன் வந்ததும் தனது ஒரே மகள் மாணிக்கத்தை மணந்து கொள்ள வேண்டுகிறார். தன்னைக் காப்பாற்றியவரின் சொல்லைத் தட்ட முடியாமல் கிருஷ்ணன் திருமணத்துக்குச் சம்மதிக்கிறான்.

விதியும் சக்கரம் போலச் சுழல்கிறது. ஒரு நாள் கிருஷ்ணன் தனது கடைக்கு முன்னால், குமரன் என்ற இளைஞன் மலேரியாக் காய்ச்சலால் தாக்கப்பட்டு இருப்பதைக் காண்கிறார். அவர் அவனை வீட்டிற்கு எடுத்துச் செல்கிறார். அவன் குணமடைந்ததும் தனது கடையிலேயே வேலைக்கு வைத்துக் கொள்கிறார். குமரனோ தனது எஜமானருக்கு மாறுபட்டவன். அவன் சரளமாகப் பேசுவான், பாடும் திறமையும் அவனுக்கு இருந்தது. மாணிக்கத்தை, அவள் கணவர், சில சமயங்களில் விட்டுப் பிரிந்து தனித்திருப்பார். இதனால் மனச் சோர்வடைந்த மாணிக்கத்திற்கு, அந்த இளைஞன் மீது அடக்க முடியாத மோகம் ஏற்பட்டது. அவள் அவனுக்குக் கடிதம் எழுதினாள். அவனது அறையில் அவனை அடிக்கடி சந்தித்தாள். குமரனோ தார்மீக அடிப்படையில் அவளைவிட்டு விலக முயன்றான். என்றாலும் அதுநாள் வரையிலும் தனது எஜமானனின் நடத்தையில் ஏதோ மர்மம் இருப்பதாக அவன் உணர்ந்திருந்தான். ஓர் இரவு கிருஷ்ணன் மீன் பிடிக்க தனியாக ஆற்றுக்குப் போகும் போது அவன் பின் தொடர்ந்தான். ஆற்றில் நின்றுகொண்டு கிருஷ்ணன் வலை வீசியதும், மறைத்து வைத்திருந்த கத்தி ஒன்றை வெளியில் எடுத்துப் பிடித்துக் கொண்டார். நிலா வெளிச்சம் அவரது தொடையில் இருந்த ஆழமான வடுவைக் காட்டியது. குமரன் அதனைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தான். அவன் பல ஆண்டுகளுக்கு முன் படித்த பத்திரிக்கைச் செய்தியைக் சம்பந்தப்படுத்திப் பார்த்தான். தனதுமனைவியையும், அவளது காதலனையும் கொன்றுவிட்டுத் தலைமறைவாகிவிட்ட குஞ்ஞிக்கண்ணன் நாயர்தான் கிருஷ்ணன் என நம்பினான். மாணிக்கத்திடம் அதனைக் கூறி அவளது காதலை அங்கீகரித்தான். அவளும் அதை ஏற்று இன்பத்தில் திகைத்தாள். அவர்கள் போலீசுக்குத் தகவல் தர விரும்பினர். ஏனென்றால் அவர்களது கல்யாணத்திற்கு வழி தானாகவே ஏற்படும் அல்லவா?

கிருஷ்ணனிடம் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. ஒரு நாள் குடித்துவிட்டு வந்து மாணிக்கத்திடம் தான் யார் என்ற உண்மையைக் கூறுகிறார். பின் அவளது மடியில் படுத்து உறங்கிவிடுகிறார். அக்கதை உண்மை விளக்கங்களுடனும், கொடுமையானகாட்சிகளுடனும் முடிகிறது. தன்னுடைய உண்மையான அடையாளம் போலீசுக்குத் தெரிந்துவிட்டதென்று கிருஷ்ணனுக்கு அனாமதேயக் கடிதம் ஒன்று வருகிறது. பயத்துடனும் கோபத்துடனும் வீட்டிற்கு வந்தபோது, அவரது மனைவி அவளது காதலனுக்கு எழுதிய கடிதம் கிடைக்கிறது. அவர் ஆத்திரத்துடன், கணவனுக்குத் துரோகம் செய்தவள் என்று கூறி அவளைக் கொன்றுவிடுகிறார். ஆனால் அவர் தவறு செய்துவிட்டார். இன்னொரு உண்மையும் வெளிபடுகிறது. தன் கணவனுக்கு அவள் எழுதிய கடிதம் கிடைக்கிறது. அதில் அவன் தன் கணவனுக்குச் செய்த துரோகத்தை எண்ணி வருந்தி, தன் காதலனைக் கொன்றுதன்னையும் அழித்துக் கொள்ளப் போகும் திட்டத்தையும் கூறியிருக்கிறாள். அவளது மனமாற்றத்தைக் கண்ட கிருஷ்ணன் கோபம் தணிந்து போலீசிடம் சரண் அடைகிறார். தனது சொத்துக்கு குமரனை வாரிசாக நியமிக்கிறார்.

கதையில் முடிவு மிகவும் உணர்ச்சி பூர்வ முடிவாக இருக்கிறது. கதையில் கருப்பொருளை பல வகையான திரிகளைக் கொண்ட ஒரு பெரிய கயிறு திரிப்பது போல், பொறுமையில்லாமல் கதாசிரியர் முடித்திருக்கிறார். ''நாடன் பிரேமம்'' கதையை விட, இக்கதையில் பாத்திரங்கள் பலதரப்பட்ட சிக்கலானவர்களாக இருக்கின்றனர். அவர்களது மனப்போராட்டங்கள் மிகத் திறமையுடன் வர்ணிக்கப்பட்டுள்ளன. கதாநாயகனின் உண்மை சொரூபம் வெளிப்படும் வரையில் கதையில் மர்மம் இருக்கிறது. அவன் யார் என்று தெரிந்தவுடன், அவனது மனப் போராட்டம் வெளிப் படையாக்கப்படுகிறது. மீன் பிடிக்கும் காட்சிமனதை ஈர்க்கும் காட்சியாகும். ஆற்றின் பின்னணியில் மலை முகடு, நிலா வெளிச்சம் ஆகியவற்றுடன் ஓர் அமைதியான மனிதன் தன் கையில் கத்தியை வைத்துக்கொண்டு, தன் பழங்கதையின் வடுவை, பளபளக்கும் தண்ணீரில் நின்று கொண்டு வெளிப்படுத்துவது கதைக்கு ஒரு புது உருவத்தைத் தருகிறது.

செயற்கையான கட்டுப்பாடில்லாத மனவெழுச்சியைக் கதையின் முடிவு கூறினாலும், கதாசிரியரின் கொள்கையான ''மனிதன் எவனும் அடிப்படையில் குற்றவாளியல்ல'' என்ற தத்துவத்தைக் கூற வந்த கதையாகும் இது. கிருஷ்ணன் மிகவும் நல்லவன். அவனது மனைவி, நம்பிக்கைக்குப் பாத்திரமான அவனது நண்பனிடம் தவறான உறவைக் கொண்டிருப்பதைக் கண்டதும் மிகவும் கொடுமைக்காரனாகிவிடுகிறான். திருமணமாகி இரண்டு ஆண்டுகளாகியும், மாணிக்கம் தனது உடற்பசியை அடக்க முடியாமல் தவிக்கிறாள். ஏனென்றால் அவளது கணவன், தன் தொடையிலிருக்கும் வடுவை, அவள் கூடப் பார்க்க முடியாதவாறு தடுத்துவிடுகிறான். வேறு வழியின்றி அவள் இன்னொரு ஆணின் காதலை நாடுகின்றாள். குமரன் மிகவும் சுறுசுறுப்பான ஆற்றல் வாய்ந்த காதலன் அதே சமயம் மனச்சாட்சியும் அதே அளவுக்கு உள்ளவன். மாணிக்கம் அவனிடம் உடலுறவுக்காக வரும்போதெல்லாம், அவன் மிகவும் கட்டுப்பாடாக இருந்தான். மனிதன் செய்யும் தவறுகளை சூழ்நிலை காரணத்தை வைத்து ஆராயும்போது அவை மன்னிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை ஆணித்தரமாகவே இக்கதையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

3

'மூடுபடம்' என்ற புதினம் அப்புக்குட்டன் என்ற இந்துப் பையனுக்கும், அதே இடத்தைச் சேர்ந்த அமீனா என்ற முஸ்லிம் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட காதலை அடிப்படையாகக் கொண்டது. இருவரும் குழந்தைப் பருவத்திலிருந்தே விளையாட்டுத் தோழர்கள். அப்பெண்ணின் சகோதரன் அலிக்குட்டி பணம் சம்பாதிக்க பம்பாய் செல்கிறான். தனது சிற்றன்னையின் கொடுமை தாங்க முடியாமல் அப்புக்குட்டனும் அவனுடன் சேர்ந்து கொள்கிறான். அங்கு நகரத்தில் இனக்கலவரம் ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில், அலிக்குட்டிக்கு அப்புக்குட்டனின் தந்தை திடீர் என்று இறந்துவிட்ட செய்தி தந்தி மூலம் கிடைக்கிறது. அந்தச் செய்தியைத் தனது நண்பனுக்குத் தெரிவிக்கப் போகும் போது அவன் ஓர் இந்து மத வெறியனால் குத்திக் கொல்லப்படுகிறான். தனது ஊருக்கு திரும்பி வந்த அப்புக்குட்டன் தனது சொத்துக்களை விற்றுவிடுகிறான். அதில் ஒரு பகுதியை அமீனாவின் தாயிடம் கொடுத்து, அது அலிக்குட்டி தனது தங்கையின் திருமணச் செலவுக்காகச் சேர்த்து வைத்தது என்று கூறுகிறான். அனுபவத்தால்

பக்குவப்பட்டிருந்த அப்புக்குட்டன் துவேஷமும், விரோதமும் நிறைந்த இந்தச் சமூகத்தில் அமீனாவைத் தான் மணப்பது மகிழ்ச்சியைத் தராது என நினைக்கிறான். அகமத் குட்டி என்ற லாரி டிரைவரை/அவளுக்காகத் தேர்ந்து எடுக்கிறான். இருவரும் ஒரே வகுப்பில் படித்த நண்பர்கள்.

இந்தப் புதினம், கேரள கிராமத்து வாழ்க்கையைக் காட்டுவதாக அமைந்து, அப்புக்குட்டன், அலிக்குட்டி, அமீனா ஆகிய மூவரைப் பற்றிச் சொல்கிறது. நில அமைப்பும், பருவங்களும், அறுவடைக்காலமும், ஓணம் மற்றும் ரம்ஜான் போன்ற பண்டிகைகளும், இந்து முஸ்லிம் வாழ்வும் விளக்கப்பட்டிருக்கின்றன. புதினத்தின் முதல் பகுதி ஒரு குழந்தையின் நோக்கிலேயே எழுதப்பட்டுள்ளது. அப்புக்குட்டனும் அமீனாவும் இயற்கையுடன் சேர்ந்து வளர்கின்றனர். தானியக் களஞ்சியத்தில் விளையாடுகின்றனர். பறவை பாடுதலைக் கேட்டு மகிழ்கின்றனர். அலிக்குட்டியும் அப்புக்குட்டனும் நகர வாழ்கையை மேற்கொண்டபோது இயற்கையின் பிடிப்பு போய்விடுகிறது. அவர்கள் வாழும் இடுக்குமுடுக்கான அறை, அசுத்தமான சுற்றுப்புறம், அவர்களது தினசரி வாழ்க்கை, அவர்களது சந்தோஷமான பிள்ளைப் பருவ வாழ்க்கைக்கு எதிரிடையாக அமைகின்றன. புதினத்தின் பிற்பகுதி வாழ்க்கையின் மிகவும் உற்சாகமற்ற நிலையைக் காட்டுகிறது. கதாசிரியர் இனக் கலவரத்தைக் கேலி செய்யும் முறையில் காட்டியுள்ளார். மனித சமூகத்தை இம்மாதிரியான இனக் கலவரங்கள் ஒரு நோய் மாதிரிப் பற்றிக் கொண்டிருப்பதை விளக்குகின்றார். கதை கூறுவதற்கான கட்டமைப்புக்கும் முருகியலுக்கும் முக்கியத்துவம் தருவதைவிட குறிக்கோளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கதாசிரியர் முனைந்திருக்கிறார். அப்புக்குட்டனுடனும் அமீனாவின் காதல் ஆரம்பத்திலேயே கருகிப் போனாலும், எதிர்காலத்தில், மதம், இனம் முதலிய தடைகளைத் தாண்டி மக்கள் வாழ்வு அமையும் என்று அவர் நம்புகிறார். கதை முடியும் வரையில் இந்த நம்பிக்கை இருக்கிறது.

4

''விஷகன்யகா'' (1948) பொட்டேக்காட்டின் புதினம் எழுதும் முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது. வாலிப வயதுக் காதல் அனுபவங்களைக் காட்டுவதில் அவர் அதிக

வளர்ச்சியடைந்திருக்கிறார். இந்திய சமூக அமைப்பில் குடியானவனின் கஷ்டங்களும் ஏழ்மையும், அடித்தளமாக அமைந்திருக்கின்றன என்பதை விளக்குகிறார்.

1940 ல் பொட்டேக்காட் ஒரு மாறுதலுக்காக வடக்கு மலபாரைச் சார்ந்த மலைப்பிரதேசத்தில் வசிக்க நேரிட்டது. அந்தச் சமயத்தில் திருவாங்கூரிலிருந்து வந்து அங்கு தங்கிவிட்டவர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. அவர்களது கஷ்டங்கள் அவரது மனதை உருக்கிவிட்டன. அந்தப் பிரச்சனைகள்தான் விஷகன்யகாவை எழுத வைத்தன.

ஒருசமூகத்தாரின் ஒட்டுமொத்த வெளியேற்றத்தைப் பற்றியது இக்கதை. மோஸஸ் இஸ்ரவேலர்களைவிடுவித்ததைப் போலவும், நியு இங்கிலாந்தில் குடியேறிய "யாத்திரிகப்பாதிரிமார்" போலவும் இது தோன்றுகிறது. 1930ல் விரோத மனப்பான்மை கொண்ட திருவாங்கூர்திவானிட-மிருந்துதப்பவும், வடக்கு மலபாரில் அதிக வேலைவாய்ப்பு முதலியன இருப்பதைக் கண்டு அதனால் கவரப்பட்டும் பல கிறிஸ்தவக் குடும்பங்கள் திருவாங்கூரிலிருந்து புறப்பட்டு வடக்கு நோக்கிச் சென்றன. அவர்கள் சிறுசிறு கூட்டங்களாக அணி அணியாகச்சென்றனர். எங்கும் உள்ளது போல், முதல் முதலாகக் குடியேறியவர்கள்தான் அதிகம் கஷ்டப்பட்டனர். தங்களது பணத்தை எல்லாம் நிலத்தில் முதலீடு செய்து உழைத்தனர். குடிசைகள் கட்டினர். கிணறுகள் தோண்டினர். நிலத்தை உழுதனர்; எல்லா வேலைகளையும் செய்தனர். அவர்கள் உழைப்பை ஏற்காத மண்ணில் கடுமையாக உழைத்தனர். பொட்டேக்காட் முதலில் குடியேறியவர் பட்ட கஷ்டங்களை ஓரளவே குறிப்பிடுகின்றார். எனவே இக்கதையில் அந்தப் பகுதி அதிகச் சுவையாக இல்லை. அவர்கள் அதிகமாக உழைத்த போதிலும், அதன் பலனைப் பன்றிகளும் முள்ளம்பன்றிகளும் தின்றுவிட்டன. மலேரியா காய்ச்சல் அங்கு அதிகமாகப் பரவியது. அவர்கள் தங்கள் உறவினர்களை இழந்தது மட்டுமின்றி, அங்கு வாழ நினைக்கும் நம்பிக்கையையும் இழந்தனர். அநேகம்பேர் மீண்டும் திருவாங்கூருக்குத் திரும்புவதாகக் கதை அமைந்துள்ளது. அவர்களைக் கவர்ந்து அழைத்த அந்த நிலம் ஒரு

விஷக்கன்னிகையாக மாறிவிட்டது. புது நம்பிக்கையின் அடிப்படையில் ஆரம்பித்த வாழ்க்கை எதிர்பார்ப்புகளில் முடிவதாகக் கதை அமைகிறது.

விஷகன்யகாவில் பலதரப்பட்ட பாத்திரங்கள் வருகின்றனர். அவர்களில் குறிப்பாக நம்மைக் கவருபவர்கள் மரியம், அவளது கணவன் மாதன், ஆன்டனி மங்கைப் பருவத்து ஆனி, குரியனும் அவனது மனைவியும், வர்க்கி, மாதவி முதலானோர் ஆவர். மரியம் காலை முதல் மாலை வரையில் கஷ்டப்பட்டு உழைக்கிறாள். ஆனால் அவள் கணவன் மாதன் ஒரு சோம்பேறி, அவளது கனவுகள் கருகிவிடுகின்றன. மலேரியாவினால் பீடிக்கப்பட்டு அவளது கரு கலைந்தபோது அவள் வாழ்க்கை முடிகிறது. அடுத்த நாளே அவளது மகளும் இறக்க, இருவரும் ஒரே இடத்தில் புதைக்கப்படுகின்றனர். குறிக்கோள் எதுவுமின்றி, மாதன் தனியாகத் தெற்கு நோக்கித் திரும்புகிறான். குரியனின் மனைவி டீ கடை நடத்தும் சக்கச்சனுடன் தொடர்பு கொள்கிறாள். ஒரு நாள் பூச்சி ஒன்று அரியனைக் கடிக்க, அவன் மதியம் வீடு திரும்புகின்றான். அப்போது அவன் மனைவியும், அவள் காதலனும் காமச்சுவையில் மூழ்கியிருப்பதைக் காண்கிறான். அவன் கோபத்தின் உச்சிக்குச் செல்கிறான். குடித்துவிட்டு வந்து அந்த இடத்தில் பெரிய ரகளையை ஏற்படுத்துகிறான். ஆன்டனி ஓர் அர்ப்பணித்துக் கொண்ட கிறிஸ்தவன்; இளைஞன்; நீதிக் கட்டுப்பாடுகளை மதிப்பவன். மங்கைப் பருவத்து ஆனி, அவனிடம் இரகசியமாக ஆசை கொள்கிறாள். அவனும் அவள் பக்கம் ஈர்க்கப்படுகிறான். ஆனால் அவர்களுடைய காதல் நிறைவேறவில்லை. ஆனி மலேரியாவால் இறக்கிறாள்.

வர்க்கி பணக்கார இளைஞன், அவன் குடிப்பதிலும் சீட்டாடுவதிலும் பணத்தைச் செலவழிக்கிறான். ஒரு நாள் பைனாக்குலர் மூலம் தன் முன்னால் பரந்து கிடக்கும் நிலத்தை பார்க்கிறான். தூரத்தில் மாதவி என்ற அழகி நிர்வாணமாகக் குளிப்பதைக் காண்கிறான். கதை முடிவில் ஆண்டனிக்கு எதிரான காமப்பசி கொண்ட மாதவியால் எழுப்பப்பட்ட சதிக்கு அவன் பலியாகிறான்.

மாதவி வடக்கு மலபார் நாட்டு மலைகளால் உருவாக்கப்பட்ட விஷகன்யகா. அவள் காதல் ஆசையால் அடிக்கடி ஆண்டனியைச் சந்திக்கிறாள். ஓர் இரவு அவள் முழுவதும் நனைந்து அவனது குடிசைக்குள் நுழைகிறாள். அவள் தனது நிர்வாண உடலைக் காட்டி அவனைத் தனது ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டுகிறாள். அவன் அச்செய்கை நீதிக்கு எதிரானது என்றும், ஆத்மாவின் நாசம் என்றும் உணர்ந்த போதிலும் அவனால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை.

விஷகன்யகாவின் கருத்தும் நடப்பும் புதுமையாக இருந்ததால் இக்கதை இலக்கிய விமர்சகர்ளிடமிருந்து உணர்ச்சி மிக்க வரவேற்பைப் பெற்றது. அது கதாநாயகனைச்சுற்றிப் பின்னப்பட்ட புதினம் அல்ல. குறிப்பிட்ட வரிகளுக்குள் அடக்கப்பட்டதும் அல்ல. குறிப்பிட்ட ஆவணங்கள் போன்று அமைக்கப்பட்ட புதினமாகும். அது சிறுசிறு துண்டு நிகழ்ச்சிகளைக் கோத்து ஆக்கப்பட்டதாகும். அநேக துன்ப நிகழ்ச்சிகள் தனிப்பட்ட முறையிலும், தெரிந்த முறையிலும்,ஒன்று சேர்ந்து மனதை உருக்கும்படி கதை அமைக்கப்பபிட்டுள்ளது. எல்லாக் குடியேற்ற மக்களையும் ஒரே ஆளாக,ஒரே மனிதனாக கஷ்டப்பட்டு உழைப்பவனாக, நம்பிக்கை கொண்டவனாகக் காட்டுகிறது. ஆனால் அந்தக் கன்னி நிலம் ஒரு ஆசை காட்டும் ''ஸெர்சி''*. அவள் அவனுடைய சக்தியையும் செல்வத்தையும் கொள்ளையடித்துவிடுகிறாள். இறுதியில் அவன் வீடிழந்து கைப்பொருளையும் இழந்து விடுகிறான். தனது வீழ்ச்சியின் நினைவுடன் தெற்கே இருக்கும் தனது தாய் நாட்டிற்குச் ஆண்டனி செல்கிறான். அந்தப் பச்சை மலைகள், பள்ளத்தாக்குகள் ஆகியவற்றின் நினைவுகள் மனத்தில் தன்னை அந்த நிலைக்கு வீழ்த்திய அந்த நச்சுப் பெண்ணின நினைவுடன் கலக்கின்றன.

---

* ஸெர்சி என்பவள் கிரேக்க வீரன் யுலிஸிஸ்ஸின் தோழர்களைப் பன்றிகளாக மாற்றிய மயக்குக்காரி.

5

ஒருதெருவின்றெகத் (ஒருதெருவின்கதை) என்றகதையில் பொட்டேக்காட், ஆவணங்கள் போன்று கதை எழுதும் தனது உத்தியைப் பரிசோதனை செய்துள்ளார். அதில் நகரத்தின் அழகை விவரமாகக் கூறியுள்ளார். அங்கு வசிக்கும் கதாபாத்திரங்கள் அந்த இடத்தில் பிறந்தவர்கள் அல்ல. மாறாக, பலவகைப்பட்ட வேலைகளை நாடி வெளியேயிருந்து வந்தவர்கள். தெருதான் கதை நடக்கும் இடம். இரண்டு வகையான வாழ்க்கையின் அம்சம்கூறப்பட்டுள்ளது. ஒன்று எல்லார்க்கும் தெரிந்த வாழ்க்கை முறை. அடுத்தது நள்ளிரவில் நடப்பதாகக் கருதப்படும் வாழ்க்கை.

சமூகத்தின் இருட்டுப் பகுதியை மட்டும் முழுமையாக இந்தக் கதை கூறவில்லை. இது உண்மையில் மனிதரின் வக்கிர குணத்தையும் அசாதரணங்களையும் விசித்திர குணங்களையும் பிரதிபலிக்கும் புதினமாகும்.

ஆங்கில எழுத்தாளர் சாசரைப் பற்றி டிரைடன் என்ற ஆங்கிலக் கவிஞர் கூறியது இக்கதையில் வரும் பாத்திரங்கள் விஷயத்தில் உண்மையாகும். இங்கு கடவுள் முழுமையாக இருக்கிறார். பலவகையான பாத்திரங்கள் வியப்பளிக்கின்றன. பப்பன் என்பவன் குடித்து விட்டால் உரக்க ஆங்கிலத்தில் பேசுகிறான். பிச்சைக்காரன் ரப்பை தனது உடலை வர்ணங்கள் சேறு முதலியவற்றால் அலங்கோலப்படுத்திக் கொள்கிறான். தனது மருந்து விற்பனைக்காக விகடமாகப் பேசும் பாப்பு வைத்தியர், சினிமாவும் சவரமும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையவை என்று விளக்கம் கூறும் கூனன் கனாரன், யானைக்கு முந்திரிப்பழத்தில் பிளேடுகளை வைத்துக் கொடுத்து அதனைக் கொன்ற யானைப்பாகன் அப்பு நாயர், இளைஞன் அபு வை விரும்பும் விலைமகள் குஞ்ஞிப்பாது, மக்களைப் பெருங்கூட்டமாகக் கவர்ந்த ஜோதிடர் ஆகியோர் அந்தத் தெருவில் வசிக்கும் சில முக்கிய பாத்திரங்களாக கதையில் கூறப்பட்டுள்ளனர்.

சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள அவர்களையெல்லாம் முறியடிக்கும் வகையில் செல்வச் சுகத்தில் புரளும் செல்வர்களும்

காட்டப்படுகின்றனர். எரியும் ரப்பர் புகையால் காம வயப்படும் மேனோன், பிச்சைக்காரர்கள் மற்றும் அனாதைச் சிறுவர்கள் ஆகியோரின் ஜோபிகளில் அவர்கள் ஆழ்ந்து தூங்கும்போது பணத்தை போட்டு உதவும் சுதாகரன் என்ற உழைப்பால் உயர்ந்தவன், இதற்கு மாறாகக் கஷ்டப்படுபவர்களிடம் சிறிதும் இரக்கம் காட்டாத ராதாகிருஷ்ணன் ஆகியோரும் அங்கு உண்டு.

மிகவும் பிரகாசமாகத் தெரியும் இரண்டு கதாபாத்திரங்கள் ஓமான்ஞ்சி மற்றும் கிருஷ்ணகுறுப்பு ஆவர். ஓமான்ஞ்சி அரசாங்கத்தில்பணிபுரியும் ஓர் எழுத்தர்; வயது நாற்பது. பெண்கள் விஷயத்தில் சபல புத்தி உள்ளவர். அவரது காலை ஆகாரத்தில் கீரைகளை அதிகமாகச் சேர்ந்துக் கொள்வார். ரோஜாச்செடி வளர்த்தல் அவரது விருப்பமான பொழுதுபோக்கு. ஞாயிற்றுக் கிழமைகளில் எண்ணெய் தேய்த்துக்கொள்வார். அதை ஒரு சடங்காகவே செய்வார்; அனுபவிப்பார். உடல் முழுவதும் எண்ணெய் தேய்த்துக் கொண்ட பிறகு தனது ரோஜாத் தோட்டத்தில் உள்ள மரப்பலகையில் உட்கார்ந்துகொண்டு ஓய்வாகத் தனது பைனாக்குலரில் தூரத்து ஏரியில் குளிக்கும் பெண்களைப் பார்த்து ரசிப்பார். தெருப்பையன்களிடம் தாராளமாக இருப்பார். கிருஷ்ண குறுப்பின் மகள் ராதாவிடம் தனது இறந்து போன| சகோதரியின் சாயலைக் கண்டு மகிழ்கிறார். அவளிடம் அவருக்குச் சகோதரப்பாசம் உண்டு. அவள் இறந்துவிட்டதையும் அறியாமல் தன் மரணப்படுக்கையில் இருக்கும் போதும் அவளுக்குப் பணம் அனுப்புகிறார்.

கிருஷ்ண குறுப்பு செய்தித்தாள் விற்பனை மூலம் தனது வாழ்க்கையை நடத்துகிறார். மக்களைக் கவரச் செய்தித் துணுக்குகளைச் சூடாகத் தந்து, விற்பனையை அதிகமாக்கிக் கொள்வதில் வல்லவர். பத்திரிக்கைகளில் வரும் செய்தித் தலைப்பைத் திரித்தும், இணைத்தும் கூறி மக்களைக்கவர்ந்து தனது வியாபாரத்தை பெருக்கிக் கொள்கிறார்.

இந்தக் கதையை எழுதும்போது பொட்டேக்காட் ஆரம்பகால உத்திகளை கையாள்பவராக இருந்தார். அவர்

மக்களைக் கூர்ந்து நோக்கினார். முகத்தைப் பார்த்து ஒருவர் குணத்தை தீர்மானிப்பார். தனிப்பட்ட பழக்க வழக்கங்கள் முதலியவற்றை விளக்க ஏற்ற உருவகங்களை உபயோகித்தார். எடுத்துக்காட்டாக அத் தெருவில் வாழும் பரங்கோடன் என்பவன் தனது நண்பர்கள் தூக்கத்தில் செய்யும் ஒலிகளிலிருந்து; அவர்களை அறிந்துக் கொள்ளும் திறமை பெற்றவன். சாண்டோ கருப்பன் பன்றி உறுமுவதுபோல் குறட்டை விடுவான். சாந்து வாழைக்காய்ச்சிப்சை ஒருவர் வறுப்பதுபோல் குறட்டை விடுவான். குஞ்ஞிப்பேரச்சன் என்ற கிராமத்து முதியவரின் கால்கள் முருங்கைக்காய் போன்று இருக்குமாம். அவரதுமார்பில் காய்ந்த கமுதியின் தோல் போல மெத்தென்று வெளுத்த ரோமம் இருக்கும். கதாசிரியரால் மிகவும் விளக்கமாக வர்ணிக்கப்பட்டுள்ள மற்றெரு பாத்திரம் ஓமாஞ்சி, தளர்ந்துபோன தொளதொளத்த உடல் பலாமரத்தைப் போன்று, இங்கும் அங்குமாக பொந்துகளும் துளைகளும் வளைவுகளும் கொண்டதாக இருந்ததாம். அவருடைய உரத்த சிரிப்பு அல்சேஷன் நாயின் குரைப்பினைப் போன்று இருக்குமாம்.

மனிதர்கள் வருவார்கள் போவார்கள். ஆனால் அந்த தெருவின் நடவடிக்கை எப்போதும்போல இருக்கும். இந்தத் தொடர்ச்சியான கலைக்கப்படாத வாழ்க்கை கதையின் முடிவு வரைக்கும் கூறப்படுகிறது. ராதா இறந்த போது கிருஷ்ண குறுப்பு தனது வாழ்க்கை வெறுமையை அடைந்துவிட்டதாக உணர்கிறார். என்றாலும் சில நாட்களுக்குப் பிறகு பழையபடி செய்தித்தாள்கள் விற்க வந்து விடுகிறார். அவர் வந்த முதல் நாளே பத்திரிக்கையில் சில சூடான செய்திகள் வந்துவிடுகின்றன. மாலதி மேனோன் மிகப் பெரிய அளவில் நகைகளைக் கடத்தும்போது பிடிக்கப்படுகிறாள். அவள் நகைகளைக் கடத்த செயற்கை மார்புகளை வைத்துக் கொள்கிறாள். மாலதியின் பெயரையும் அவள் செய்த குற்றத்தையும் சொன்னால் பத்திரிக்கை மிகவும் வேகமாக விற்றுவிடும் என்ற உண்மை கிருஷ்ணனுக்குத் தெரியும். ஆனால் அவள் ராதாவுக்குச் சில நாட்களுக்கு முன் உள்பாவாடை, சில்க் ரிப்பன் மற்றும் சில பொருள்கள் ஆகியவற்றைக் கொடுத்தது அவரது நினைவுக்கு வந்தது. ராதா இப்போது கல்லறையில் புதைக்கப்பட்டிருக்கிறாள். அவர் மாலதிக்காக வருத்தப்படுகிறார். எனவே, அவளது பெயரை

அவர் சொல்லாமல் விட்டுவிடுகிறார். மற்ற செய்திகளை சுவாரசியமாக உரக்கச் சொல்லி, காலைச் சூரிய வெளிச்சத்தி பத்திரிகை விற்பனையில் ஈடுபடுகிறார்.

மற்ற ஆரம்ப காலக் கதைகள், புதினங்கள் போன்று ஒ தெருவின்றே கதா வும் மனிதருள் இருக்கும் உயர்ந்த இயல்புகளை ஆசிரியர் உறுதியாக வெளிப்படுத்துவதாக முடிவடைகிறது.

6

ஒரு தேசத்தின்றெ கத என்ற புதினம் முப்பது ஆண்டு காலத்தில் ஒரு புறநகர்ப் பகுதியில் நடந்த மாற்றங்களை கணக்கிட்டுக் காட்டுகிறது. இந்த மாற்றங்களினூடே கதையி முக்கிய பாத்திரம் சிறுவனாக இருந்து முதியவனாகவும் அப்பாவித்தனத்திலிருந்து அனுபவசாலியாகவும் வளர்ந்து வருகிறான். இந்தப் பிரபஞ்ச அளவிலான வளர்ச்சிக்கு அவனு மனமாகிய அணுதான்அடிப்படை. இப்புதினத்தின்பல நிகழ்ச்சிக அவனது மனத்தின் வழியே வடிகட்டப்படுகின்றன. அவ அனுபவம் பெறவும், மன வளர்ச்சி அடையும் அவை காரணமாயிருப்பதால் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த நூல் புதுநகர்ப் பகுதியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கற்பனை வளத்துடன் எழுப்பட்ட சுயசரித்திரமாகும். இந் அமைப்பு மனதின் உள் நோக்கத்திற்கும். குறிக்கோளுடைய சமூ உண்மைகளுக்கும். இடையே நடக்கும் சிக்கலான உ போராட்டமாகும்.

ஸ்ரீதரன் கதையின் முக்கிய பாத்திரம்,காதல், பால் உணர்வ இயற்கை, கவிதை, சமூக உண்மைகள் முதலிய விந்தைகளுக் அவன்அறிமுகப்படுத்தப்படுகிறான். அவன்ஐந்துவயது சிறுவனா இருந்தபோது இரு பெண்கள் மிகவும் கீழ்த்தரமான பாஷையா ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்வதைக் கேட்கிறான். ப வருஷங்களுக்குப் பிறகுதான் அவனுக்கு அந்த வார்த்தைகளி அர்த்தமும், நிலையும் புரிகின்றன். பத்து வயதில் ஒரு காதலனுக் உதவியாளனாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவனுமா ஆகிறான். வாசுதான் அந்தக் காதலன். ஒரு நாள் அவன் ஸ்ரீதரனை

ஒரு தென்னை மரத்தடியில் இருக்குச் செய்து யாராவது அன்னியர் வந்தால் எச்சரிக்கை செய்ய வெடி வைக்கும்படி ஒரு உபகரணத்தைக் கொடுத்துவிட்டு, பக்கத்திலிருந்த ஒரு குடிசைக்குள் திருமலா என்கிற மணமான பெண்ணிடம் சுகம் காணச் செல்கிறான். அப்போது அங்கு வந்த ஒருவன் ஸ்ரீதரனின் கையிலிருந்த சுத்தியல், ஆணி, வெடி மருந்து முதலியவற்றைப் பிடுங்கிக் கொள்கிறான். வெடிமருந்தைத் துப்பாக்கிக் குண்டுபோல் ஆக்கி வெடிக்கிறான். எதிர் பாராதவிதமாகக் கேட்ட சத்தத்தால் காதலர்கள் குழப்பமடைகின்றனர். அந்தப் பெண் கலைந்த கூந்தலுடன் வெளியே வருகிறாள். அதன் பிறகு வாசு அவனை மிகவும் வெறுப்புடன் நடத்துகிறான். ஸ்ரீதரனின் பிஞ்சு மனதிலே காதல் உத்வேகம் முளைவிடுகிறது. அவன் கற்பனை அதனை வளர்க்கிறது. அவனது கோடை விடுமுறை நாட்களைத்தனது தாயார் இருக்கும் கிராமத்தில் கழிக்கிறான். அங்கு அவனது மூத்த நண்பன் அப்புவின் சகோதரி நாராயணி, அவனது காதல் கற்பனையைத் தூண்டிவிடுகிறாள். அவளுக்குக் கவர்ச்சியான முகம். அவளது உடம்பு பண்டானஸ் மலரின் நிறத்தில் இருந்தது. ஆனால் அவள் இளம்பிள்ளை வாதத்தால் நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறாள். அதிக நேரம் படுக்கையில் படுத்துக் கிடக்கிறாள். நீந்துவது போல அவள் அசைவாள். ஸ்ரீதரனின் கற்பனையில் அவள் தேவதைக் கதைகளில் வருவதைப் போன்ற கடற்கன்னியாகத் தெரிகிறாள், ஒரு நாள் நாராயணி அவனுக்கு இலஞ்சி மலர்களால் ஆன மாலை ஒன்றைத் தருகிறாள், அன்று படுக்கைக்குப் போகும்போது அவன் அந்த மலர் மாலையைத் தல்லயணைக்கு அடியில் வைத்துக் கொள்கிறான். கனவு காண்கிறான். அவன் அரச குமாரனாகப் கப்பலில் பயணம் போகிறான். ஒரு கடற்கன்னி அவனைக் கடலின் ஆழத்துக்கு இழுத்துக் கொண்டு செல்கிறாள். அவளுடைய பொற்கரங்களால் அவனது கழுத்தைக் கட்டிக் கொள்கிறாள். சரசமாடுகிறாள்... பறவைகளின் சத்தம் கேட்டு அவன் கண் விழிக்கிறான். அந்த இலஞ்சிப்பூ மாலைதான் கனவுக்குக் காரணம் என்று பிறகு தெரிகிறது. ஓர் ஆண்டுக்குப் பிறகு நாராயணி இறந்து போகிறாள். அவளது பள்ளி வயதுக் காலத்தில் ஸ்ரீதரன் மற்றொரு பள்ளியில் படித்துக் கொண்டிருந்த ஒரு பெண் மீது காதல் கொள்கிறான். காதல் கடிதம் ஒன்றை அவளுக்கு எழுதுகிறான். அது

அவளது பெற்றோருக்குத் தெரியவந்து அவன் அவமானப்படுத்தப்படுகிறான். சிலமாதங்கள் கழித்து ஒரு நாள் தைரியமாக ஒரு பெண்ணை முத்தமிடுகிறான். அப்போது அந்தப் பெண் சட்னி அரைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்குப் பயமும் வெட்கமும் மேலிட, அவனைத் தடுக்கும்போது சட்னியை அவன் கண்களில் தெளித்து விடுகிறாள். முத்தமிடுவதற்கு முன்பு காதலால், அவன் உடம்பு எரிந்தது. ஆனால் அதன் பின்போ வீசப்பட்ட சட்னியில் இருந்த மிளகாய்க் காரத்தால் அவன் கண்கள் எரிகின்றன. ஒரு ஐயங்காரின் விதவைச் சகோதரி சரஸ்வதியும், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி மாணவி அம்முக்குட்டியும் அவனது காதல் உணர்வைத் தூண்டிவிடுகின்றனர். ஜப்பானிய பெண் எம்மா என்பவளுடன் சுவிட்ஜர்லாந்தில் அவனுக்கு ஏற்பட்ட சந்திப்பு அவனது காதல் அனுபவங்களுக்கு முத்தாய்ப்பு வைப்பதாக அமைகிறது. இந்தக்கடைசிக்காதலில் பெண்மேலோங்கியும் ஆண் நழுவிச் செல்பவனாகவும், பிறகு விடுபடுபவனாகவும் அமைகிறார்கள். ஸ்ரீதரன் புறநகர்ப்பகுதியில் வசித்தாலும் விடுமுறைகளைத் தன் தாயாரின் கிராமத்தில் செலவிடுகிறான். நகரத்துச் சுழல் காற்று அவனை வளைத்துக் கொண்டிருந்தாலும், அவன் கிராமப்புறச் சூழ்நிலையிலும், கதைகளிலும் மூட நம்பிக்கைகளிலும் இழுத்துச்செல்லப்படுகிறான். நகரத்தில் அவன் இரவில் ஊர்சுற்றும் கோஷ்டியில் ஒருவனாகச்சேர்கிறான். அவர்கள் கோழிக்கறி விருந்து சாப்பிட்டுவிட்டு இரவில் ஊர்சுற்றுவார்கள். சும்மா இருப்பார்களா? சில விஷமங்களும் செய்வார்கள். வீடுகளில் இருக்கும் நாட்காட்டிகளை மாற்றுவார்கள். தெருவிளக்குகளில் இருக்கும்திரியைப் பெரியதாக ஏற்றிவிடுவார்கள். தோட்டங்களில் இருக்கும் செடிகளைப் பிடுங்கி எறிவார்கள். ஸ்ரீதரன் தன் தாய் வீடு இருக்கும் கிராமத்தையே பெரிதும் விரும்புகிறான். அப்பு அவனுக்குப் பறவைகள், செடிகள் பற்றிய கதைகளைக் கூறுகிறான். வில், அம்பு, மூங்கில் துப்பாக்கி என்பதாகப் பல பொருள்களைச் செய்யக் கற்றுத் தருகிறான். ஸ்ரீதரன் புல்மேடுகள் அன்றி மலைமீது ஏறும் போதெல்லாம் அவனது மனம் நிலா வெளிச்சத்துக் கற்பனைகளில் மூழ்கிப்போய்கிடக்கிறது.

இது மாதிரியான பல தரப்பட்ட அனுபவங்கள் ஒரு கற்பனை

எழுத்தாளரை வளர்கின்ற படிகள். ஸ்ரீதரன் கவிதை இயற்றும் ஆவலைத் தனது தந்தை கிருஷ்ணன் மாஸ்டரிடம் இருந்து பெறுகிறான். அவனது தந்தை புகழ் வாய்ந்த ஆங்கில ஆசிரியர். வடமொழியில் வல்லுநரும் கூட. தனது பள்ளி நாட்களிலேயே அவன் கவிதை எழுதத் தொடங்குகிறான். தனது ஆரம்ப காலத்தில் தனது கவிதைகளைப் பத்திரிகைகளில் வெளியிடுவதில் வெற்றி பெறாமல் போகிறான். பிறகு அவனுக்கு இரு பத்திரிக்கை ஆசிரியர்களின் தொடர்பு ஏற்படுகிறது. அதிலிருந்து, பிரசுரம் ஆவதற்குத் தரமான எழுத்து மட்டும் முக்கிய மில்லை என்பதை அறிந்து கொள்கிறான். ஒரு சிறுகதை எழுத்தாளரின் அறிமுகம் கிடைக்கிறது. ஆனால் அவர் மிகுந்த மதிப்பும் மரியாதையும் திடீரென்று மாறிவிடுகின்றன. ஏனென்றால் புதிய பல நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பல காட்சிகளை, புதிய உத்திகளில் அந்த எழுத்தாளர் எழுதியிருந்தார். புதினம் ஸ்ரீதரனின் ஆரம்ப நாட்களையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. அவன் ஒரு கலைஞனாக வெற்றி பெறுவதைக்கொண்டு அவனைப் பற்றி ஒரு முடிவும் யாரும் பெறமுடிவதில்லை. கதாசிரியர் ஒரு கதாநாயகன் கவிதைத்திறன்பெறுவதையும், அவனது கற்பனை உள்ளத்தையும், உண்மைகளைப் பார்க்கும் விதத்தையுமே காட்டியிருக்கிறார்.

கதை நடைபெறும் இடமான அதிராணிப்பாடம் ஒரு பணக்காரர்கள் வசிக்கும் வட்டாரம் அல்ல. அநேகமாக எல்லாப் பாத்திரங்களும் வேலை செய்பவர்களே. கள் இறக்குபவர்கள், தச்சர்கள், கட்டிடம்கட்டுபவர்கள், சிறு தேநீர்கடை நடத்துபவர்கள், மரம் அறுக்கும் தொழிற்சாலையில் வேலைசெய்பவர்கள் ஆவார்கள். குலூஸ் பரங்கோடன் தான் விளக்குவதையெல்லாம் மிகைப்படுத்திக்கூறுபவன். கிட்டன்ரைட்டர்மற்றொரு வகையான ஆசாமி. அவர் வழக்கமாக ஒவ்வொரு குடும்பமாகச் சென்று அரட்டை அடிப்பவர். அங்கு அவர்களிடம் இதமாகப் பேசிவிட்டு அங்கேயே சாதுர்யமாகப் பகல் சாப்பாட்டையும் முடித்துக் கொள்வார். ஸ்ரீதரனின் சொந்த சகோதரன் குஞ்ஞப்பு. அவன் பாஸ்ராவில் தான் நிகழ்த்திய தீரச் செயல்களைக் கூறிக்கொண்டிருப்பான். பொய்ப் பத்திரங்களைச் சாதுரியமாக எழுதுபவன். ஆண்டி ஓர் இளம் பெண்ணிடம் தகாத முறையில்

நடந்து கொண்டதாக கூறப்பட்ட குற்றத்திற்காகப் போலீஸ்ஸாரிடம் அடிபடும் பாலன். அதிராணிப் பாடத்தில் நடக்கும் எல்லா விஷயங்களையும் நினைவில் வைத்திருக்கும் வேலு - ஆகியோர்தான் இச்சிறு உலகத்தில் காணப்படும் கதாபாத்திரங்களில் முக்கியமானவர்களில் சிலர். குஞ்ஞிக்கேலு மேலன் அதிராணிப் பாடத்திலிருக்கும் பணக்காரர்களில் ஒருவர் இந்தப் பாத்திரம்தான் நன்றாக ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தின் கற்பனைக் கதையில், அவரது ஆடம்பரச் செலவு பற்றிய கதைகளும் அடங்கும். ஒரு நாள் அங்கு நடக்கவிருந்த நாடகம் அரை மணி நேரம் தாமதிக்கப்படுகிறது. ஏன்? அதில் நடிக்கும் நடிகை மீது அவருக்கு அதிகம் மோகம் ஏற்பட்டு விட்டதால் அவளைத் தனது படுக்கை அறைக்கு உடனே கொண்டுபோக அவர் உத்தரவு இட்டு விட்டதுதான் அதற்குக் காரணம். அடுத்து அவர் பணத்தின் மீது அலட்சியம் காட்டும் போக்கு உள்ளவர் என்பதை விளக்குவதாகும். அவர் ஒரு நாள் தனது காதலியின் முன்னால், நூறு ரூபாய் நோட்டு ஒன்றைக் கொளுத்தித் தனது சிகரெட்டைப் பற்ற வைத்தாராம். இதனால் அவரது பொருளாதார வசதி படிப்படியாகச் சீரழிகிறது. தன் நண்பர்களால் கைவிடப்பட்ட அவர் குடித்து விட்டு தெரு ஓரத்தில் படுத்திருந்ததை ஸ்ரீதரன் தனது கல்லூரி நாட்களில் பார்த்திருக்கிறான். அவர் அடிக்கடி மற்றவரிடம் கடன் வாங்குவார். கடன் சொல்லியும் சில வேளைகளில் குடிப்பார்.

''ஒரு தேசத்தின்றெ கத'' பலதரப்பட்ட விஷயங்கள் கொண்ட நூல். அக்கதையில், ஆசிரியரின் கதை சொல்லும் திறனும், உண்மைகளை எடுத்துக்காட்டும் நிதரிசனமும் நன்கு விளக்குகின்றன. கதாநாயகனின் சொந்த அனுபவங்கள், சமூக மாற்றங்களுடன் கலந்து கதையை வெற்றிநடை போடச் செய்கின்றன. ஸ்ரீதரனின் கதை அவனது வட்டாரத்தின் கதையிலிருந்து பிரிக்க முடியாமல் இருக்கிறது.

7

ஆசிரியரின் பிற நூல்கள் தனித்தனியே இங்குக் கூறப்படவில்லை. என்றாலும் அவற்றுள் ''கறாம்ப'', '' கபீனா'',

''குறுமுளகு'', முடிக்கமுடியாமல் நின்றுவிட்ட ''நார்த்அவென்யூ'' போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். '' கறாம்பு'' படிப்பவர்களை ஆப்பிரிக்காவிலிருக்கும் மொம்பாஸாவுக்கு அழைத்துச் செல்கிறது. திகைப்பூட்டும் கறாம்பு பீகத்தின் காதல் கதையை முன்பின் பழக்கமில்லாத ஒருவன், அந்நகரின் சரித்திரப் பின்னணியுடன் கூறுகிறான். முழுநாவலின் பாதி அளவுக்குக் கதை செல்கிறது. இறுதியில் படிப்பவர்கள் திகைக்கும்படியாக, கதை சொல்பவனைப் போலீஸார் தேடும் திருடன் என்று ஆசிரியர் கூறிக் கதையை முடிக்கிறார்.

'' குறுமுளகு'' சமூக அரசியல் நோக்கத்துடன் எழுதப்பட்ட புதினமாகும். வய நாட்டில் நடப்பதாகக்கூறப்பட்டுள்ளது. மாநிலத் தேர்தல் கதாபாத்திரங்களுக்கும் அவர்களது வர்க்கத்தாருக்கும் இருக்கும் உறவைக் காட்டுகிறது. ''கபீனா'' குழந்தைகளுக்காக எழுதப்பட்டு சர்வதேசகுழந்தைகள்ஆண்டில் வெளியிடப்பட்டது. கேரளத்துக்கு மேல்படிப்பு படிக்க வரும் ஓர் ஆப்பிரிக்க பெண்ணைப் பற்றிய கதை அது. அவளது கேரளத்தின் கலாச்சார நினைவுகள் அந்த நூலின் உட்பொருளாகும்.

பொற்றேக்காட் மிகவும் வளர்ச்சியடைந்த நாவலாசிரியர். அவரது ஆரம்ப காலப் புதினங்கள் சிறுகதையை விவரிப்பது போலிருந்தன. ''புள்ளிமான்'', 'ஸ்திரி'' போன்ற கதைகளுடன் ''நாடன் பிரேமம்'', ''பிரேமசிக்ஷ'' போன்றவற்றை ஒப்பிடும்போது இக்கருத்து புலனாகிறது. தனது பிற்காலத்தில் அவர் புது உத்திகளையும் நடையையும் பின்பற்றினார்.

மனிதன் சுற்றுப்புறச் சூழ்நிலை, சமூகத்தின் தாக்குதல்களுக்குக்கட்டுப்பட்டு அவற்றிற்குப் பலியாகிறவன் என்ற கொள்கையை பொற்றேக்காட் உடையவர் எனவே, சுற்றுப்புறச் சூழ்நிலை விளக்கங்கள் அவருடைய கதைகளில் அதிகமாகக் காணப்படும். ஆரம்ப காலத்தில் அவரது கதைகளில் இரண்டு அல்லது மூன்று பாத்திரங்கள் வருவார்கள். சமூகப் பின்னணி கதையின் கருவில் அழுந்தி ஒட்டிக் கொண்டிருக்கும். பிற்காலத்தில் கதாபாத்திரங்கள் சமூகத்தின் பரந்த காட்சிகளில்

மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றனர். பிறகு சமூக உண்மைகளின் வளரும் அனுபவக் காட்சிகள், நிதரிசனமாக்கப்- பட்டிருக்கின்றன. ஒருவர் பொட்டேக்காட்டின் நூல்களைக் காலக் கிரமமாக வரிசைப் படுத்திப் பார்த்தால் விருப்பமான காட்சிகளின் உண்மைத் தோற்றங்களைக் காண முடியும். '' ஒரு தேசத்தின்றெ கத'' என்ற புதினத்தில் கற்பனையின் உச்ச நிலையையும், உண்மை உணர்வையும் சேர்த்து அவர் வழங்கி இருத்தலைக் காணலாம். இந்த இலக்கிய நடையில் அவர் ஓர் உச்ச நிலையைக் காட்டி இருப்பதன் மூலம் தன்னை ஒரு சிறந்த நாவலாசிரியர் என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார். இந்த வெளிப்பாட்டில் அவரது இலக்கிய நடையின் உருவமும் அமைப்பும் காணப்படுகின்றன.

7. மேலோட்டமான கண்ணோட்டம்

படைப்பாளியாகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும், அரசியலில் உயர் லட்சியம் கொள்பவராகவும், பயணம் செய்பவராகவும் விளங்கிய பொட்டேக்காட் சளைக்காத சுறுசுறுப்பில் ஊறிப்போனவர்.

மிகச் சில எழுத்தாளர்களே அவரைப் போன்று அதிகமாகப் பயணம் செய்து, மக்களைக் கவரும் வகையில் எழுதியிருக்கின்றனர். எனவே, அவர் ''கேரளத்தின் ஜான் குன்த்தர்'' என்று கருதப்படுகின்றார். குன்த்தர் தனக்கு வேண்டிய விஷயங்களைச் சேகரிக்கவும் ஒழுங்குபடுத்தவும் செயலாளர்களையும் உதவியாளர்களையும் சம்பளத்துக்கு அமர்த்திக் கொண்டார். ஆனால் பொட்டேக்காட்டோ, தான் ஒருவராகவே இருந்து பிரயாண நூல்களை எழுதினார்.

அவர் பார்லிமெண்ட் இடத்துக்கு ஒருமுறை தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் அவர் உண்மையில் ஓர் அரசியல்வாதியல்ல. அரசியல்வாதியாக வேண்டும் என்ற எண்ணமும் கொண்டவரல்ல. என்றாலும் அவர் இடது சாரிக் கொள்கையுடன் அரசியலில் திட நம்பிக்கை கொண்டிருந்தார். ஓர் எழுத்தாளன்தான் சோதனைக் காலங்களில் நாட்டின்

தலையெழுத்தை நிர்ணயிக்கக்கூடியவன் என்று முழுமையாக நம்பி அதன்படி செயற்பட்டார். ஏழைகளுடனும், அந்நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுடனும் அவர் தாராளமாகப் பழகினார். அவர்களது குறைகளை குறித்து அவற்றை போக்த நடத்தப்பட்ட இயக்கங்களில் சேர்ந்து பணி புரிந்தார்.

அவர் ஒரு படைப்பிலக்கிய எழுத்தாளர். கதைகளுக்கு ஏற்ற எழுத்து நடையை அமைத்தவர்களில் அவர் முன்னோடி. உண்மை நிலவரங்களுடன் கற்பனை வளத்தையும் கலந்து எழுதினார். அதனால் அந்த காலத்தில் அவர் எழுதிய ''புள்ளிமான்'', '' எழிலம்பலா'' போன்ற கதைகளும், ''நாடன் பிரேமம்'', ''மூடுபடம்'' போன்ற புதினங்களும் வாசகர்களிடையே கிளர்ச்சியூட்டும் தாக்கத்தை ஏற்படுத்தன. அவை மலையாள இலக்கியத்தில் கற்பனைக் கதைகளின் சகாப்தத்தில் முக்கிய கட்டங்களாக அமைந்துள்ளன. ''விஷகன்யக'' அவரது புது முயற்சி. அது, இதுவரையிலும் கதா நாயகனைச் சுற்றி எழுதப்பட்டு வந்த கதைகளினின்று வேறுபட்டது. அது ஒரு சமூகத்தாரின் சோகப் பயணத்தின் கதை. அழியாத செய்தி தொகுப்பாகும். இதே மாதிரி செய்தித் தொகுப்பாகப் புதினங்களை எழுதும் உத்தியை அவர் '' ஒரு தெருவின்றெ கத'' விலும் ''ஒரு தேசத்தின்றெ கத'' விலும் கையாண்டிருந்தார், இந்தப் புதினங்கள் அவருக்கு நாட்டின் பெரும் புதினங்கள் படைப்பாளர் வரிசையில் ஓர் உயர்ந்த இடத்தை அளித்தன. இதனால் தனிப்பட்ட மனிதனின் கதையிலிருந்து சமூகத்தின் கதைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது புலனாகிறது. கற்பனையிலிருந்து உண்மைக்கு மாற்றம் ஏற்பட்டது. எனவே, சமூகத்து மனிதன் தனிப்பட்ட மனிதனை மறைக்கும் பாங்கு அவரது பிற்கால நூல்களில் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.

பொட்டேக்காட் எந்தவொரு விஷயத்தையும்விவரமாகக் கூறும் முறையில் நம்பிக்கை உள்ளவர். அவருடைய எழுத்துக்களில் இதைக் காணலாம். உயர்ந்த நடையில் புரியாதபடி எழுதுவதை அவர் சோதனைக்காகக் கூடச் செய்யவில்லை. மறைமுகமாகக் கூறுவதும், இருபொருள் அல்லது குழப்பமான அர்த்தம் கொள்ளும்படி எழுதுவதும், உருவகக் கதை மூலம் விளக்குவதும்

அவருக்கு விருப்பமில்லாத விஷயங்கள். அவர் எதையும் நேரடியாகவும் உடனேயும் சொல்ல முயன்றார். என்றாலும் அவரது எழுத்து நடை ஒரே மாதிரியாக இல்லாமல் பலதரப்பட்டதாக இருந்தது. எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்ப எழுதினார். அவரது குரல் நன்கு ஒலிக்கும்படி எழுதினார். பொருள் எளிதில் விளங்கும்படி எழுதினார். உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால், அவர் கேரளத்து கிராமங்களின் அழகைக் கூறும்போது கவிதை நடையில் எழுதுவார். நகரத்துத் தெருக்களைக் கூறும்போது, ஒரு பத்திரிக்கையாளனின் செய்தித் தொகுப்புப் போன்று எழுதுவார். தனது சக எழுத்தாளர்களான உரூப், பஷீர் போன்று கொச்சையாக எழுத விரும்பாதவர் பொட்டேக்காட். அவர் உரையாடலை எழுதும் போதும்கூட, இடத்துக்கேற்ற கொச்சை வார்த்தைகளை உபயோகித்ததில்லை. மாறாக உரையாடல் இலக்கிய நயம் கொண்டதாக இருக்கும். அவர் எப்போதும் தனது பாத்திரங்கள் மூலம் கூற விரும்புவதை தனது வாசகர்களுக்கு நேரிடையாகவே கூற விரும்பினார்.

பொட்டேக்காட் மனிதத் தன்மை வேரோடிப்போன உயர் கொள்கைவாதத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். மனிதனின் உள்ளத்தின் ஆழத்தில் படிந்திருக்கும் நல்லவற்றில் மிகுந்த நம்பிக்கை பெற்றிருந்தார். அவரது கதாபாத்திரங்கள் மனிதனை மீட்பிக்கின்ற தன்மையைப் பெற்றவை. அவர் காம வயப்பட்ட மனித மிருகங்களையும், குரூரமான கொலையாளிகளையும், துரோகம் செய்யும் பெண்களையும் படம் பிடித்துக் காட்டியுள்ளது உண்மைதான். ஆனால் அக்கதாபாத்திரங்கள் இறுதியில் வாழ்க்கைத் திருப்பங்களில் தங்களது தவறுகளுக்காக வருந்துபவர்களாகவும், , மனமாற்றம் கொண்டவர்களாகவும் மாறிவிடுகின்றனர். ''நாடன்பிரேமம்'' கதையில் நகரத்தைச்சார்ந்த பெரிய பணக்கார வியாபாரி ரவீந்திரன் ஏழைக் கிராமத்துப் பெண்ணை ஏமாற்றிக் கெடுத்து விடுகிறான். அவள் ஒரு குழந்தைக்கு தாயாகப் போவதைக் கேட்டதும், கொஞ்சங்கூட மனச்சாட்சியில்லாமல் கிராமத்தைவிட்டுப் போய்விடுகிறான். அநேக ஆண்டுக்குப் பின் தன் வாலிபத் தவறுக்காக வருந்தி அதற்குப் பரிகாரம் தேட முயல்கிறான். 'ஒரு தெருவின்றெ கத' என்ற

கதையில் வரும் ஓமான்ஞ்சி ஒரு பெண் பித்தன். மற்றவர்களை சுய நலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்பவன். என்றாலும் தனது இறந்துபோன சகோதரியை இளம்பெண் ராதாவின் உருவில் காண்கிறான். அவனது சகோதரப் பாசம் மேலோங்கி நிற்கிறது. அவள் இறந்துவிட்டதுகூடத் தெரியாமல் தான் மரணப்படுக்கையில் இருக்கும்போதும் அவர்களுக்குப் பணம் அனுப்புகிறான். மனிதனுக்குள் உயர்ந்த எண்ணங்கள் இருக்கின்றன. ஆனால் சூழ்நிலை காரணமாக அவன் கெட்டவனாக மாறுகிறான். அவனது அன்பு ஊற்றும் வற்றிப்போகிறது.

பொட்டேக்காட் வாழ்க்கையின் எதிர் மாறுதல்களையும், முரண்பட்டது போன்ற உண்மைகளையும், அர்த்தமில்லாத அசட்டுத்தனங்களையும் ஒப்புக்கொண்டவர். என்றாலும் அவர் ஒரு கபடமில்லாத நன்னம்பிக்கை கொண்டவர் அல்லர். அவர் தீவிரமான துக்கமயமான கதைகளையும், அதேபோல் அதீத சந்தோஷக் கதைகளையும் எழுதியிருக்கிறார். அவர் வாழ்க்கையை சமநிலைக் கண்ணோட்டம் கொண்டு பார்ப்பவர். அவருக்கு வாழ்க்கை இருண்டதும் அல்ல, மிகவும் பிரகாசமானதும் அல்ல. என்றாலும் அவர் மனித முயற்சியைப் பாராட்டி எழுதத் தவறவில்லை. அதேபோல் மனிதன் தன்னைத் திருத்திக் கொள்ளும் தன்மையையும் பாராட்டியுள்ளார்.

''ஒரு தேசத்தின்றெ கத'' என்ற கதையில் வரும் கோபாலேட்டன் தனது கடைசிக் காலத்தில் துறவி மாதிரி ஆகிவிடுகிறார். ஓர் இரவு அவன் ஸ்ரீதரனிடம் பின் வருமாறு கூறுகிறான். ''கடவுள் என்று ஒருவர் இருந்தாலும் அவர் தூரத்தில் உள்ள நாட்டில் இருக்கிறார். நீ அவரிடம் பேசினாலும் அவருக்குக் கேட்காது. ஆனால் உனக்குள் இருக்கும் ஒன்று உன்னுடன் எப்போதும் பேசுகிறது. நீ சொல்வதைக் கேட்கிறது. உனக்கு வழிகாட்டுகிறது. உன்னைப் பதமாக்குகிறது. அதுதான் உன் மனச்சாட்சி. அதனுடன் பேசு. அது சொல்வதைக் கேள்''. இந்த வார்த்தைகள்தான் கதாசிரியரின் வாழ்க்கைக் கண்ணோட்டத்துக்குக் கருப்பொருள்.

பொட்டேக்காட்டின் மனிதன், சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் பண்பாளன். இக்கொள்கை எந்த மதக் கோட பாடுகளிலும் காணப்படவில்லை. அவர் மனிதனின் பிரச்சினை களை சமூக உண்மைகளுடன் இவ்வுலகுக் குரியவையாக அலசிப்பார்க்கிறார்.

பொட்டேக்காட்டின் படைப்புகளில் கலை வாழ்க்கை பற்றிய அவரது கருத்துகள் பரந்து கிடக்கின்றன. அவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றவற்றை எழுதாவிட்டாலும், இலக்கியம் பற்றிய உறுதியான கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் பங்கேற்ற இலக்கியக் கூட்டங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றில் அவர் பேசிய பேச்சுக்களிலிருந்து நாம் அவரைத் தெரிந்து கொள்கிறோம்.

மிகவும் கௌரவமான ஞானபீடப் பரிசுப் பெற்றபோது அவர் பேசிய பேச்சு மற்றெல்லாப் பேச்சுக்களைக்காட்டிலும் முக்கியமானதாகும். உண்மையான சிறந்த இலக்கியம் என்பது மனிதனின் உள்ளே இருக்கும் உயர்ந்த எண்ணங்களை வளரச்செய்து சமூகத்தின் உயர்ந்த கோட்பாடுகளை அணைத்துக் கொள்வதுதான் என்பதே அவரது கூற்று. அதே உணர்வுமூலம் மனிதனுக்குள் உறங்கிக் கிடக்கும் உயர்ந்த தன்மைகளை வெளிக்கொணர்ந்து அதன் மூலம் மக்களையும் உலகத்தையும் அன்பு, பாசம், சமத்துவம், கலாச்சாரம் முதலியவற்றால் இணைப்பதே இலக்கியமாகும் என்பது அவரது வாதமாகும்.

இந்தியாவில் கலாச்சாரப் பாரம்பரியம் பற்றிக் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதை அவர் உணர்ந்தார். அவர் காலத்து மலையாளப் படைப்புகளில் காணப்பட்ட நடையில் அவர் நம்பிக்கை கொள்ளவில்லை. இலக்கியம் விலையில்லாப் பொருளாகக் கடைத் தெருவில் விற்கப்பட்டது. குற்றங்கள், கற்பழிப்புகள், பால் உணர்வு மயக்கங்கள் முதலியவையே படிப்போரைக் கவர்ந்தன. ஏழ்மைத்தனம், சுற்றுப்புறச் சூழ்நிலை கெடுதல், ஜனத்தொகைப் பெருக்கம் ஆகிய மூன்றும் தற்போதைய நாகரிக உலகை ஆட்டிப்படைப்பதை அவர் கவனித்தார். இதே

போன்று கருத்துச் சூன்யம், பால் உணர்வு மயக்கத்தால் கெட்டுப் போதல், தரமற்ற படைப்புகளை அதிகமாக உற்பத்தி செய்தல் ஆகியவை இலக்கியத்தை அழிவுப் பாதையை நோக்கி அழைத்துச் செல்கின்றன.

காலம் சரியான அமைப்பில் இல்லை. சமூகத்தில் ஏற்படும் மாறுதல்கள் அவரைப் பாதித்தன. அவரது நகரத்திலேயே அவர் அன்னியராக்கப்பட்டார். ''ஒரு தேசத்தின்றெ கத'' என்ற அவரது சுய சரிதப்படைப்பில் ஸ்ரீதரன் ஜப்பானிலிருந்து வந்ததும், முழுவதும் மாறிவிட்டிருந்த தனது ஊரைப்பார்கிறான். தான் வளர்ந்த இடத்தை அவனால் அடையாளம் காண முடியவில்லை. தெருக்களில் ஜனங்கள் அதிகம் இருக்கின்றனர். அநேக புதுக் கட்டிடங்கள் தோன்றியிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் புது முகங்கள். எல்லாம் செயற்கையாகத் தெரிகின்றன. ஓர் இளம் பையன் ஜீன்ஸ் போட்டுக் கொண்டு மேற்கத்திய இசை மெட்டை வாயால் சீட்டியடித்தபடி, ஒரு கடையில் கோகோ கோலா குடிக்கிறான். இந்தக் காட்சி அது ஒரு புதிய ஊர், புது உலகம் என்பதைத் தெரிவிக்கிறது. அந்தப் பையன் ஸ்ரீதரனுக்குப் பதிலாக அங்கு இருக்கிறான். அவனுடைய கதை அடுத்த தலைமுறையின் கதையாக இருக்கும்.

பொட்டேக்காட் இறப்பதற்குச்சில மாதங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை அவரது நண்பர்களில் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார். அவர்கள்/இருவரும் கூட்டம் நிறைந்த தெருவில் புதுமுகங்கள் தங்களைத் தாண்டிச்செல்வதைக்கவனித்தபடி நடந்து கொண்டிருந்தனர். பிறகு அவர்கள் அங்கிருந்த ஓட்டலுக்குச்சென்று காபி கொண்டு வரும்படிச் சொல்லி விட்டு பழைய காலத்தைப் பற்றிப் பேசினார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் ஓர் இளைஞன் உட்கார்ந்து கொண்டிருந்தான். பில் வந்ததும் அவன் அதைச் சட்டென்று எடுத்துக் கொண்டு பணத்தைக் கொடுத்தான். பொட்டேக்காட், அவன் தனது நண்பருக்கு வேண்டியவன் என்று எண்ணினார். ஆனால் அந்த இளைஞன் இருவருக்கும் புதியவன். ''நம் உலகம் இறந்து விட்டது. இங்கு நாம் இருவரும் அன்னியர்கள்'' என்று ஆழ்ந்த கண்டனத்துடன் பொட்டேக்காட் கூறினார். முன்பின் தெரியாத இளைஞனுடன் ஏற்பட்ட திடீர் சந்திப்பால் அவர்

போயிருந்தார். அவர் சாவின் மூலம் இந்த உலகத்திலிருந்துத் தப்பித்துக் கொண்டார். அல்லது ஒருவர் கூறியபடி ''அந்தப் பயணியின் நீண்ட பகற்காலப் பயணம் இரவுக்குள் சென்றது''.

பொட்டேக்காட்டின் மறைவுக்குப் பின் மலையாளப் புதின இலக்கியத்தின் முக்கியமான சகாப்தம் முடிவுக்கு வந்தது.

அவர் ஒருகாலத்தில் கற்பனைக் கதைகளை எழுதியவராகவும், பிறகு நிதரிசன வாதியாகவும், தனது சுதந்திரத்தையும் தனித் தன்மையையும் காத்துக் கொள்ளும் கலைஞராகவும் இருந்தார். என்றாலும் அவர் கீழ்மட்டத்து மக்களிடம் விருப்பத்துடன் அதிகமாகப் பழகினார். அதே போன்று அவர் ஆர்வத்துடன் ஊர் ஊராகத் தூரதேசங்களில் சுற்றிவந்த போதும், அவரது ஆத்மா கேரளத்தில் தூங்குகிறது.

பொற்றேக்காட்டின் நூல்களின் அட்டவணை

புதினங்கள்:

வல்லிகா தேவி (1937)
நாடன் பிரேமம் (1941)
பிரேம சிக்ஷ (1945)
மூடுபடம் (1948)
விஷகன்யகா (1948)
கறாம்பு (1959)
ஒரு தெருவின்றெ கத (1960)
ஒரு தேசத்தின்றெ கத (1971)
குறுமுளகு (1974)
கபீனா (1979)
நார்த் அவென்யு

சிறுகதைகளின் தொகுப்புகள்:

சந்திரகாந்தம் (1944)
மணிமாளிக (1944)
ராஜமல்லி (1945)
நிசாகந்தி (1945)
புள்ளிமான் (1945)
மேகமாலா (1945)
ஜலதரங்கம் (1946)
வைஜயந்தி (1946)
பௌர்ணமி (1947)
பத்மாகம் (1947)
இந்திர நீலம் (1947)
உறீம்வாருணி (1948)
பிரேத பூமி (1949)
ரங்க மண்டபம் (1949)
யவனிகய்க்கு பின்னில் (1952)
கள்ளிப் பூக்கள் (1954)

வனகௌமுதி (1954)
கனகாம்பரம் (1955)
அந்தர்வாஹினி (1960)
எழிலம் பலா (1962)
வ்ருந்தாவனம் (1968)
காட்டு செண்பகம் (1970)
தெரஞ்ஞெடுத்த கதகள் (1967)
(பெரும்பாலான தொகுப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் தொகுப்பு)

பயணநூல்கள்:

காஷ்மீர் (1947)
யாத்ரா ஸ்மரணகள் (1949)
காப்பிரிகளுடெ நாட்டில் (1951)
சிம்ஹபூமி (1954)
நைல் டயரி (1954)
மலாய நாடுகளில் (1954)
இன்னத்தே யூரோப் (1955)
இந்தோனேஷியன் டயரி (1955)
சோவியத்து டயரி (1955)
பாதிரா சூர்யன்றே நாட்டில் (1956)
பாவித் திவு (1958)
பொஹிமியன் சித்ரங்கள் (1960)
ஹிமாலய சாம்ராஜ்யத்தில் (1967)
நேப்பாள் யாத்ர (1969)
லண்டன் நோட்புக் (1970)
கெய்ரோ காதுகள் (1974)
கிளியோபாட்டராயுடெ நாட்டில் (1977)
(இவையெல்லாம் சேர்த்து மூன்று தொகுப்புக்களாக்கப் பட்டுள்ளன.)

கவிதை:

பிரபாத காந்தி (1936)
சஞ்சாரியுடெ கீதங்கள் (1947)
பிரேம சில்பி (1948)

நாடகம்:

அச்சன் (1943)
அச்சனும் மகனும் (1948) ஹிமவாகினியில் இணைக்- கப்பட்டுள்ளது.
அல்தாரா (1954) வளகௌமுதியில் இணைக்கப்பட்டுள்ளது

வானொலி நாடகம் :

தீவண்டி ஓடுன்னு (1954) கள்ளிப் பூக்கள் நூலில் இணைக்கப்பட்டுள்ளது;வானொலி நாடகம்.

உரைநடை: கட்டுரைகள்: நினைவு நூல்கள்:

பொந்தக்காடுகள் (1947)
கத்யமேகல (1949)
என்றெ வழியம்பலங்கள் (1975)
சம்சாரிக்குன்ன டயரிக் குறிப்புக்கள் (1981)

பொட்டேக்காட் பற்றிய நூல்கள் :

பொட்டேக்காட்பற்றிப்புத்தகஉருவில்விவரங்கள் இதுவரை வெளிவரவில்லை. இரண்டு ஆய்வுத் தொகுப்புகள் கட்டுரைகள், மதிப்புரைகள் ஆகியவற்றைக் கொண்டளவாக அண்மையில் வெளிவந்துள்ளன.

அவை:

ஏ.பி.பி. நம்பூதிரி (தொகுப்பு)
''எஸ்.கே. பொட்டேக்காட் (1982)
ஜார்ஜ் இரும்பயம் (தொகுப்பு) '' பொட்டேக்காட்: வ்யக்தியும் சாஹித்ய காரனும்'' (1984)

நேர்முகப் பேட்டிகள்:

டி.என். ஜெயசந்திரன் - ''கதயுடெ பின்னில் கத'' 1975) இதில் மற்ற புகழ்வாய்ந்த மலையாள எழுத்தாளர்களில் பேட்டிகளும் அடங்கும்.
ஸி.பி. சிவதாசன் '' ஆன் இன்டர்வியு வித் எஸ்.கே. பொட்டேக்காட்'' - மலையாளம் லிட்டரரி சர்வே - தொகுதி 3 - 4 (ஜூலை) - டிசம்பர் (1981)

தற்போது நடைபெறும் ஆராய்ச்சி :

பி. முரளிதர் ஆராய்ச்சிமாணவர், கள்ளிக்கோட்டை பல்கலைக்கழகம் - 673 635 '' சோஷல் பெர்ஸ்பெக்டிவ்ஸ் இன் பொட்டேக்காட் நாவல்ஸ்''

விளக்கக் குறிப்புகள் :

மலபார் கேந்திரா கலா சமிதி :

நாடகத்துக்காக அர்ப்பணித்துக்கொண்ட நிறுவனம் வி.எ. அப்துல்லா, அப்துல் ரஹ்மான், திக்கோடியன் ஆகியோர் அதனைத் தோற்றுவித்த உறுப்பினர்கள்.

சாஹித்ய பிரவர்த்தக சஹகரண சங்கம்

1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எழுத்தாளர் கூட்டுறவு சங்கத்தாரால் கோட்டயத்தில் நிறுவப்பட்டது. எம்.பி. பால் அதன் தலைவர், காரூர் நீலகண்டப் பிள்ளை அதனுடைய செயலாளர்.

சபரிமலா :

திருவாங்கூரில் ஐயப்ப ஸ்வாமியின் கோவில் இருக்கும் மலை. ஒவ்வோர் ஆண்டும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு சென்று சேவிப்பர்.

வைத்திரி ரோடு :

வடக்கு மலபாரில் வயநாட்டில் மலைப் பகுதியில் பல திருப்பு முனைவளைவுகளைக் கொண்ட பாதை.

எஸ். கே. பொட்டேக்காட் *(1913-1982)* மலையாள இலக்கியத்தில் இணையற்ற அபூர்வமான சிறுகதை எழுத்தாளராகவும், நாடக ஆசிரியராகவும், நாவலாசிரியராகவும் கவிஞராகவும் விளங்கினார். அவரது பயண நூல்கள், சிறுகதைகள், சொந்த அனுபவங்கள், ருசிகரமான செய்திகள் ஆகியவை கலந்து புதுமையுடன் காணப் படும். பொட்டேக்காட்டின் நாடகங்கள் அவரது சிறுகதைகளின் வழி. வந்தவையாக இருக்கின்றன.

ஆர். விஸ்வநாதன் இந்நூலின் ஆசிரியரான இவர் கள்ளிக் கோட்டை பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பிரிவில் ரீடராக இருக் கிறார். அவர் மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கவிஞராக விளங்குகிறார். விமர்சகரும் கூட. அவரது கவிதைகள், கட்டுரைகள் முதலியன இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள மலையாளம் மற்றும் ஆங்கில மொழிப் பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ளன.

சைதை சுந்தரமூர்த்தி இந்நூலை திறம்பட தமிழாக்கம் செய் துள்ளார்.

Pottekkatt (*Tamil*) Rs. 25/-
ISBN-81-7201-541-0

அச்சிட்டோர்: விஸ்வாலயா, பெங்களூர் - *560038*